திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஆகஸ்ட் 2024,
விலை ரூ.20/-

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:4, Issue:01, Pages:56
AUGUST-2024, Price Rs.20/-



ப்ரஸீத மே மஹாலக்ஷ்மி! ஸுப்ரஸீத மஹாசிவே ।
அசலா பவ ஸம்ப்ரீத்யா ஸுஸ்திரா பவ மத்க்ரு ஹே ।।

வரலக்ஷ்மி விரதம் : 16-08-2024



19-06-2024 முதல் 21-06-2024 வரை திருமலையில் திருமலைப்ப ஸ்வாமிக்கு நடைபெற்ற ஜ்யேஷ்டாபிஷேகத் திருக்காட்சிகள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். தம்பதியினர்



17-06-2024 முதல் 21-06-2024 வரை திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தின் அருகில் அமைந்துள்ள பத்மசரோவரத்தில் (திருக்குளத்தில்) நடைபெற்ற தெப்போத்ஸவத் திருக்காட்சிகள்



27-06-2024 முதல் 29-06-2024 வரை திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தில் கொலுவீற்றிருக்கும் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமிக்கு நடைபெற்ற அவதாரோத்ஸவத் திருக்காட்சிகள்



*யம் ஹி ந வ்யத$_2$யந்த்யேதே*
*புருஷம் புருஷர்ஷப$_4$ ।*
*ஸமது$_3$:க$_2$ஸுக$_2$ம் தீ$_4$ரம்*
*ஸோம்ருதத்வாய கல்பதே ॥*



புருஷர்களில் சிறந்தவனே! சுக துக்கங்களைச் சமமாக ஏற்கின்ற எந்த தீரனான மனிதனை, புலன்கள் மற்றும் போக விஷயங்களின் சேர்க்கை கலங்க வைப்பதில்லையோ, அவன் மோட்சத்திற்குத் தகுதி பெறுகிறான்.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–15*



*மத்தளம்கொட்ட வரிசங்கம் நின்றூத*
*முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்தபந்தற்கீழ்*
*மைத்துனன்நம்பி மதுசூதன்வந்து என்னைக்*
*கைத்தலம் பற்றக் கணாக்கண்டேன் தோழி!*
*நான்.*

தோழியே! மத்தளங்கள் முழங்கிட, இருவரிகளுடைய சங்குகளை நீண்ட நேரம் ஊதும் மைத்துனன் முறைமையுடைய கண்ணபிரான் முத்துகள் நிறையப் பதியப் பெற்றுள்ள மாலைத் திறள்களைத் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழே வந்திருந்து என் கைகளைப் பற்றியருளும் நிலையில் நான் கனவு கண்டேன்

*- கோதா தேவி*

## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

- **"ஸப்தகிரி"** திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் சமய மாத இதழ்.
- **"ஸப்தகிரி"** இதழில் பல ஆன்மீகத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.
- **"ஸப்தகிரி"** இதழ் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வெளிவருகின்றன.
- **"ஸப்தகிரி"** இதழின் ஆண்டுச்சந்தா ரூ.240/-, ஆயுள் சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள் மட்டும்), அயல்நாட்டுச் சந்தா ரூ.1,030/-
- **"ஸப்தகிரி"** இதழிற்கான சந்தாவினை டி.டி., இ.எம்.ஓ., ஐ.பி.ஓ. மற்றும் இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in) வாயிலாக அனுப்பலாம்.
- **"ஸப்தகிரி"** இதழிற்கான சந்தாவினை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு வரைவோலை எடுத்து, "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக்கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517507" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- **"ஸப்தகிரி"** சந்தாதாரர்கள் தங்களுடைய பெயர், முகவரி, அஞ்சல் எண், கைபேசி எண், தேவையான மொழி முதலியவற்றை சரியாக குறிப்பிடவும்.
- **''ஸப்தகிரி''** இதழ் குறித்த காலத்தில் கிடைக்கப் பெறாதவர்களும், முகவரி மாற்றம் செய்ய வேண்டியவர்களும் "chiefeditortpt@gmail.com" எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
- மேலும் தகவல்களுக்கு "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி - 517 507" எனும் முகவரியில் அலுவலக பணி நாட்களில் நேரில் அணுகலாம்.

அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியில் திருமலையப்ப ஸ்வாமியைத் தரிசியுங்கள்




மேலும் தகவல்களுக்கு **0877-2264543, 2264359**



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஆகஸ்ட் 2024

மலர் 04
இதழ் 01

## உள்ளுறை

பக்கம்

கண்ணன் வந்தான்... -திரு.சி.ஸ்ரீதரன், சாத்தூர். 7

திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம்: வைணவன் இப்படியல்லவா இருக்க வேண்டும் 9
-பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

ஹயக்ரீவம் உபாஸ்மஹே - திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா. 13

சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: நாக சதுர்த்தி கருட பஞ்சமி
- படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. 16

அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: பாரதத்தில் ஒரு தசரதன் – பாண்டு 18
- திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.

பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் -திரு.எம்.எஸ். சுகுமார், சென்னை. 21

உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் 24
- டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி.

வரலக்ஷ்மி விரதம் -திரு.எஸ்.ராமதாஸ், புதுச்சேரி. 31

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். 34

108 திவ்வியதேச வைபவம் : திருப்பவளவண்ணன் 37
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

ஆயுர்வேதம் : தாய்ப்பால் -திருமதி வி.உஷா, திருப்பதி. 39

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : இராமாநுஜர்
- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. 40

ஏகாதசி விரத வழிபாடு - திரு.கிருஷ்ண துளசி, சென்னை. 42

நவக்கிரக தோஷம் போக்கும் சக்கரத்தாழ்வார் 44
-திரு.இரா.சுரேஷ், தஞ்சாவூர்.

ராசிபலன்கள் : ஆகஸ்ட் 2024 -டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். 46

நீதிக்கதை : உயிரைக்காத்த துளசி 47
-திரு.அசோக்ராஜா , அரவகுறிச்சிப்பட்டி.

சிறுவர் உலகம் : பல்சுவை பகுதி 49

சித்திரக்கதை : முன்னோக்கு பார்வை மிக அவசியம் 52

சிறப்பு ஆசிரியர் :
திரு. J. சியாமளா ராவ், ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. P. ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ஸ்ரீபத்மாவதி தாயார், திருச்சானூர்.

பின்னட்டை : ஸ்ரீகிருஷ்ணர் (சித்திரம் – திரு.பாலாஜி ஸ்ரீநிவாசன்,சென்னை)

உங்களுடன்



# மங்கையர்க்கான மகா[வர]லக்ஷ்மி விரதம்!

இன்றைய உலகில் அனைவருக்கும் மிக இன்றியமையாததும் தேவைப் படுவதும் பொருளாகும். பொருளில்லையெனில் இவ்வுலகில் நிரந்தரம் இன்பம் இல்லை என்றே கூறலாம். அதோடு மறுபிறவியிலும் இன்பத்தை அளிக்கக்கூடிய புண்ணியமும் வந்து சேர்வதில்லை. புகழும் கிடைப்பதில்லை. நினைத்ததை முடிப்பதற்கான சக்தியுமின்றி நற்கதி அடைவதற்கான வழியும் இருப்பதில்லை. இதனை வள்ளுவர் பெருந்தகையும் *"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு"* என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அறிவுறுத்தி சென்றுள்ளார்.

இந்த பொருட் செல்வத்தை வழங்கக்கூடியவள் மகாலக்ஷ்மித் தாயாரே ஆவார். அனைத்து நற்பேறுகளையும் பெற வேண்டுமெனில் மகாலக்ஷ்மித்தாயாரின் அருள் இருந்தால் மட்டுமே பெற முடியும் என்பது திண்ணம். ஆதிசங்கரர் ஏழை பெண்மணிக்கு செல்வம் கிடைத்திட மகாலக்ஷ்மித் தாயாரை வேண்டி "கனகதாரா ஸ்தோத்திரம்" பாடி தங்க நெல்லிக்கனியை மழையாகப் பொழிந்திட வைத்தார். வேதாந்த தேசிகரும் மகாலக்ஷ்மித் தாயாரைப் போற்றி "ஸ்ரீஸ்துதி" பாசுரங்களால் பொற்காசு மழையைப் பொழிந்திட வைத்தார். 13ஆம் நூற்றாண்டில் துங்கபத்திரா நதிக்கரையில் ஏழைகளான ஹரிஹரர், புக்கர் சகோதரர்களால் விஜய நகர சாம்ராஜ்யம் ஏற்பட வித்யாரண்ய தீர்த்தர் மகாலக்ஷ்மித் தாயாரின் அருளினால் பெற்ற பொருட்செல்வமே காரணமாகும். இவ்வாறாக ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் பொருட் செல்வத்தினை பெற்றிட மகாலக்ஷ்மித் தாயாரின் இன்னருள் இன்றியமையாததாக அமைகின்றது.

அதேபோன்று கிழமைகளில் வெள்ளிக்கிழமை மிக மங்கலகரமான நன்னாளாகும். மற்ற நாட்களைக் காட்டிலும் வெள்ளிக்கிழமையானது புனிதம் நிறைந்த நன்னாளாகத் திகழ்கின்றது. எந்த ஒரு நற்செயலையும் வெள்ளிக் கிழமைகளில் துவங்கினால் அது வெற்றிக்கரமாகவே அமையும். வெள்ளிக்கிழமைதான் மகாலக்ஷ்மித் தாயாருக்கும் உகந்த நாளாகும். பெண்களுக்கு மங்கலத்தை வழங்கிடவே மங்கலகரமான வெள்ளிக் கிழமையும், மங்கலத்தை வழங்கிடும் வரலக்ஷ்மி விரதமும் இணைந்தே வருகின்றன.

அன்பு, புகழ், அமைதி, இன்பம், வலிமை இவ்வைந்தும் மகாலக்ஷ்மித் தாயாரின் அம்சங்கள் ஆகும். ஒரு மனிதனுக்கு இன்ப மயமான வாழ்க்கைக்கு ஆக்கமும், அன்பும், செல்வமும் மகாலக்ஷ்மித் தாயாரின் கருணையினாலேயே கிடைக்கின்றன. அதோடு இன்பம், நோயற்ற வாழ்வு, அறிவு, செல்வம், தானியம், வெற்றி, பொருள் என இவற்றின் அடையாளமாகவும் மகாலக்ஷ்மித் தாயார் விளங்குகின்றார்.

இவ்வாறாக அனைத்துமாகத் திகழும் மகாலக்ஷ்மித் தாயாருக்கு பெண்கள் அனைவரும் விரதம் அனுஷ்டிக்கும் திருநாள்தான் வரலக்ஷ்மி விரதமாகும். இந்நாளில் திருமணமானப் பெண்கள் கணவன் நல்ல ஆரோக்கியத்துடன் விளங்கிடவும், கன்னிப் பெண்கள் நல்ல கணவன் கிடைத்திடவும் விரதம் மேற்கொள்வர். ஆண்களும் கூட நல்ல ஆரோக்கியம், செல்வம் பெற்றிட இவ்விரதத்தைக் கடைபிடிப்பர்.

திருமாலின் திருமார்பே திருமகளின் வசிப்பிடம். அத்திருமார்பில் அமர்ந்து பரந்தாமனின் பரத்தத்துவத்திற்கு அடையாளமாக விளங்குகின்றாள் தாயார். பரம்பொருளின் ஏற்றத்திற்கு ஒளிவிளக்காய் இருக்கும் அத்தாயாருக்கு *"வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு"* என்று பெரியாழ்வார் பல்லாண்டு பாடுகின்றார். எனவே, நம் இல்லத்தினை வளமாக்கி, நற்பலன்களை அளிக்கும் இவ்விரதத்தினை கடைபிடித்து மகாலக்ஷ்மித் தாயாரின் இன்னருளைப் பெற்று மேன்மேலும் செழித்திடுவோம்.

## கிருஷ்ணர் அவதார வரலாறு

மஹாவிஷ்ணு கிருஷ்ணராக அவதரித்த திருநாள் ஆவணி மாதம், ரோகிணி நட்சத்திரம், அஷ்டமி திதியாகும். மதுரா நகரில் தேவகி – வாசுதேவருக்கு எட்டாவது மகனாக கிருஷ்ணர் அவதரித்தார். சிறைச்சாலையில் பிறந்த கிருஷ்ணர், கோகுலத்தில் யசோதையால் வளர்க்கப்பட்டார். கம்சனை அழித்து துவாரகையை ஆண்டார்.

## கண்ணா, முகுந்தா...

தனக்காக இல்லாமல் பிறருக்காக வாழ்ந்ததால் “கண்ணா, முகுந்தா” என ஸ்ரீகிருஷ்ணரை அழைக்கிறோம். கண்ணன் என்றால் கண்ணைப் போல் காப்பவன் என்றும், முகுந்தா என்றால் வாழ்வதற்கு இடம் அளித்து, முக்தி அளிப்பவன் என்றும் நம்புகிறோம்.

## இல்லத்தில் கிருஷ்ணர் திருவடி எதற்கு?

கிருஷ்ண ஜெயந்தி தினத்தில் பகவான் கிருஷ்ணர் நம் வீட்டிற்கு வந்து அருள் பாலிப்பதே கோகுலாஷ்டமியின் முக்கிய அம்சமாகப் பார்க்கப்படுகிறது. கிருஷ்ண ஜெயந்தி அன்று வீட்டைச் சுத்தம் செய்து, அரிசி மாவால் கோலம் இட்டு, மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கிறோம். வாசலில் தொடங்கி பூஜை அறை வரை கண்ணனின் திருப்பாதத் தடங்களை அரிசி மாவால் பதிக்கிறோம். ஆலிலை கிருஷ்ணன் தனது பிஞ்சுப் பாதங்களை அடிமேல் அடி வைத்து வீட்டுக்குள் தத்தித்தத்தி நடந்து வருவதாக ஐதீகம்.

## கிருஷ்ண ஜெயந்தி விரத முறை

வீட்டின் நுழைவாயிலில் குழந்தை நடந்து வந்தது போன்ற பாதச்சுவட்டினை மாவால் பதியச் செய்ய வேண்டும். கிருஷ்ணர் சிலைக்கு பூக்களால் அலங்காரம் செய்ய வேண்டும். அதில் துளசி இருந்தால் இன்னும் சிறப்பு. கிருஷ்ண ஜெயந்தியன்று பால், தயிர், வெண்ணெய், அவல், பழங்கள் மற்றும் வெண்ணெய் சர்க்கரை கலந்த நவநீதம் என்னும் கலவையை நிவேதனமாகப் படைக்க வேண்டும். வெல்லச் சீடை, உப்புச்சீடை, முறுக்கு, லட்டு, மைசூர்பாகு, தேன் குழல், மனோகரம், திரட்டுப்பால், பர்பி போன்றவற்றையும் படைக்கலாம்.

திருமணமாகி நீண்ட காலமாகியும் குழந்தை இல்லாதவர்கள் கிருஷ்ண ஜெயந்தி அன்று விரதம் மேற்கொள்வது சிறப்பு. தம்பதியர் காலையில் நீராடி விரதத்தைத் தொடங்க வேண்டும். கணவன்– மனைவி இருவரும் தம்பதி சகிதமாகவே விரதம் இருத்தல் வேண்டும். பகலில் விரதம் இருக்க




– திரு. சி.ஸ்ரீதரன், சாத்தூர்,
9677013266.






### துன்பத்தில் காத்த கண்ணன்

♦ கோபியர்களை இந்திரனிடமிருந்து காக்க கோவர்தனமலையை உயர்த்திப் பிடித்து அவர்களைக் காத்தான் மாயவன்.

♦ குசேலரின் வறுமையைப் போக்கியவன் பார்த்தசாரதி தான்.

♦ அஸ்தினாபுரத்தில் பல பேர் நிறைந்த சபையில் பாஞ்சாலி துகில் உரிக்கும் பொழுது கிருஷ்ணனே அவளைக் காத்தான்.

♦ பாஞ்சாலி அனைவருக்கும் உணவளித்து விட்டு அக்ஷய பாத்திரத்தை கவித்த பின்பு துரியோதனன் சூழ்ச்சியால் துர்வாச முனிவர் தர்மரின் இல்லத்திற்கு உணவருந்த வருவார். அந்நேரம் கண்ணனே வந்து உதவுவார்.

♦ குருக்ஷேத்திர போர்க்களத்தில் பாண்டவர்களைக் காத்தன் கோவிந்தன்.

♦ அஸ்வத்தாமன் பிரம்மாஸ்திரத்தைத் தொடுத்து கருவில் இருந்த அபிமன்யுவின் மகனைக் கொல்ல முற்பட்ட போது அச்சிசுவை மீட்டெடுத்தவனும் இந்தக் கண்ணன் தான்.



வேண்டும். இரவில் ஸ்ரீகிருஷ்ணரை பூஜித்து கண் விழித்திருந்து அவரது வரலாற்றை கேட்க வேண்டும். மறுநாள் கிருஷ்ணருக்கு மீண்டும் பூஜைகள் செய்து வழிபாடுகள் நடத்தி அன்னதானம் செய்ய வேண்டும். அதன்பிறகு விரதத்தை பூர்த்தி செய்வது மிகவும் சிறந்தது. "நீ எனக்கு ஒரு இலையைக் கொடு; அல்லது பூவைக் கொடு; இல்லை ஒரு பழத்தைக் கொடு; அதுவும் இல்லையெனில் கொஞ்சம் தண்ணீர் கொடு; எதைக் கொடுத்தாலும் பக்தியோடு கொடு. தூய்மையான மனம் உள்ளவன் பக்தியோடு கொடுப்பதை நான் சாப்பிடுவேன்" என்றார் கீதையில் கண்ணன்.

துன்பம் வரும் நேரத்தில் எல்லாம் நம்மை காத்துக் கொண்டிருப்பவனும் நம் கண்ணன் தான். எனவே அந்தக் கண்ணனின் திருவடிகளைச் சரணடைவோம்.

### கிருஷ்ண ஜெயந்தி விரத பலன்

குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள், புதுமணத் தம்பதியர், கருவுற்றிருக்கும் தாய்மார்கள் தங்களுக்குப் புத்தி, யுக்தி, அறிவு, ஆற்றல், ஆயுள், ஆரோக்கியம் மிக்க புத்திரப் பாக்கியத்தை அருள வேண்டும் என்று அந்த ஆலிலைக் கண்ணனிடம் மனமுருகி பிரார்த்தனை செய்தால், ஜாதகத்தில் உள்ள புத்திர தோஷம், புத்திரத் தடை போன்றவை நிவர்த்தியாகி புத்திர பாக்ய யோகம் கிடைக்கும் என்பது பழங்காலம் தொட்டே இருந்து வரும் நம்பிக்கையாகும்.

ஓவியக்காணிக்கை
முனைவர் பா. கயாத்ரி,
சென்னை.

திங்கள்தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம்

# வைணவன் இப்படியல்லவா இருக்க வேண்டும்



ஆடி மாதம் அற்புதமான மாதம். அதிலும் பூர நட்சத்திரம் வரும் நாள் (07–08–2024) மிக அற்புதமான நாள். அந்த நாளைக் குறித்து மணவாள மாமுனிகள் மிக உருக்கமாக தம்முடைய உபதேச ரத்தின மாலையிலே பதிவு செய்கின்றார்.

*இன்றோ திருவாடிப் பூரம் எமக்காக*
*வன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள்-குன்றாத*
*வாழ்வான, வைகுந்த வான்போகம் தன்னை*
*இகழ்ந்து,*
*ஆழ்வார் திருமகளா ராய்!*

அவதாரம் என்றால் மேலே இருந்து கீழே இறங்கி வருவது. சாட்சாத் பூதேவி நாச்சியாரான ஆண்டாள் – வைகுந்த வான் போகம் வேண்டாம் என்று வெறுத்து, தன் குழந்தைகள் துன்பப்படுகிறார்களே, காப்பாற்ற வேண்டுமே என்ற தாயின் உள்ளத்தோடும், தயாள குணத்தோடும் இந்த பூமியில் நமக்காக வந்து அவதரித்தாள். அப்படிப் பட்ட அவதாரத்தைக் கொடுத்த தினம் ஆடிப்பூரம். அத்திருநட்சத்திர விசேஷத்தை மிக அற்புதமாகக் கொண்டாடுகின்றார் மணவாள மாமுனிகள்.

ஆழ்வார்கள் 12 பேர். அதில் ஒரே ஒரு பெண் பிள்ளை ஆண்டாள். *''பதின்மர் தனமும் ஒருத்தி பக்க விலே சேர்ந்து''* என்று ஆசாரியர்கள் ஆண்டாளின் ஞானத் தமிழை வியந்து அவளை "ஞானப் பூங்கொடி" என்று அழைத்தனர்.

அஞ்சு குடிக்கு ஒரு சந்ததியாய் ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய் பிஞ்சில் பழுத்தவள் அல்லவா! பிஞ்சில் பழுத்த கனி சுவைக்காது என்பார்கள். ஆனால் ஞானத்தில் பூத்த இந்த பூங்கொடியின் தமிழ் தித்தித்தது. திசை எல்லாம் வாழ வைத்தது. எம்பெருமானின் பெருமையை அற்புதமாக பறைசாற்றியது. பூமாலையைச் சூடிக் கொடுத்ததோடு இன்னிசையால் பாடிக் கொடுத்தாள் என்று ஆசாரியர்கள் ஆண்டாளின் அரும் செயலைப் பாராட்டுகிறார்கள்.

ஆண்டாள் நாச்சியார் திருமலையிலே உள்ள வேங்கடவனுக்காக குயிலை நோக்கிப் பாடுகின்ற அருமையான பாசுரம் இந்தப் பாசுரம்.

*வெள்ளை விளிசங் கிடங்கையிற் கொண்ட*
*விமல னெனக்குருக் காட்டான்*
*உள்ளம் புகுந்தென்னை நைவித்து நாளும்*
*உயிர்பெய்து கூத்தாட்டுக் காணும்*
*கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக்*
*களித்திசை பாடும் குயிலே!*
*மெள்ள விருந்து மிழற்றி மிழற்றாதென்*
*வேங்கட வன் வரக் கூவாய்*

– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963.

**கள் அவிழ்** – தேன் பெருகும், **செண்பகப் பூ** – செண்பகப் பூவிலே, **மலர்கோதி** – (அஸாரமான அம்சத்தைத் தள்ளி) ஸாரமான அம்சத்தை அநுபவித்து களித்து (அதனால்) ஆனந்தமடைந்து, **இசை பாடும் குயிலே** – (அந்த ஆனந்தத்திற்குப் போக்குவீடாக) இசைபாடும் குயிலே, **வெள்ளை விளி சங்கு இடங்கையில் கொண்ட** – சுத்தஸ்வபாவமாய் (கைங்கர்ய ருசி உடையாறை அழைக்குமதான) வெண் சங்கை இடக்கையிலே ஏந்திக் கொண்டிருக்கிற, **விமலன்** – பவித்ரனான பரமபுருஷன், **உரு** – தனது திவ்யமங்கள வடிவத்தை, **எனக்கு காட்டாமல்** – (அதுவுமல்லாமல்) **உள்ளம்** – என்னுடைய இதயத்தில், **புகுந்து** – வந்து புகுந்து என்னை, **நைவித்து** – என்னை நைந்து போம்படி செய்து (அவ்வளவிலே நான்முடிந்து போவதாயிருந்தால் இன்னமும் என்னை துன்பப்படுத்த நாளும் உயிர்ப் பெய்து நாள்தோறும் பிராணனைப் பெருக்கடித்து கூத்தாட்டு காணும் என்னைத் தத்தளிக்கச் செய்து வேடிக்கை பார்க்கும் அவனிடம் நின்றான் (நீ செய்ய வேண்டியதென்ன வென்றால்), **இருந்து** – என் அருகில் இருந்து கொண்டு, **மெள்ள மிழற்றி** – மிழற்றது உன் மழலைச் சொற்களைச் சொல்லி விளையாட்டு காட்டாமல், **என் வேங்கடன் வர** – எனக்காகத் திருவேங்கட மலையிலே வந்து நிற்கிற எம்பெருமான் (இங்கே) வரும்படியாக, **கூவாய்** – கூப்பிட வேணும்.











## திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்

**திருமலை திருத்தலத்தில் வருடம் முழுவதும் தெரிந்தோ, தெரியாமலோ நடக்கும் தவறுகளுக்கு பரிகாரமாக சிராவண மாதம் (தமிழில் ஆவணி) மூன்று நாட்கள் நடைபெறும் உத்ஸவம் பவித்ரோத்ஸவம் ஆகும். இந்த உத்ஸவத்தில் திருவேங்கடமுடையான், ஸ்ரீவராஹ ஸ்வாமி, ஸ்ரீபேடி ஆஞ்சநேய ஸ்வாமி ஆலயங்களில் உள்ள மூலமூர்த்திகள் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு பவித்திர மாலைகள் அணிவிக்கப்படுகிறது. சுமார் 500 வருடங்களுக்கும் மேலாக இந்த உற்சவம் திருமலையில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.**

**இவ்வருடம் 14-08-2024 புதனன்று அங்குரார்ப்பணத்துடன் துவங்கி, 15-08-2024 வியாழன் அன்று பவித்ரங்களைப் பிரதிஷ்டை செய்வர். 16-08-2024 வெள்ளியன்று பவித்ரங்கள் சமர்ப்பணம் நடைபெறும். 17-08-2024 சனி அன்று பூர்ணாஹுதியுடன் பவித்ரோத்ஸவம் நிறைவு அடையும்.**

மற்ற ஆழ்வார்களுக்கும் ஆண்டாளுக்கும் உள்ள வேறுபாடு அவர்கள் நாயகி பாவத்தை ஏறிட்டுக் கொண்டு பாடுகின்றார்கள். ஆனால் ஆண்டாள் உடலாலும் பெண் பிள்ளையாக இருப்பதால் நாயகி பாவம் மிக இயல்பானதாக இருக்கின்றது.

பெரியாழ்வாரால் ஞானப்பால் ஊட்டி வளர்க்கப் பட்ட ஆண்டாள் மானிடவர்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் என்ற வைராக்கியத்தோடு வாழ்ந்தாள். அவரைப் பிராயம் தொடங்கி ஆதரித்து எழுந்த என் தடமுலைகள் துவாரகைபிரானுக்கு என்றே தொழுது வைத்தேன் என்று உறுதியோடு இருந்தாள். வேங்கடவர்க்கு என்னை விதி என்று அவரையே நினைத்துக் கொண்டிருந்தாள்.

இந்தப் பாசுரத்தில் ***''என் வேங்கடவன்''*** என்ற பதத்தைக் கவனிக்க வேண்டும். எனக்காகத் திருவேங்கட மலையிலே வந்து நிற்கிற எம்பெருமான் என்று ஆசார்யர்கள் பொருள் கொள்கிறார்கள். "பிராட்டியைக் கைப்பிடிப்பதற்காக ஸ்ரீமிதிலையில் புறச்சோலையிலே வந்து தங்கியிருந்தாப்போலே எனக்காகத் திருமலையிலே வந்திராநின்ற பெருமானை இங்ஙனே நாலடி வரும்படியாக நீ கூவ வேணும் என்று வேண்டுகிறாள் என்று அழகான வியாக்கியானம் இந்த இடத்தில் வருகிறது.

ஆயினும் அவன் இவள் உள்ளத்திலே புகுந்து கண்காட்டி வித்தையைக் காட்டிக் கொண்டிருந்தான். அதே நேரம் தன்னை வெளிக்காட்டாமல் அவளை நாளும் சித்திரவதை செய்தான்.

ஆழ்வார்கள் போன்றவர்களுக்கு எது சித்திரவதை என்றால் எம்பெருமானைப் பிரிந்திருப் பதும், அந்தப் பிரிவை நினைத்து தவிப்பதும் தானே... சம்ஸ்லேஷத்தில் (உறவில்) ஆனந்தமும், விஷ் லேஷத்தில் (பிரிவில்) துக்கமும் என்பார்கள். ஆண்டாளோ உயிர் வதைப் பட்டாள். "உள்ளம் புகுந்தென்னை நைவித்து நாளும் உயிர்ப்பெய்து கூத்தாட்டுக் காணும்" என்ற வரியை திரும்பத் திரும்ப வாசித்தால் ஆண்டாளின் உணர்வு புரியும்.

துக்கம், ஆற்றாமை, ஏமாற்றம் என இத்தனை சுமைகளாலும் ஆண்டாள் உயிர் போகவில்லை. அப்படிப் போகும் தருவாயில் எப்படியோ அந்த உயிரைத் தக்க வைத்து (உயிர்ப்பெய்து) மேலும் மேலும் அவள் உள்ளத்தை ஆட்டி வைத்துக் கொண்டிருந்தான்.

இப்படி நாளும் நாளும் அவன் செய்யும் காரியங்களைப் பொறுத்துக் கொள்ள முடிய வில்லை. இன்னும் எத்தனை நாள் தான் இப்படி இருப்பது? தன்னுடைய நிலை அவனுக்குத் தெரியவில்லையா? தெரிந்தும் தெரியாதவன் போல் நடிக்கின்றானா? இதை யார் அவனிடம் சொல்வது?

அப்பொழுதுதான் அங்கே ஒரு குயில் செண்பகப் பூவிலே பெருகுகின்ற தேனின் சுவையான பகுதியை ஆனந்தமாகப் பருகி, அந்த ஆனந்தத்திற்கு போக்குவீடாக இசைப் பாடிக் கொண்டிருந்தது.

குயிலைப் பார்த்து "நீ பாடுவது இருக்கட்டும். நான் படுகின்ற வேதனை உனக்குத் தெரிய வில்லையா?". "நான் உனக்கு என்ன உபகாரம் செய்ய முடியும்?" என்று அந்தக் குயில் திருப்பிக் கேட்க, ஆண்டாள் சொல்கிறாள்.

"நீ வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். என் னுடைய வேங்கடவன் என்னிடத்தில் வரும்படியாக ஓர் வார்த்தை சொல்ல வேண்டும். அதுவும் இப்பொழுது நீ உன் மழலைச் சொற்களைச் சொல்லி விளையாட்டு காட்டுகிறாயே அந்த மாதிரி

**2024, செப்டம்பர் மாதப்**
**பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்**

| | |
|---|---|
| 05 | ஸ்ரீவராஹ ஜெயந்தி, ஸ்ரீபலராம ஜெயந்தி. |
| 07 | விநாயக சதுர்த்தி, 08 ரிஷி பஞ்சமி. |
| 13-14 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |
| 15 | ஸ்ரீவாமன ஜெயந்தி. |
| 15-18 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பவித்ரோத்ஸவம். |
| 17 | அனந்த பத்மநாப ஸ்வாமி விரதம். |
| 17-18 | நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |
| 17-19 | தொண்டைமான்புரம் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |
| 18 | மஹாளய பக்ஷம் ஆரம்பம். |
| 28-30 | அப்பளாயகுண்டா, பெங்களூரு, கீலபட்ல தி.தி.தே. ஆலயங்களில் பவித்ரோத்ஸவம். |

செய்யாமல் என்னுடைய துன்ப நிலையையும், நான் படுகின்ற பாட்டையும் சொல்லி நீ அவனை என்னிடத்திலே வரும்படியாகச் செய்ய வேண்டும். எனக்காக நீ அவனைக் கூப்பிட வேண்டும்.

இதுதான் பாசுரம்.

இங்கே ஒரு வாழ்வியல் செய்தியும் மிக அழகாக காட்டித் தருகின்றாள் ஆண்டாள். ஒருவர் துன்பப் படுகின்ற பொழுது அவருடைய துன்பத்தைத் துடைப்பதுதான் ஒரு வைணவனுடைய கடமை. அவன் ஏன் துன்பப்படுகிறான்? அவனுக்கு என்ன பிரச்சனை என்பதை விசாரித்து தன்னால் தீர்க்க முடிந்ததாக இருந்தால் தீர்ப்பதற்கான முயற்சியைச் செய்ய வேண்டுமே தவிர, அவனுடைய அருகில் தான் மட்டும் சந்தோஷமாக தனக்கு வேண்டியது கிடைத்து விட்டது என்று நினைத்து இருப்பது தகாது.


"குயிலே, எம்பெருமானோடு சேராமல் துன்பப் பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, உன்னுடைய துணையோடு சேர்ந்து ஆனந்தமாகத் தேனை உண்டு, அந்த அனுபவத்தைப் பாட்டாக பாடுவது எப்படி சரியாக இருக்கும்? நீ பாடுவதாக இருந்தால், உன் அருகில் இருக்கும் என் துன்பத்தைத் துடைத்து விட்டு, அதற்குப் பிறகு அல்லவா பாட வேண்டும் என்று சொல்வது போல் இந்தப் பாசுரம் அமைந்திருக்கிறது.

அருகாமையிலே ஒருவர் துன்பப்படுகிறார் என்று சொன்னால் முதலிலே அவருடைய துன்பத்தைத் தவிர்ப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்பது வைணவத்தின் நியதி.

இதைத்தான் நஞ்சீயர் மிக அழகாக காட்டித் தருகின்றார். ஒருவர் அவரிடம், "ஒருவனுக்கு வைஷ்ணவத்துவம் உண்டு என்பதை எப்படிப் புரிந்து கொள்வது?" என்று கேட்ட பொழுது, அவர் பதில் அளிக்கிறார். "பிறர் துன்பம் கண்டு எவனுடைய உள்ளத்திலே ஐயோ என்று இரக்கம் பிறக்கிறதோ அவனுக்கு வைஷ்ணவத்துவம் உண்டு என்கின்றார். இந்த தத்துவத்தைத்தான் இந்தப் பாட்டிலே மறைமுகமாகக் காட்டித் தருகின்றாள் ஆண்டாள்.

பாசுரம் அறிவோம்...

## ஒரே க்ளிக்கில் தரிசனம் டிக்கெட்




தி.தி.தேவஸ்தானத்தின் TTDEVASTHANAMS என்கிற டிஜிட்டல் வடிவிலான மொபைல் செயலியின் வாயிலாக பக்தர்கள் திருமலையில் ஸ்ரீவாரி தரிசனம், சேவைகள், அங்கபிரதக்ஷிணம், ஸ்ரீவாரி சேவை, தங்குமிடம் போன்றவற்றை முன்பதிவு செய்யலாம். நன்கொடைகளும் செலுத்திடலாம். மேலும் தி.தி.தே. தகவல்கள், புத்தகங்கள், உற்பத்தி பொருட்கள், தேவஸ்தானத்திற்குட்பட்ட இதர ஆலயங்கள் குறித்தும் பக்தர்கள் எளிதில் தெரிந்து கொள்ளலலாம்.

புஷ் நோட்டிபிகேஷன் மூலம் திருமலை ஆலயத்தில் நடைபெறும் உற்சவ விவரங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். மேலும், எஸ்.வி.பி.சி. சேனல் வாயிலாக நேரடி ஒளிபரப்புகளையும் காண இயலும். கணினி பயன் படுத்தத் தெரியாதவர்களும் பயன்படுத்தும் வகையில் இந்தச் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மொபைல் செயலியால் கையடக்க கைபேசியின் வழியாக திருவேங்கடமுடையானை கண நேரத்தில் காணும் பாக்கியத்தைப் பெறலாம்.

**ஹயக்ரீவ ஸ்தோத்திரம்**

ஜ்ஞாநாநந்த மயம் தேவம்
நிர்மல ஸ்ப்படிகாக்ருதிம்।
ஆதாரம் சர்வ வித்யானாம்
ஹயக்ரீவம் உபாஸ்மஹே॥
– வேதாந்த தேசிகர்.

மஹாவிஷ்ணுவின் எண்ணற்ற அவதாரத்தில் "ஹயக்ரீவ அவதாரம்" ஞானத்துடன் சேர்ந்த கல்வியை அளித்து, நம் சனாதன தர்மத்தின் ஆதாரமாக விளங்கும் வேதத்தை நமக்கு அருளிய அவதாரம். பிரம்மாவிடத்திலிருந்து படைப்பிற்கு ஆதாரமான வேதங்களை அபகரித்த மதுகைடப அசுரர்களை அழித்து வேதங்களைக் காப்பாற்றியவர் ஹயக்ரீவர்.

**ஹயக்ரீவ தரிசனம்**

"ஹய" என்றால் குதிரை. "க்ரிவ" என்றால் கழுத்து. ஹயக்ரீவர் குதிரை முகமும், கழுத்திற்கு கீழ் மனித வடிவமும் கொண்டு வெண்பட்டுடுத்தி, வெண்தாமரை மேல், 4 திருக்கரங்கள் கொண்டு சங்கு, சக்கரம், புத்தகம், அக்ஷர மாலை ஞான முத்திரை காட்டி அமர்ந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றார். சில குறிப்புகளில் லக்ஷ்மி ஹயக்ரீவராகவும், யோக ஹயக்ரீவராகவும் காட்சி அளிக்கின்றார். அவர் திருவாக்கில் வரும் "ஹல ஹல" என்கிற சப்தம் வேதத்தைக் குறிக்கும்.

**சுவாமி வேதாந்த தேசிகர்**

சுவாமி தேசிகர், திருவஹீந்திர புரத்தில் கருட தரிசனம் பெற்றார். பின்னர், கருடரிடமிருந்து திவ்யமான "ஹயக்ரீவ மந்த்ரோபதேசம்" பெற்றார். அதனால் அவருக்கு, ஹயக்ரீவப் பெருமானின் தரிசனம் கிட்டிற்று. இன்றும் நாம் அக்கோயிலில் சேவிக்கலாம். அதனால்தான் சுவாமி தேசிகர், "கவிதார்க்கிக சிம்மம்", "கவிதார்க்கிக கேசரி" மற்றும் "வேதாந்தாச்சார்யார்" என்ற பட்டம் பெற்று ஞானம் மிகுந்த கல்வியைப் பெற்றார். ஹயக்ரீவ ஸ்தோத்திரம் இயற்றினார். புண்டரீகாக்ஷர் என்ற பண்டிதரின் கனவில் தன் மூதாதியர் வழிபட்ட ஹயக்ரீவ அர்ச்சா விக்ரஹத்தை சுவாமி தேசிகருக்கு அளிக்க வேண்டும் என்று கனவு வந்ததால் அதை தேசிகரிடம் ஆராதனைக்கு கொடுத்தார்.

ஒருமுறை சுவாமி தேசிகர் திருக்கோவலூர் வழியாகச் செல்லும் போது சில காரணங்களால் அவருடைய ஆராதனை மூர்த்திக்கு பிரசாதம் கொடுக்க இயலவில்லை. அதனால் அவர் வெறும் தண்ணீரையே நைவேத்தியம் செய்து அதையே தானும் உட்கொண்டு ஒரு வணிக வியாபாரியின் வீட்டுத் திண்ணையில் உறங்கினார். அந்த இரவு அவ்வீட்டில்




– **திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா, 9946128102.**

உள்ள வேர்க்கடலை பயிர்களை ஒரு வெள்ளைக் குதிரை உண்பதை அந்த வியாபாரி கண்டான். உடனே வெளியே உறங்கி கொண்டிருந்த தேசிகரை எழுப்பி "தங்கள் குதிரை என் பயிர்களை உண்டது. அதை கட்டி வைக்கவும்" என்று கூறினார். சுவாமி தேசிகரும் வணிகரிடம் "தாங்கள் ஒரு செம்பு பால் கொண்டு வாருங்கள்" என்று கூறினார். அதை அக்குதிரைக்கு கொடுத்து தானும் பிரசாதமாக உட்கொண்டார். அக்குதிரை மாயமாய் மறைந்தது. அந்த இடத்தில் சில பொற்காசுகள் இருந்தன. இதைக் கண்டு மிகவும் ஆனந்தம் அடைந்தான் அந்த வணிகன், தனக்கு ஹயக்ரீவ அருள் கிட்டியதை உணர்ந்து அதற்கு வழிகாட்டிய சுவாமி தேசிகரின் ஹயக்ரீவ ஆராதனைக்கு அனைத்து உதவிகளும் புரிந்தான்.

சில பண்டிதர்கள், சுவாமி தேசிகரை சோதிக்க ஒரு கிணறு வெட்டும்படி கூறினர். "அந்தக் கிணறு ஹயக்ரீவருக்கே!" என்று தியானித்து அதையும் எளிதாகக் கட்டி அக்கலையையும் தான் அறிந்தவன் என்று சுவாமி தேசிகர் நிரூபித்தார். ஹயக்ரீவப் பெருமான் சுவாமி தேசிகரின் ஒவ்வொரு நிகழ்விலும் கூடவே இருந்து அருள்பாலித்தார். ஹயக்ரீவ ஸ்தோத்திரத்தில் ஹயக்ரீவப் பெருமான் நம் நாக்கின் நுனியில் சிம்மாசனம் இட்டு அமர்ந்தால், நாம் எல்லாப் போட்டிகளையும் வெல்லலாம் என்று பெருமையுடன் கூறுகிறார் தேசிகர்.

### வாதிராஜ சுவாமிகள்

மாத்வ வாதிராஜசுவாமி ஹயக்ரீவப் பெருமாள் உபாசகராவார். ஒரு தட்டான், கணபதி விக்ரஹம் செய்ய முற்பட்டான். ஆனால் அவன் எவ்வளவு முயற்சித்தாலும் ஹயக்ரீவ விக்ரஹமே வந்தது. பகவான் அவர் கனவில் தோன்றி இந்த விக்ரஹத்தை வாதிராஜர் சுவாமிகளுக்கு கொடுக்கும்படி கூறினார். அதேபோல் வாதிராஜருக்கும் உமக்கு ஒரு ஹயக்ரீவ ஆராதனை விக்ரஹம் கிட்டும் என்றும் கூறினார். அவ்வாறே நிகழ்ந்தது.

ஒரு முறை வாதிராஜர் தீர்த்த யாத்திரை சென்றபோது ஒரு உழவன், தன்னுடைய சோளப் பயிர்களை ஒரு குதிரை தின்றது என்றான். அது வாதிராஜருடையது என்றும் புகார் கூறினான்.



## ஆடிப்பெருக்கு

**ஆடி மாத்தில் தான் பருவ மழைப் பெய்து அனைத்து ஆறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். இதனால் விவசாயிகளும் புது விளைச்சலுக்கான நாற்றுநடும் பணியைச் செய்வர். இதைத்தான் ஆடிப்பட்டம் தேடி விதை என்று பெரியோர்களும் கூறுவர். பெண்கள் பயிர் விளைச்சல் நன்றாக இருக்கவும், குடும்பத்தில் அனைத்தும் நல்ல விதமாக இருப்பதற்காக நதிக்கு பூஜை செய்வர். பல விசேஷங்கள் நிறைந்த ஆடி மாதத்தில் தான் அம்மனுக்கும் விசேஷ விழாக்களைக் கொண்டாடி மகிழ்வர். ஆடிப் பெருக்கு அன்று மக்களும் புது வெள்ள நீரில் குடும்பத்தினரோடு நீராடியும் மகிழ்வர். குறிப்பாக நம் தமிழ்நாட்டில் காவிரிக்கரையோரங்களில் நீராடி காவிரி அன்னைக்கு படையல் இட்டு வழிபடுவர். இவ்வாறு வழிபடுவதால் திருமணமாகாதவர்களுக்கு நல்ல கணவன் அமைவார் என்பதும், திருமண மான பெண்கள் தங்கள் கணவனுக்கு நல்ல ஆரோக்கியமும், நீண்ட ஆயுளையும் காவிரி அன்னை வழங்குவாள் என்பதும் நம்பிக்கையாகும். இந்த அற்புதத் தினத்தில்தான் திருவரங்கத்தில் அம்மா மண்டபத்தில் ஸ்ரீரங்கநாத ஸ்வாமி எழுந்தருளி திருமஞ்சனமும் கண்டருளி தன் தமைக்கையான காவிரிக்கு மஞ்சள், குங்குமம், தாலி, புடவை போன்ற மங்கலப்பொருட்களையும் வழங்குவார். நாம் வாழும் இடத்திற்கு அருகில் உள்ள நீர் நிலைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இவ்வாறு செய்து மகிழலாம்.**

# காயத்ரீ ஜபம்



ஆவணி அவிட்டத்திற்கு மறுநாள் வரும் காயத்ரீ ஜபத்தை காயத்ரீ ஹோமம் என்று சொல்வதே பொருத்தம். ஆபஸ்தம்ப ஸூத்ரம் ஆச்வலாயன ஸூத்ரம், காத்யாயன ஸூத்ரம், த்ராஹ்யான ஸூத்திரம் என்ற பல நடைமுறைகள் இருக்கின்றன. எல்லோருக்கும் ஆபஸ்தம்ப மஹரிஷியே இக்காயத்ரீ ஜப விதானத்தை உபதேசித்திருக்கிறார்.

இவர் தன் தர்ம ஸூத்ரத்தில் சிராவண மாதம் கிருஷ்ண பக்ஷம் பிரதமை திதியில் "காயத்ரீயா ஸமித் ஸகஸ்ரம் ஆதத்யாத் ஜபேத்வா" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரு ஸமித்துக்கு ஒரு காயத்ரீ மந்திரத்தை ஜபித்துக் கொண்டு ஆயிரம் ஸமித்துகளை அக்னியில் போட்டு ஹோமம் செய்ய வேண்டும்.

காயத்ரீயைக் குறித்து ஹோமம் செய்யும்போது பலாச (அரச) மர சமித்தையே உபயோகிக்க வேண்டும். இந்த ஹோமத்தை ஒரு பிராயச்சித்த கர்மாவாக வருடாவருடம் இந்த நாளில் ஸங்கவ காலம் என்கிற காலை 8.24 மணி முதல் 10.48 மணிக்குள் செய்தல் வேண்டும்.

**– திரு. நஜன், சென்னை.**

வாதிராஜர் அந்தத் தோட்டத்திற்கு வந்ததும், அங்கே குதிரையைக் காணவில்லை. அதற்கு பதிலாக சோளம் எல்லாம் தங்கமாக மாறியது. இது ஹயக்ரீவப் பெருமாளின் அருள் என்று "தசாவதார ஸ்துதி" இயற்றினார். அந்த ஸ்துதி ஒரு குதிரை நடனமாடினால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கும்.

வாதிராஜர், "ஹயக்ரீவ மத்தி" என்ற பிரசாதம் செய்ய, அதை தினமும் குதிரை வடிவில் வந்து, அவர் தோளின் மேல் கால் வைத்து, அவர் தலை மீது பாத்திரத்தில் இருக்கும் "ஹயக்ரீவ மத்தியை" பகவான் உண்டு நடனமாடுவார் என்றும் கூறுவதுண்டு. சில மனிதர்கள் இதை நம்பவில்லை. அதனால், அந்தப் பிரசாதத்தில் விஷம் கலந்தார்கள். அன்று, ஹயக்ரீவப் பெருமான் பாத்திரத்தில் உள்ள பிரசாதம் முழுவதையும் உண்டார். பின்னர், அந்த விக்ரஹம் பச்சை நீலமாக மாறியது. இதை கண்ட வாதிராஜருக்கு, உண்மை விளங்கிற்று. அந்த தீய செயல் செய்த மனிதர்களிடமிருந்து, பகவான் அவரை காப்பாற்றினார். அவ்வாறு தெய்வம் ஒரு பக்தனை காப்பதற்கு எதையும் செய்யும் என்பதை இச்சம்பவத்தின் மூலம் உணரலாம்.

ஹயக்ரீவ மத்தி – வெல்லம், வேகவைத்த கடலைப் பருப்பு, நெய், பாதாம் சேர்த்து பிரசாதமாக ஹயக்ரீவப் பெருமாளுக்கு நைவேத்தியம் செய்வது சிறந்தது. ஹயக்ரீவருக்கு ஏலக்காய் மாலை, வெள்ளை தாமரை, வெண்பட்டாடை அணிவித்தல் மிகவும் சிறப்பு.

## ஹயக்ரீவப் பெருமாளின் கோயில்கள்

திருவஹீந்திரபுரம், மதுரை கூடல் அழகர் கோயில் எதிரில், சென்னையில் நங்கைநல்லூர், மயிலாப்பூர் வேதாந்த தேசிகர் ஸ்ரீநிவாச பெருமாள் கோயில், காஞ்சிபுரம் தூப்புல் தீபப்ரகாசர் பெருமாள் கோயில், பரகால மடம் மைசூர், திருமலை ஹயக்ரீவர் கோயில், ஹயக்ரீவ மாதவ் கோயில் அசாம் என்று பல பிரசித்தி பெற்ற கோயில்கள் நம் பாரத பூமியில் உள்ளன.

தமிழில் திருவாய்மொழியில் ஆழ்வார், "மாவாகி" என்ற பாசுரத்தில் ஹயக்ரீவப் பெருமாளின் அவதாரச் சிறப்பைப் பாடியுள்ளார்.

ஞானம் இருந்தால் எதிலும் வெற்றி பெற முடியும். அதனால் தினமும் ஹயக்ரீவ ஸ்தோத்திரம் பாடி ஞானத்தைப் பெறுவோமாக.



சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்



# நாக சதுர்த்தி - கருட பஞ்சமி

- படிமக்கலைஞர் திரு.ப.சரவணன்,
குடந்தை, 8610819456.

ஆடி மாதம் வளர்பிறையில் கொண்டாடப் படும் நாக சதுர்த்தி விழா, மறுநாள் வரும் கருட பஞ்சமி விழா சிறப்புகள்.

### நாகர்கள் மற்றும் கருடன் ஜனனம்

பிரம்ம தேவரின் மகனான தக்கன் இவ்வுலகம் விருத்தியடைய தனது மகள்களான வினதை, கத்துரு ஆகிய பெண்களை காசியப மகரிஷிக்கு திருமணம் செய்து கொடுத்தார்.

சிலகாலம் கடந்தது. அக்கா வினதை என்பவள் இரண்டு முட்டையும், தங்கை கத்துரு என்பவள் நூற்றைந்து (105) முட்டையும் பெற்றார்கள். இம்முட்டைகளில் கத்துரு ஈன்ற நூற்றைந்து முட்டைகளும் தனக்குத்தானே விரிந்து, (உடைந்து) 1) ஆதிசேஷன், 2) வாசுகி, 3) தக்ஷகன், 4) கார்க்கோடகன், 5) தனஞ்சயன், 6) காளியன், 7) நாகபுராணன் உட்பட நூற்றிநான்கு (104) மகன்களும், சலர்க்கரை எனும் ஒரு மகளும் உதித்தார்கள். இவர்களைக் கண்டு நாகர்களின் தாய் கத்துரு மிகுந்த களிப்பு கொண்டாள்.


தங்கையின் புத்திரர்கள் அழகாக ஊர்ந்து விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு அக்கா வினதை மனம் தவியாய்த் தவித்தது. அதன் காரணமாக தான் பெற்ற இரு முட்டைகளையும் பார்த்தாள். அவை வைத்தது வைத்தது போலவே இருக்கக் கண்டு ஆர்வ மிகுதியால் முட்டைகளில் ஒன்றை எடுத்து உடைத்தாள். அம்முட்டையில் எல்லா அவயவமும் கூடிக் கால்கள் மட்டும் இல்லாத (வளராத) ஒரு மழலை இருந்தது (இவன் தான் ஸ்ரீசூரியதேவனின் ரதத்தை ஓட்டும் சாரதி அருணன் ஆவான்). அந்த மழலை தன் தாயைப் பார்த்து, தாயே! எல்லா அவயவங்களும் கூடி வருகிற தருணத்தில் அவசர புத்தியினால் பராக்கிரமசாலியான நான் பிறர் கேலி செய்யும் முடவனானேன் என்று சொல்லி தன் தாயிக்கு சாபம் ஒன்று கொடுத்தான்.

அதனால் வேதனையில் தவித்த தாயைப் பார்த்து அருணன் தாயே இங்குள்ள இன்னொரு முட்டையில் எனக்கு இளையவன் இருக்கிறான் (பெரிய திருவடி என்றழைக்கப்படும் கருட பகவான்). அவன் மிகுந்த பராக்கிரமசாலி. நானிருந்த முட்டையை உடைத்து என்னைப் பின்னப்படுத்தியது போல இந்த முட்டையை உடைத்து விட வேண்டாம் என்றும், அவனால் தான் நான் தந்த இந்த சாபத்தில் இருந்து தாங்கள் விடுபடுவீர்கள் என்றும் கூறினான். அந்தக் கடைசி



ஆலயங்களிலுள்ள நாகபந்த சிற்பங்களை வணங்கி,வழிபாடுகள் செய்து வர கணவன்,மனைவி ஒற்றுமை கூடும் என்பது ஐதீகம்

முட்டையில் இருந்து பிறந்தவன் தான் கடை குட்டி மழலையான, விஷ்ணுவின் வாகனமான பெரிய திருவடி என்றழைக்கப்படும் கருட பகவான் என்று கருடனின் ஜனன வரலாறும் ஸ்ரீமத் மகாபாகவத இதிகாச புராணமும் எடுத்து உரைக்கிறது. இந்து சமய சைவ, வைணவ ஆலயங்களில் அமையப் பெற்றுள்ள புடைப்புச் சிற்பங்களில் பலவித இறை வடிவங்கள், இதிகாச புராண வரலாற்றுச் சிற்பங்கள் இருந்தாலும் அவைகளில் மானுடம் வாழும் காலம் முழுவதும் நாளும் நலம் காணும் வண்ணம் இயற்கை அன்னை நல்கிய வரமாக வலம் வரும் நாகராஜன் வடிவுடைய நாகபந்த சிற்பங்கள் அமைந்துள்ளன. அதேபோன்று சகல சுப காரியங்கள் சித்தி பெற தன் பார்வையால் நல்லாசி நல்கி வலம் பல தந்தருளும் நித்தம் விஷ்ணு பகவானை வணங்கி மகிழும் பெரிய திருவடியான கருடனின் சிற்பங்கள் அதிக இடம் பிடித்துள்ளதை இன்றும் பல ஆலயங்கள் தோறும் காணலாம் என்பது குறிப்பிடத்தக்கது.



ஆதிசேஷன் மீது சயன கோலத்தில் மகாவிஷ்ணு எழுந்தருளியுள்ள திருக்காட்சி

ஈன்ற தாயின் அன்பினாலும், பாற்கடல் வாசனான ஸ்ரீவிஷ்ணு பகவானின் அருளாலும் மிளிரும் குழந்தைகளான மண்ணில் உலா வரும் பாதாள உலக இராஜாவான நாகராஜாவை ஆடி மாதத்தில் வரும் வளர்பிறை சதுர்த்தி நன்நாளில் வழிபட்டால் ராகு, கேது தோஷம், நாக தோஷம் மற்றும் புத்திர தோஷம் நீங்கும் என்பதும், அதற்கு மறுநாள் வரும் கருட பஞ்சமி அன்று நாக சதுர்த்தி கொண்டாடியவர்கள் அருகிலுள்ள வைணவ ஆலயத்திற்குச் சென்று விண்ணில் வலம் வரும் பட்சிகளின் இராஜாவான கருட பகவானுக்கு பசு தீபம் ஏற்றி, வடை மாலை சாற்றி, பூரண கொழுக்கட்டையை நிவேதனமாகப் படைத்து கருட பஞ்சமி நோன்பையும் கடைபிடிக்க பிணிகள் நீங்கும் என்பதும் ஐதீகம்.

## ஸப்தகிரி ஜூன் 2024 விடைகள்

1. தருமன், பீமன், அர்ஜுனன்,நகுலன், சகாதேவன்.
2. திருவேங்கடத் திருத்தலம்.
3. திருமழிசை ஆழ்வார்.
4. இராம அவதாரம்.
5. வடுக நம்பி.
6. தேவ புஷ்கரணி.
7. துர்வாச முனிவர்.
8. பாண்டு மகாராஜன்.
9. ஆடி மாதம்.
10. நரசிம்ம அவதாரம்.
11. காஞ்சிபுரம்.
12. இராமாநுஜர்.
13. ஸ்வாமி புஷ்கரணி.
14. திருமங்கை ஆழ்வார்.
15. காந்தாரி.






## போட்டி எண். 23

**சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி கிருத்திகா, கொடுங்கையூர், சென்னை.
2. செல்வி எஸ்.தேவரதி, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.
3. செல்வன் ப.எ.லோகேஸ்வரன், சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

# பாரதத்தில் ஒரு தசரதன்-பாண்டு

சந்தனு மகாராஜாவிற்கு கங்கையின் மூலம் பிறந்த புதல்வர் பீஷ்மர். அவர் தம்முடைய வாழ்நாள் முழுவதும் பிரம்மசரிய விரதம் பூண்டு வாழ்வதாகச் சபதம் ஏற்றிருந்தார்.

சந்தனுவுக்கும் சத்தியவதிக்கும் பிறந்தவர்கள் சித்திராங்கதனும், விசித்திரவீரியனும் ஆவார்கள். இவர்களுள், சந்தனுவுக்குப் பிறகு பட்டமேற்ற மூத்த இளவரசன் சித்திராங்கதன் ஒரு கந்தர்வனால் போரில் கொல்லப்பட்டான். எனவே இளையவன் விசித்திரவீரியனுக்குப் பட்டம் சூட்டப்பட்டது.

அம்பிகை, அம்பாலிகை ஆகிய இருவரும் விசித்திரவீரியனை மணந்தனர். இரு மனைவியர் இருந்தும் புத்திரப்பேறு இல்லாதவனாய் க்ஷய ரோகத்தினால் அவன் மரணம் அடைந்தான்.

அரசபரம்பரை ஒன்று வாரிசு இல்லாமல் போக நேர்ந்தால் தவசீலர்களின் மூலம் வம்சவிருத்தி செய்வது என்பது அந்த யுகத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட வழக்கமாக இருந்தது. அத்தவசீலர்களும் சிற்றின்பநாட்டம் அற்றவர்களாக, அறத்தின் வழி நின்று புத்திரப் பேற்றை அளித்துவிட்டு அடுத்த கணம் அவ்விடத்தை விட்டு அகன்று விடுவர்.



இவ்வழக்கத்தையொட்டியே விசித்திரவீரியனின் தாயாகிய சத்தியவதி வியாஸ முனிவரை அழைத்துத் தனது மருமகள்களுக்குப் புத்திரப்பேறு அருளுமாறு வேண்டிக் கொண்டாள்.

அதனை ஏற்றுக் கொண்ட வியாஸரும் புத்திரப் பேறு அருளும் எண்ணத்துடன் அம்பிகையை முதலில் அணுகினார். ஆனால், அவருடைய தேகத்திலிருந்து வீசிய வாடையை விரும்பாத அம்பிகை தன்னுடைய கண்களை இறுக மூடிக் கொண்டாள். இதன் காரணமாக அம்பிகைக்குக் கண்பார்வை இன்றி ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையே திருதராஷ்டிரன் ஆவான். பிற்காலத்தில் காந்தாரியை மணந்து கொண்ட திருதராஷ்டிரனுக்கு துரியோதனன் உள்ளிட்ட நூறு புத்திரர்கள் பிறந்தனர். அவர்களே கௌரவர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

சத்தியவதியின் வேண்டுகோளுக்கிணங்க அம்பாலிகைக்கும் புத்திரப்பேறு கொடுப்பதற்காக அவளை நெருங்கினார் வியாஸர். அம்பிகையைப் போன்றே வியாஸரின் தேகத்திலிருந்து வீசிய வாடையை விரும்பாத அம்பாலிகையின் மேனி வெளிறியது. இதனால் அம்பாலிகைக்கு வெண்மையான தோலுடைய ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு பாண்டு என்று பெயரிட்டனர். (பாண்டு என்றால் வெண்மை என்ற பொருள் உண்டு. மனிதர்களில் சிலருக்கு உண்டாகும் வெண்குஷ்டம் எனப்படும் தோல் நோயைப் "பாண்டு ரோகம்" என்றும் அழைப்பர்).

**– திரு.எஸ்.ஸ்ரீதுரை,**
**காஞ்சிபுரம், 9486139685**

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*த்யக்தஸ்ஸத$_3$யாத$_3$வமர்க்கடேந ராமாநுஜார்யோ மணிரத்$_3$பு$_4$தஸ்ரீ: ।*
*ஹ்ருத்$_3$ய: கரீசஸ்ய ஹரேரபூ$_4$தி$_3$ த்யாகர்ண்ய ஹ்ருஷ்டஸ்ஸ ச யாமுநார்ய:*
*ராமாநுஜார்யாநயநாய ஸோடபி சிஷ்யம் மஹாபூர்ணத$_2$ாதி$_3$தே$_3$ச*
*க$_3$த்வாடத$_2$ காஞ்சீம் ஸ ச தோஷயித்வா தம் ஸ்தோத்ரரத்நேந துதோஷ பூ$_4$ய: ॥*

(32,33)

**பேரொளி வீசும் ரத்தினம் போன்றவரான இராமாநுஜர் யாதவராகிற குரங்கின் கையிலிருந்து விடுபட்டு, அத்திகிரியருளாளனின் நெஞ்சுக்கு இனிய(ஹ்ருத்ய)வரானார் என்று கேள்விப்பட்டு உகந்த யாமுநாசார்யர் (ஆளவந்தார்), இராமாநுஜரை ஸ்ரீரங்கத்திற்கு அழைத்து வருவதற்காகத் தமது சிஷ்யரான பெரிய நம்பியை நியமித்தார். காஞ்சிக்குச் சென்ற அப்பெரிய நம்பியும், தமது ஆசார்யர் அருளிய ஸ்தோத்ரரத்னத்தை அநுஸந்தித்து இராமாநுஜரை உகப்பித்து (அவரால் ஸத்கரிக்கப் பெற்றுத்) தாமும் மிகவுகந்தார்.**



– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

முதலில் பிறந்த திருதராஷ்டிரன் பிறவியிலேயே ஒரு குருடன் என்பதால், இளையவனாகிய பாண்டுவுக்கு அஸ்தினாபுரத்தின் அரியணையில் ஏறும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. பின்னர், குந்திபோஜனுடைய வளர்ப்பு மகளாகிய குந்தி தனக்காக நடந்த சுயம்வரத்திற்குப் பாண்டுவும் செல்ல, குந்திதேவி அவனுக்கே மாலை அணிவித்து அவனுடைய பட்டமகிஷி ஆனாள்.

அதன் பின்னர், பெரியப்பா பீஷ்மரின் யோசனையை ஒட்டியும், புத்திர சந்தானத்தை உத்தேசித்தும் மத்ரதேசத்து மன்னனின் சகோதரியாகிய மாத்ரியைப் பாண்டு மணந்து கொண்டான்.

இந்த நேரத்தில்தான் விதி பாண்டுவின் வாழ்க்கையில் விளையாடியது. அதன் காரணமாக மகாபாரதத்துப் பாண்டுவின் கதை திரேதாயுகத்தின் தசரதருடைய சரித்திரத்தைப் போன்று தடம் மாறியது.

நீண்ட காலமாக புத்திரப்பேறு இல்லாதவராகிய தசரத மகாராஜா ஒருமுறை வேட்டையாடச் செல்லும்பொழுது யானை ஒன்று நீர்நிலையில் தண்ணீர் குடிப்பது போன்ற ஒலி வந்த திசையில் "சப்தவேதி" என்ற கணையைச் செலுத்தினார். ஆனால், அந்தக் கணையோ கண் பார்வையில்லாத தன்னுடைய பெற்றோர்களின் தாகம் தீர்ப்பதற்காகத் தண்ணீர் மொண்டுகொண்டிருந்த ஒரு ரிஷி குமாரனைத் தாக்கியது. அவனுடைய வயதான பெற்றோர்களும் நீயும் எங்களைப் போல புத்திர சோகத்தினால் மாண்டுபோவாய்! என்று சாபமிட்டு விட்டுத் தங்களின் இன்னுயிரைத் துறந்தனர்.

அதன்பிறகு புத்திரகாமேஷ்டியாகம் செய்த தசரதனுக்கு ஸ்ரீராமன் உள்ளிட்ட நான்கு புதல்வர்கள் பிறந்தனர். மூத்தவனாகிய ஸ்ரீராமன் வனவாசம் செல்ல நேர்ந்ததைப் பொறுக்க முடியாத தசரதனும் புத்திரசோகத்தால் தனது இன்னுயிரை நீத்ததை நாம் அறிவோம்.

தசரதனின் கதைக்கும் பாண்டுவின் கதைக்கும் சிறியதொரு வித்தியாசம் தான். தசரதனைப் போன்றே பாண்டுவும் வேட்டையாடச் சென்ற பொழுது கிந்தமர் என்ற முனிவரும் அவருடைய மனைவியும் ஆண் மானாகவும், பெண் மானாகவும் மாறி இயற்கைச் சூழலில் இன்பம் நுகர்ந்து கொண்டிருந்தனர். இவ்விஷயத்தை அறியாத பாண்டு சாதாரணமான மான் என்ற எண்ணத்துடன் அந்த மான்கள் இரண்டின் மீதும் அம்பை எய்து விட்டான்.

இறக்கும் தறுவாயிலிருந்த கிந்தமர், "ஹே பாண்டுவே! என் மனைவியுடன் நான் இன்பம் நுகரும் வேளையில் எங்கள் இருவரையும் கொன்ற காரணத்தால் இனி உன் வாழ்க்கையில் உன் மனைவியுடன் இணையும் அக்கணமே நீ மரணம் அடைவாய்!" என்று சாபமிட்டு விட்டார்.

முனிவரின் சாபத்தினால் தனது வாழ்க்கையில் விரக்தியடைந்த பாண்டு ராஜ்யபாரத்தினை பீஷ்மர், விதுரர் இருவரிடமும் ஒப்படைத்து விட்டுத் தன் மனைவியர் இருவருடனும் வனத்தை அடைந்து அங்கே பர்ணசாலையைக் கட்டிக் கொண்டு இறைவனைப் பற்றிய சிந்தனையுடன் வாழத் தொடங்கினான். கிந்தம முனிவரின் சாபத்தால் இனி குந்தியும், மாத்ரியும் தங்கள் கணவனாகிய பாண்டுவுடன் இணைந்து புத்திரப்பேறு அடையும் வாய்ப்பே இல்லை என்ற சூழ்நிலை உண்டானது.

ஏற்கனவே துர்வாச மகரிஷி கொடுத்த வரத்தின் காரணமாக, மேலுலக தேவர்களுடைய அருளினால் பிள்ளைப்பேறு அடையும் வாய்ப்பைப் பெற்ற குந்தி அதனைத் தன் கணவனுக்கும், மாத்ரிக்கும் தெரிவித்தாள். துர்வாசர் கற்றுத் தந்த மந்திரத்தினைப் பிரயோகித்து தருமதேவதை, வாயுபகவான், தேவேந்திரன் ஆகியவர்களின் அருளால் முறையே தருமர், பீமன், அர்ஜுனன் ஆகியோரைப் பெற்றுக் கொண்ட குந்தி அம்மந்திரத்தை மாத்ரிக்கும் சொல்லிக் கொடுத்தாள். மாத்ரியும் அம்மந்திரத்தைப் பிரயோகித்து இரட்டையர்களாகிய அசுவினி தேவர்களின் அநுக்கிரகத்தைப் பெற்று நகுலன், சகாதேவன் என்ற இரண்டு புதல்வர்களைப் பெற்றுக் கொண்டாள். இவ்வாறு பிறந்த ஐந்து புதல்வர்களும் 'பஞ்சபாண்டவர்கள்' என்று அழைக்கப்பட்டனர்.

இதனால் புத்திரப்பேறு இல்லையென்ற மன வருத்தம் நீங்கி மகிழ்ச்சியுடன் இருந்த பாண்டுவின் வாழ்க்கையில் மீண்டும் ஒரு முறை விதி விளையாடியது.

பர்ணசாலையின் வெளியில் இருந்த பாண்டு அந்தச் சமயத்தின் இயற்கை அழகினால் உணர்ச்சிகள் தூண்டப்பட்டவனாய், முனிவரின் சாபத்தையும் மறந்து தன்னருகில் இருந்த மாத்ரியைச் சிற்றின்ப நோக்கத்துடன் கட்டி அணைக்க முயன்றான். வேண்டாம் என்று விலகிய மாத்ரியை வீம்பாக இழுத்துத் தழுவிய மறுகணம் பாண்டுவின் உயிர் பிரிந்தது. புதல்வர்களாகிய பாண்டவர்களின் நலனுக்காகக் குந்தி உடன்கட்டை ஏறுவதைத் தவிர்த்தாள். நகுல சகாதேவர்கள் இருவரையும் குந்தியின் பொறுப்பில் ஒப்படைத்த மாத்ரி கணவன் பாண்டுவின் சிதையில் உடன்கட்டை ஏறிச் சுவர்க்கம் சென்றாள்.

தன்னுடைய அருமைப் புதல்வர்களாகிய பஞ்ச பாண்டவர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்வதை கண்ட பாண்டு, அவர்கள் மாபெரும் வீரர்களாக மலர்ந்து சாகசங்கள் பல புரிந்து உலகப் புகழ் பெறுவதைப் பார்க்கும் முன்பே சாபத்தின் காரணமாக உயிர்நீத்தான்.

ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தும் புத்திரப்பேறு இன்மை, முனிவர்களின் சாபம், அதற்குப் பின்னர் தெய்வ அருளால் புத்திரப்பேறு அமைதல், அவர்களிலும் மூத்தவன் அறத்தின் வடிவமாக அமைதல், மூத்த மகன் ராஜ்யபாரம் ஏற்கும் முன்பே மரணம் என்று ஸ்ரீமத்ராமாயணத்தின் தசரதர், மகாபாரதத்தின் பாண்டு இருவரின் வாழ்வும் முடிவும் ஒன்று போலவே அமைந்து விட்டதை உணரலாம்.

எம்பெருமானின் திருவுள்ளமே இதற்குக் காரணம் என்பதைத் தவிர நாம் சொல்வதற்கு வேறு என்ன இருக்கிறது?

*தொடர்ந்து அலசுவோம்...*

### திருமலை மலைப்பாதையில்...

- ⇨ வாழ்க்கை விலைமதிக்கமுடியாதது. எனவே சாலை விதிமுறைகளை கடைபிடியுங்கள்.
- ⇨ வாகனத்தை கவனமுடன் நடத்துங்கள். சேரவேண்டிய இடத்தை எளிதில் அடையுங்கள்.
- ⇨ மலைப்பாதையில் திருப்பதியில் இருந்து திருமலைக்கு பயண நேரம் 28 நிமிடங்கள்.
- ⇨ மலைப்பாதையில் திருமலையில் இருந்து திருப்பதிக்கு பயண நேரம் 40 நிமிடங்கள்.
- ⇨ மலைப்பாதையில் உங்களுக்கு முன்பாகச் செல்லும் வாகனத்தை முந்தாதீர்கள்.
- ⇨ மலைப்பாதையில் வாகனத்தின் இன்ஜினை நிறுத்தி நியுட்ரலில் செல்லாதீர்கள்.
- ⇨ மலைப்பாதையில் கைபேசியில் உரையாடிக் கொண்டே வாகனத்தை ஓட்டாதீர்கள்.

# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

– திரு.எம்.எஸ்.சுகுமார்,
சென்னை, 8838252312.



*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**சூத்திரம் 42 :** *"ஸந்தோஷதனுத் தமஸுகலாப"*

அகத்தூய்மை எப்படி அடையலாம்? தன்னிறைவு அடைவதே உத்தமமான சுகம் எனக் கூறுவர். எப்பொழுதும் மனதில் நிறைவும், சந்தோஷமும் கொண்டு இருக்க வேண்டும். அதனால் புலன்களுக்கும் தேகத்திற்கும் அதீத சுகம் கிடைக்கும். எது கிடைத்தாலும் நிறைவுடன் வாழ்வதே பேரின்பம் ஆகிறது.

**சூத்திரம் 43 :** *"காயேந்த்ரிய ஸித்திர கத்திக்ஷயாத்தபஸ:"*

விரதம், உபவாசங்கள் இருந்து இறைவழிபாடு செய்வது, லட்சியத்தை அடைவதற்கு கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வது இவையெல்லாம் தவம் என்று சொல்வார்கள். ஓம்கார ஜபம், மந்திர ஜபம் எல்லாம் மனதையும், புலன்களையும் அடக்கி இடைவிடாது தவம் புரிந்து வரும் போது தேகம் தூய்மை ஆகிறது.

**சூத்திரம் 44 :** *"ஸ்வாத்யாயாதிஷ்ட தேவதா ஸம்ப்ரயோக"*

வேத சாஸ்திரங்களை நன்கு படித்து ஞானம் பெற்ற பின் குருவிடம் மந்திரோபதேசம் பெற்று முறையாக ஜபமும் தவமும் செய்தாலும் இஷ்ட தெய்வத்தின் அருளைப் பெற்று விடலாம்.

**சூத்திரம் 45 :** *"ஸமாதி ஸித்திரீச் வரப்ரணிதானாத்"*

யோக சாதனை வெற்றி அடைய, சமாதி நிலை ஏற்பட ஈசுவரனை சரண் அடைய வேண்டும். ஈஸ்வரன் அருளால் இடர்கள் நீங்கும். தன்னையே இறைவனிடம் ஒப்படைத்து விட்டு யோகப் பயிற்சி செய்தால் சமாதி சித்தியாகும்.

**சூத்திரம் 46 :** *"ஸ்திரஸுகம் ஆஸனம்"*

ஆடாமல் அசையாமல் கஷ்டமில்லாமல் ஒரே நிலையில் நெடுநேரம் அமர்ந்திருந்தால் அது ஆசன சித்தி ஆகிறது. யோக சாதகன் சௌகர்யம் போல் எப்படி வேண்டுமானாலும் அமர்ந்து கொள்ளலாம். ஆனால் உடல் அசைவில்லாமல் சலனமின்றி இருந்தால் தியானத்தில் மனம் ஒரு நிலைப்படுவதற்கு உதவி புரிகிறது.

**சூத்திரம் 47 :** *"ப்ரயத்ன சைதில்யானந்த ஸமாபத்திப்யாம்"*

சரீரத்தை நேராகவும் ஸ்திரமாகவும் வைத்த பின் சுகமாக அமர்ந்து சரீரம் சம்பந்தப்பட்ட எந்த அசைவுகளையும் விட்டு மன இறுக்கம் இல்லாமல் சௌகர்யமாக இருக்க வேண்டும். ஆசனம் என்பது சமாதியின் வெளிச்சாதனமாகும். ஆனந்த்யம் என்றால் சித்தம் நொடிக்கு நொடி வெவ்வேறு பல விஷயங்களை நோக்கிச் சுற்றித் திரிந்து கொண்டேயிருக்கும். எனவே ஆகாயத்தில் கவனத்தைச் செலுத்தி மனத்தை ஒருமைப்படுத்த வேண்டும்.

**சூத்திரம் 48 :** *"ததோ த்வந்த்வானபிகாத"*

ஆசனம் சித்தியானவுடன் சரீரம் அதிகக் குளிராலும், வெப்பத்தாலும் பாதிக்கப்படாது. குளிரையும் வெப்பத்தையும் சகித்துக் கொள்ளும் சக்தி வந்து விடும். இமய மலையில் வசிக்கும் யோகிகள் கடும் குளிரையும் தாங்கிக் கொண்டு வாழ்ந்து வருவதைக் காணலாம்.



## கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி தெப்போத்ஸவம்

**ஸ்ரீருக்மணி, ஸ்ரீசத்யபாமா உடனுறை ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி திருக்கோயில் திருப்பதியிலிருந்து சுமார் 58 கி.மீ. தூரத்திலும், புத்தூரிலிருந்து 12 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. இம்மாதம் 17ஆம் தேதி முதல் 19ஆம் தேதி வரை சிராவண (ஆவணி) பௌர்ணமியில் தெப்போத்ஸவம் நடைபெறும்.**





**சூத்திரம் 49 :** *''தஸ்மின் ஸதி ச்வா ஸப்ரச்ஸயோர் கதிவிச்சேத; ப்ராணாயாம:''*

கை கால்கள் அசைவற்ற நிலையில் ஆசனம் சித்தியான பின்தான் பிராண வாயுவை நிறுத்தி பிராணாயாம பயிற்சி செய்ய வேண்டும். இதுவே முறையான யோகப் பயிற்சி முறை என்று கூறு கிறார்கள்.

**சூத்திரம் 50 :** *''பாஹ்யாப்யந்தரஸ்தம்ப வ்ருத்திர் தேசகால ஸங்க்யாபி: பரித்ருஷ்டோ தீர்கஸுக்ஷம்''*

இந்த மூன்று வகையான பிராணா யாமத்தில் இடம், காலம், எண்ணிக்கை ஆகியவற்றில் கவனம் கொண்டு செய்யப் படுகின்றன. 1) பாஹ்யவிருத்தி பிராணா யாமம் : பூரகம் சுவாசத்தை உள்ளே இழுத்து நிரப்புவதையும் உள்ளே அடக்கு வதை கும்பகம் என்றும், வெளியே வருவதை ரேசகம் என்றும், வெளியே விட்டு அடக்குவதை வெளிக் கும்பகம் என்பார்கள். 2) ஆப்யந்தர விருத்தி : பிராண வாயுவை முடிந்த வரை உள்ளே நன்கு இழுத்து எவ்வளவு காலம் நிறுத்த முடியுமோ அவ்வளவு காலம் அடக்க வேண்டும். 3) ஸ்தம்ப விருத்தி : நுரையீரலில் இருந்து பிராணவாயு உள்ளே வெளியே என போய் கொண்டு இருந்தாலும் திடீரென வாயுவை நிறுத்துவதே ஸதம்பவிருத்தி.

**சூத்திரம் 51 :** *''பாஹ்யாப்யந்தர விஷயாக்ஷேபி சதுர்த்த:''*

நான்காவது பிராணாயாமமான ராஜயோக பிராணாயாமத்தில் எண்ணச்சலனங்களும், பிராணவாயுவின் சஞ்சாரமும் தாமாகவே அடங்கி விடும் (உடலில் உள்ளே இருக்கும் ஆறு ஆதார சக்கரங்கள் வெளியே உள்ள பிரம்ம ரந்திரம், மூக்கு நுனி, புருவங்கள், நாசித்துவாரங்கள், கண், காது, வாய் ஒடுக்கம் பெற்று விடும்). எந்தக் கும்பகமும் இல்லாமல் ரேசக பூரகங்களால் மேற்சொன்ன உள் விஷயம், வெளி விஷயம் இரண்டையும் தியானத்தில் வைத்து தியானம் ஒரு விஷயத்தில் ஊன்றிய பின் சுவாசம் வருவதும் போவதும் நின்று போவதே நான்காவது பிராணாயாமம் ஆகிறது.

**சூத்திரம் 52 :** *''தத: க்ஷீயதே ப்ரகாசாவரணம்''*

பிராணாயாமங்களைத் தொடர்ந்து அப்யாசம் செய்து வந்தால் சித்தத்தின் அடித்தளத்தில் தேங்கி இருந்த கர்மாச யங்களும் அழிந்து கொண்டேபோகும். கிலேசங்கள் இதுவரை ஞானத்தை மூடி மறைத்துக் கொண்டிருந்தன. அதனால் மனிதன் மதி மயக்கத்தில் இருந்தான். இப்பொழுது அந்த கிலேசங்கள் என்கிற போர்வை விலகிய பின் சாதகனுக்கு ஞானம் சூரியன் போல் பிரகாசித்து சிந்தைத் தெளிவு பெற்று விடும்.

**சூத்திரம் 53 :** *''தாரணஸு'ச யோக்யதா மனஸ:''*

பிராணாயாமத்தின் அப்யாசத்தால் தியானத்தில் ஓர் இலக்கைப் பிடித்து மனத்தில் நிறுத்துவது வெற்றிகரமாக செய்ய முடிகிறது. அதாவது மனத்திற்கு அத்தகைய சக்தி கிடைத்து விடுகிறது.

**சூத்திரம் 54 :** *''ஸ்வவிஷயா ஸம்ரயோக சித்தஸ்வரூபானுகார இவேந்த்ரியாணாம் ப்ரத்யாஹாரா''*

புலன்கள் தன் விஷயங்களில் இருக்கப்படும் தொடர்பைத் துண்டித்து விட்டு சித்தத்தில் ஒடுங்கி விடுவதே பிரத்யாஹாரம். தியானத்தின் சமயம் சாதகன் புலன்கள் எங்கும் போகாமல் இழுத்துப் பிடித்து சித்தத்தில் ஒடுக்கப்பட்டு விட்டால் அவனுக்கு பிரத்யாஹாரம் சித்தியாகி விட்டது என்று அறிய வேண்டும்.

மனம் புலன்கள் விஷயங்களை சிந்தித்துக் கொண்டிருந்தால் பிரத்யாஹாரம் சித்தியாக வில்லை என்று அறிய வேண்டும்.

**சூத்திரம் 55 :** *''தத: பரமா வஷ்யதேந்திரியாணாம்:''*

பிரத்யாஹாரம் சித்தியானவுடன் புலன்கள் தாமாக அடங்கி விடும். அதற்குப் பின் எந்த முயற்சியும் தேவை இல்லாமல் தியானம் கை கூடும். புலன்களின் செயல்பாடுகள் மறைந்து போகும்.

சாதன பாதம் – 55 சூத்திரம் முற்றும்.

தொடரும்....

# தசாவதாரப் பெருமாள்!

# ஆமையான கேசவன்

இறைவனின் அடுத்த அவதாரமும் ஒரு கடல் கோள் பற்றியதே. ஆதி பகவன் ஆமை (கூர்மம்) எடுத்தது எதற்காக?

தேவர்களின் செல்வங்கள் ஒரு முனிவன் சாபத்தினால் கடலில் மறைந்தன. அவற்றை மீட்கத் திருமால் செய்த முயற்சியே பாற்கடல் கடைதல்.

*''அண்ணல் செய்து அலைகடல் கடைந்து அதனுள்*
*கண்ணுதல் நஞ்சுண்ணக் கண்டவனே!*
*விண்ணவர் அமுது உண அமுதில் வரும்*
*பெண்ணமுது உண்ட எம்பெருமானே!''*

என்று, மந்திரமலையை மத்தாக்கி, வாசுகி எனும் பாம்பைக் கயிறாக்கி, தேவ–அசுரர் இரு வகையினருக்கும் இடையில் நின்று உதவியாகத் தன் கைகளைக் கொடுத்து இறைவன் பாற்கடலைக் கடைகிறபோது, மந்திரமலை கடல் சுழற்சியின் வேகம் தாங்காமல், கடலுள் ஆழ்ந்தது. கை கொடுத்த கேசவன் ஆமையாகித் தன் முதுகினால் மந்திர மலையைத் தாங்கிச் சுமந்தான். தொடர்ந்து கடல் கடைய உதவினான். சிறந்த குழல் அழகனான கேசவனின் கூந்தல் அவிழ்ந்து அலைந்தது. அவ்வழகிய தோற்றத்தை *''ஆமையான கேசவா!''* என்று ஈடுபட்டு அனுபவிக்கிறார் நம்மாழ்வார்.

*''மலங்கு விலங்கு நெடுவெள்ளம் மறுக அங்கோர் வரை நட்டு*
*இலங்கு சோதி ஆர் அமுது எய்தும் அளவு ஓர் ஆமையாய்*
*விலங்கல் திரியத் தடங்கடலுள் சுமந்து கிடந்த வித்தகன்''*

என்று பாடுகிறார் கலியன். கடல் கோளிலிருந்து அரிய பொருட்களை மீட்ட செய்தி அன்றோ இது!




நன்றி
பகவத் விஷய கட்டுரைகள்
(பாகம்-1)

சென்ற இதழின் தொடர்ச்சி...

# உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம்

- டாக்டர் கே.கே. ஏ.ரங்கராஜன்,
திருப்பதி, 9985599669.

காவிரியாற்றுக்குப் பல பெயர்கள் உண்டு. அதிலொன்று "ஹேமாபகா" என்பது. "கனகநதி" என்றும் அழைப்பர். இந்த ஆறு மேலான இடத்தில் ஆதிசேஷனுடைய மடியில் ஸ்ரீரங்கநாதனுடைய ரூபத்தில் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கு மவனுக்கு மாலையாக அமைந்துள்ளது. அவன் லோக ரக்ஷணமாகச் சிந்தை செய்து கொண்டிருக் கிறான். "உறங்குவான்போல்யோகு செய்த பெருமானல்லவா!" அவ்வாறு யோக நித்திரை யிலிருக்கும் இருப்பு அடியார்களுடைய எல்லா தோஷங்களையும் காணாக் கணக்கிட்டிருப்பதன் அடையாளமாகும். அவன் செய்கின்ற சிந்தை யானது திருவேங்கடமலை மீது ஸ்ரீநிவாஸனாக விளங்கிக்கொண்டு ஆர்வத்தோடும் கவர்ச்சி யோடும் திகழ்கின்றது புலனாகின்றது.

காவிரி நதியின் மண்ணிலிருந்து பொன்னை எடுக்கிறார்கள். ஆகையால்



இக்காவிரி நதிக்கு "ஹேமாபகா" என்றும் பெயர் வழங்கப்படுகிறது. *''திருவரங்கம் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி''* என்று குலசேகராழ்வார் (பெரு.திரு-1) அருளிச் செய்ததைக் காண்க. *''அசேஷேபி தோஷேயாதி அபி நிகில ஜந குணத்யான ஸாந்த்ராம் அதந்த்ராம் சிந்தாம் ததாந:''* என்கிறார். அதாவது ஆச்ரிதர்களுடைய குறை களைக்காணா திருப்பது என்பதாகும். அக்குறை களை குண மாகக் கொள்வதே வாத்ஸல்யமாகும். *''உறங்கு வான்போல்யோகு செய்த பெருமான்''* (திரு வாய்.5.4.11) என்னும் பாசுரத்தை அடி ஒற்றியே இச்சுலோகத்தின் இரண்டாவது, மூன்றா வது வரிகள் எழுதப்பட்டு உள்ளது. ஸ்ரீரங்கத்தில் சயனத்திருக்கும் ஸ்ரீரங்கநாதனே திருமலையில் எழுந்தருளியிருப்பதன் வாயிலாக அர்ச்சாவதார ஒற்றுமை காண முடிகிறது. *''விண்ணவர் கோன் விரையார்பொழில் வேங்கடவன், நின்மலன் நீதிவானவன் நீள்மதிள ரங்கத்தம்மான்''* (அமலன்-1) என்னும் திருப்பாண் ஆழ்வாரின் திருவாக்கும் இவ்வொற்றுமையை உறுதி செய்கின்றது. இச்சுலோகமானது எட்டடிகளாகக் கொண்ட சொல்லணியாகும்.

*தாம் சிந்தாம் ரங்கக்லுப்தாம்*
*வ்ருஷகிரி சிகரே ஸார்த்தயந் ரங்கநாதா*
*ஸ்ரீவத்ஸம் வா விபூஷாம்வ்ரகிண*
*மஹிராட் ஸூரிக்லுப்தாபராதம்*
*த்ருஷ்வா வாத்ஸல்ய மத்யுஜ்ஜ்வல*
*யிதுமவனே ஸத்க்ரதௌபந்த தீக்ஷோ*
*பத்நந் ஸ்வீயாங்க்ரியூபே நிகில*
*நரபசூந் கௌணரஜ்ஜ்வாடஸியஜ்வா*

**பதவுரை**

ரங்கநாத - ரங்கநாதா, ரங்கக்லுப்தாம் - ஸ்ரீரங்கத்தில் செய்த, தாம் - அந்த, சிந்தாம் -

சிந்தனையை, வ்ருஷகிரி சிகரே – வேங்கட மலையின் உச்சியில், ஸார்த்தயந் – அநுகூல முடையவாய், மஹிராட் ஸூரிக்லுப்தாபராதம் – அநந்தாசாரியராலே செய்யப்பட்ட அபராதமான, வ்ரகிணம் – காயத்தின் தழும்பை, ஸ்ரீவத்ஸம் வா விபுஷாம் – ஸ்ரீவத்ஸம் போன்ற ஆபரணமான, வாத்ஸல்யம் – வாத்ஸல்யகுணத்தை, அத்யுஜ்ஜ்வ லயிதும் – மிக மேன்மையாக ஒளிவிடச் செய்வ தற்கு, த்ருத்வா – நினைத்து, அவனே – ரக்ஷணத்தை, ஸத்க்ருதௌ – உயர்ந்த யாகத்தில், பத்ததீக்ஷ: – தீக்ஷை பெற்றவனாய், கௌணரஜ்ஜ்வா – குணஸமூஹங்களான கயிற்றால், நிகிலநர பசூந் – எல்லா ஜநங்களையும், பசுக்களையும், ஸ்வீய + அங்க்ரி யூபே – தன்னுடைய திருவடிகளைப் பசுவைக் கட்டுவிக்கும் கம்பத்திற்கு, பத்நந் – கட்டுவிக்கிறவனாய், யஜ்வாக அபி= யாகத்தை நடத்துபவனாய் (ஆனாய்).

**விரிவுரை**

எம்பெருமானை யக்ஞகர்த்தாகவும், நல்ல குணத்திரட்சி (திரிக்கப்பட்ட) கயிறாகவும், ரக்ஷணத்தை உயர்ந்த யாகமாகவும், எல்லா ஜநங்களையும் பசுவாகவும் இந்தச் சுலோகத்தில் உருவகப் படுத்தப்பட்டுள்ளது இச்சுலோகத்தின் சிறப்பம்சமாகும். முதல் சுலோகத்தின் முடிவில் "தாம்" என்னும் பதத்தால் இரண்டாம் சுலோகம் ஆரம்பமாகிறது.


அநந்தாழ்வார் புஷ்ப கைங்கர்யம் செய்வதற்காக ஒரு ஏரியை அமைத்தார். அதில் தானும் அவர்தம் தேவிகளுமே பணி செய்ய, ஸ்ரீநிவாசன் ஒரு சிறுவனாக வந்து உதவி செய்தான். இதை உணர்ந்த அநந்தாழ்வார், தப்பி ஓடிய அச்சிறுவனைத் தொடர முடியாமல் தன் கையி லிருந்த கடப்பாறையை அவன் மீது வீசி எறிந்தார். அதனால் அச்சிறுவனுக்கு மோவாயில் காயம் ஏற் பட்டது. மாலையில் வழக்கம்போல் கைங்கர்யத் திற்குச் சென்றபோது ஸ்ரீநிவாசனின் மோவாயிலில் இருந்து ரத்தம் பெருக, ஸ்ரீநிவாசனே சிறுவனாக வந்ததாக உணர்ந்தார். அப்போது ரங்கநாதா என்று விளித்து உலக ரக்ஷணத்தைப் பற்றி அவன் செய் கின்ற சிந்தனையைத் திருவேங்கட மலையில் போற் றும்படிச் செய்ததாயும், தான் (அநந்தாழ்வான்) செய்த அபராதத்துக்கு அடையாளமாக அவனுடைய மோவாயில் ஏற்பட்ட காயத் தழும்பை அவன், அவனுடைய வாத்ஸல்ய குணம் பெருமையாகப் பிரகாசிக்கச் செய்யவே தரித்துக் கொண்டதைப் போலவும், அவன் செய்கின்ற உலகரக்ஷணம் ஒரு புண்ணிய யாகம் போன்றது என்றும் அநந்தாழ்வான் கூறுவதைப்போல் ஆசிரியர் பகருகின்றார்.

"ஸ்ரீவத்ஸம் வா" என்பதில் "வா" என்பது அசைச் சொல் என்று அரும்பதவுரை கூறுகின்றது. அதாவது கடப்பாறையால் அடித்ததனால் மோவாயில் ஏற்பட்ட தழும்பை எம்பெருமான் தரித்திருப்பதை உயர்வாகச் சொல்லப்பட்டுள்ளது. ***"குருபரம்பராசேகராய மானஸ்ய ஸ்ரீரங்கேசயஸ்ய ஸ்ரீவேங்கடேசஸ்யச ஐக்யமநுபவதி உபாப்யாம் பத்யாப்யாம்"*** என்கிறபடி ஸ்ரீரங்கநாதனுக்கும் ஸ்ரீநிவாசனுக்கும் இடையே ஒற்றுமை அநுஸந்திக்கப்படுவதாக வடமொழி வியாக்யான வல்லுநர் கூற்று.

*தொடரும்....*



# வைணவக்குறுக்கெழுத்துப் புதிர் -97



**இடமிருந்து வலம்**

1. தேவர்களின் தலைவன்....(6)
4. மேரு மலையைத் தாங்க திருமால் எடுத்த அவதாரம்....(2)
5. ஜனகரின் மருமகன்...(7)ப் பிரபு
9. மாவலியிடம் மூன்றடி மண் கேட்டு பகவான் எடுத்தது....(3) அவதாரம்
12. 16 வயதிலேயே வேங்கடவனை நேரில் தரிசித்தவர்....(6)
17. பாவ புண்ணியக் கணக்கை எழுதுபவர்...(8)
18. மகாபாரதத்தில் வள்ளல்...(4)
20. இந்திரஜித்தின் தாய்....(5)
22. வேதவியாசர் இயற்றிய காவியம் ...(6)

**வலமிருந்து இடம்**

2. திருதராஷ்டிரன் மற்றும் பாண்டுவின் சகோதரர்....(6)
3. ராவணனின் தம்பி...(3)கர்ணன்
4. ஸ்ரீபத்மாவதியின் தந்தை.... (6)
6. பக்தன் பிரகலாதனுக்காக பகவான் எடுத்தது ...(5) அவதாரம்
7. ஸ்ரீகிருஷ்ணரின் நண்பர்....(4)
11. இதிகாசங்களுள் ஒன்று...(5)
15. ஸ்ரீகிருஷ்ணரின் தாயார்...(3)
16. ஆஞ்சனேயரின் தந்தை....(3)
19. பிரம்மாவின் துணைவி....(7)
21. கௌரவர்களின் தாய்....(4)
23. செல்வத்தைக் கொடுப்பவள்....(5)

**மேலிருந்து கீழ்**

1. அமிர்தம் வேண்டி பாற்கடலைக் கடைந்தவர்கள்.......(7)
5. ஒரு சொல், ஒரு வில், ஒரு இல் என வாழ்ந்து காட்டியவர்....(3)
10. உஷா தேவியின் மகள்....(3)

**கீழிருந்து மேல்**

7. பாண்டவர்களின் தாய்....(3)
8. ஸ்ரீநிவாசர் திருமணத்திற்கு கடன் கொடுத்தவர்......(4)
13. பண்டைய காலத்தில் மாணவர்கள் கலை பயின்றது..(5)
14. உயிர்களின் வாழ்நாள் கணக்கை முடிப்பவர்.....(8)
20. இரதிதேவியின் கணவர்....(5)


தொகுப்பு : திருமதி இராஜகுமாரி
ஆரணி, 99762 38430



புதிருக்கு விடை அறிய 35ம் பக்கம் பார்க்கவும்...


## மங்கள சுலோகங்கள்

குங்குமாங்கிததேஹாய
குந்தேந்துதவளாய ச ।
விஷ்ணுவா ஹ நமஸ்துப்யம்
பக்ஷிராஜாய தே நமஹ ॥

குங்குமம் போன்ற செந்நிற உடலும், மல்லிகை, சந்திரன் போன்ற வெண்ணிறக் கழுத்துமுடைய விஷ்ணுவின் வாகனமாகிய பட்சி ராஜனாகிய கருட பகவானே உனக்கு வணக்கம்.



# கோமாதா வழிபாடு



## கோமாதாவை வழிபடும் முறை

அனைத்து தேவதைகளின் வடிவமான "கோமாதா" என்று அழைக்கப்படும் பசுவினை நேரடியாகவோ, சிலை வடிவிலோ கீழ்க்காணும்படி வழிபடுதல் வேண்டும். (முதலில் தீபாராதனை செய்து, பின்னர் இங்ஙனே வழிபடுதல் வேண்டும்)

## கோ வழிபாடு

நமோ ப்ரஹ்மண்ய தேவாய கோ ப்ராஹ்மண ஹிதாய ச ।
ஜகத்திதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம: ॥
க்ருத க்ஷீர ப்ரதா காவோ க்ருதயோன்யோ க்ருதோத் பவா: ।
க்ருதனத்யோ ம்ருதாவர்தா: தா மே ஸந்து ஸதா க்ருஹே ॥
காவோ மமாக்ரதோ நித்யம் காவ: ப்ருஷ்டத ஏவச ।
காவோ மே ஸர்வதச்சைவ கவாம் மத்யே வஹா ம்யஹம் ॥

இங்ஙனே பிரார்த்து பின்னர் ஆசமனம் செய்து, பிராணாயாமம், சங்கல்பம் செய்த பிறகு...

''மம ச்ருதி ஸ்ம்ருதி புராணோக்த சர்வபல ப்ராப்த்யர்தம், சர்வபீடா பரிஹாரார்தம் ஜ்ஞான ப்ரார்தித்வாரா மோக்ஷ பலாவாப்த்யர்தம், அகண்டித ஸுக சௌபாக்ய ஸந்த த்யாயுராரோக்யைஸ்வர்யா பிவ்ருத்த்யர்தம், கல்போக்த ப்ரகாரேண கோ பூஜாம் கரிஷ்யே'' (பசுவின் மீது மலர், அக்ஷதைத் தூவி, வணங்குதல் வேண்டும்). பின் கலச பூஜை, கணபதி பூஜை செய்தல் வேண் டும். கணபதி பூஜைக்கு பிறகு கீழ்க்காணும்படி தியானித்து மலர், அக்ஷதையைப் பசுவின் பாதத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

## தியானம்

நமோ கோப்ய: ஸ்ரீமதீப்ய: சௌரபேயீப்ய ஏவ ச ।
நமோ ப்ரஹ்மஸுதாப்யச்ச பவித்ராப்யோ நமோ நம: ॥
கவா மங்கேஷு திஷ்டந்தி புவனானி சதுர்தச ।
யஸ்மாத்தஸ்மா ச்சிவம் மே ஸ்யாதிஹலோகே
பரத்ரச ॥

ஸ்ரீகோமாத்ரே நம: த்யானம் சமர்பயாமி

## ஆவாஹனம்

ஆகச்ச தேவி கல்யாணீ! சுபாம் பூஜாம் க்ருஹாண ச ।
வத்சேன ஸஹிதாம் த்வாऽஹம் தேவீ மாவாஹயா
ம்யஹம் ॥

ஸ்ரீகோமாத்ரே நம: ஆவாஹனம் சமர்பயாமி

மலர், அக்ஷதை சமர்ப்பித்து வணங்குதல் வேண்டும்.

## ஆசனம்

நாநாரத்ன ஸமாயுக்தம் கார்தஸ்வர விபூஷிதம் ।
ஆசனம் தே மயா தத்தம் க்ருஹாண ஜகதம்பிகே ॥

ஸ்ரீகோமாத்ரே நம: திவ்ய ஸிம்ஹாஸனம் சமர்பயாமி

மலர், அக்ஷதையைச் சமர்ப்பித்து வணங்குதல் வேண்டும்.

## பாத்யம்

ஸௌரபேயி! ஸர்வ ஹிதே! பவித்ரே! பாபநாசினி!
க்ருஹ்ணீ ஷ்வைத ந்மயா தத்தம் பாத்யம்
த்ரைலோக்யவந்திதே!

ஸ்ரீகோமாத்ரே நம: பாத்யம் சமர்பயாமி

கலசத்தில் இருக்கும் நீரினை உத்தரிணியால் பசுவின் பாதங்களைக் கழுவுதல் வேண்டும்.

## அர்க்யம்

ஸர்வ தேவமயே! தேவி! ஸர்வதீர்த்தமயே! சுபே!
க்ருஹாணார்க்யம் மயா தத்தம் சௌரபேயி!
நமோऽஸ்துதே

ஸ்ரீகோமாத்ரே நம: அர்க்யம் சமர்பயாமி

கலச நீரினை உத்தரிணியால் எடுத்துக் கொண்டு, கோ மாத்ரு ஹஸ்தத்தைக் கழுவியதாக எண்ணி அர்க்ய பாத்திரத்தில் விட வேண்டும்.

## ஆசமனம்

தேஹஸ்திதாஸ்தி ருத்ராணி சங்கரஸ்ய ஸதா ப்ரியா।
தேனுரூபேண ஸா தேவீ மம பாபம் வ்யபோஹது ॥

ஸ்ரீகோமாத்ரே நம: முகே ஆசமனியம் சமர்பயாமி

உத்தரிணி நீரினை பசுவின் முகத்திற்கு மும்முறைக் காட்டி அர்க்ய பாத்திரத்தில் விட வேண்டும்.

## ஸ்நானம்

யா லக்ஷ்மீ: ஸர்வலோகேஷு யா ச தேவே
ஷ்வவஸ்திதா ।
தேனுரூபேண ஸா தேவீ மம பாபம் வ்யபோஹது ॥

ஸ்ரீகோமாத்ரே நம: ஸ்நானம் சமர்பயாமி

பசுவிற்கோ, பசுவின் சிலைக்கோ ஸ்நானம் செய்திடல் வேண்டும். வாய்ப்பிருப்பின் "ஸ்ரீசூக்தம்" கூறி அபிஷேகம் செய்திடவும்.

**வஸ்திரம்**

ஆச்சாதனம் கவே தத்யாம் ஸம்யக் சுத்தம் ஸுசோபனம் ।
ஸுரபி ர்வஸ்த்ரதானேன ப்ரீயதாம் பரமேஸ்வரி ॥
ஸ்ரீகோமாத்ரே நம: வஸ்த்ரம் சமர்பயாமி

பசுவின் மேனியைத் துடைத்து வஸ்திரத்தைப் போர்த்துதல் வேண்டும்

**கந்தம்**

ஸர்வதேவமயே தேவி! சந்தனம் சந்த்ரசந்நிபம் ।
கஸ்தூரி குங்குமாட்யஞ்ச சுகந்தம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥
ஸ்ரீகோமாத்ரே நம: திவ்யபரிமள ஸ்ரீசந்தனம் சமர்பயாமி

சந்தனம், குங்குமம் வைக்கவும். (கால்கள், முகம், கொம்புகள், வால் முதலியவற்றிற்கு)

**அக்ஷதைகள்**

சாலீயாம் ச்சந்த்ரவர்ணாஞ்ச்ச ஹரித்ராமிச்ரிதான் ஸுபான் ।
அக்ஷதாம் ச்சார்பயே துப்யம் க்ருஹாண ஜகதம்பிகே ॥
கோமாத்ரே நம: அலங்கரணார்தம் அக்ஷதான் சமர்பயாமி

அக்ஷதையைப் பசுவின் மீது தூவி வணங்கவும்.

**மலர் மாலை/வனமாலை**

துலஸீ குந்தமந்தார பாரிஜாதாம்புஜை ர்யுதாம் ।
வனமாலாம் ப்ரதாஸ்யாமி க்ருஹாண ஜகதீஸ்வரி ॥
ஸ்ரீகோமாத்ரே நம: புஷ்பமாலிகாம் சமர்பயாமி

மலர் மாலையைப் பசுவிற்கு அணிவித்து வணங்குதல் வேண்டும்.

பசுவின் ஒவ்வொரு அங்கமும் தேவதைகளின் வடிவாக எண்ணி அங்க பூஜை செய்திடல் வேண்டும்.

**(கோ: ஸர்வாங்கேஷு தேவதாஹ்வானம்)**

கோபூஜாங்கத்வேன கோ: அங்கேஷு ஸர்வான் தேவான் ஆவாஹயாமி

ச்ருங்கமூலயோ: - பிரம்மா விஷ்ணு ஆவாஹயாமி (கொம்புகளின் நுனி), ச்ருங்காக்ரயோ: - சர்வதீர்த்தாணி ஆவாஹயாமி (கொம்புகளின் அடி), லலாடே - மஹாதேவம் ஆவாஹயாமி (நெற்றி), லலாடாக்ரே - மஹாதேவம் ஆவாஹயாமி (நெற்றியின் மேற்பகுதி), நாஸாதண்டே - சண்முகம் ஆவாஹயாமி (மூக்கின் நுனி), கர்ணயோ: - அஸ்வினௌ ஆவாஹயாமி (காதுகள்), சக்ஷுஷோ: - சசி பாஸ்கரௌ ஆவாஹயாமி (கண்கள்), ஜிஹ்வாயாம் - வருணம் ஆவாஹயாமி (நாக்கு), ஹுங்காரே - சரஸ்வதீம் ஆவாஹயாமி (ஹுங்காரம்), கண்டயோர்மத்யே - தர்மம் ஆவாஹயாமி (தாடை), ஓஸ்ட்யோ : - ஸந்த்யாத்வயம் ஆவாஹயாமி (உதடுகள்), க்ரீவாயாம் - இந்த்ரம் ஆவாஹயாமி (கழுத்து), குக்ஷிதேசே - ரக்ஷாம்ஸி ஆவாஹயாமி (வயிறு), உரஸி - ஸாத்யான் ஆவாஹயாமி (மார்பு), சதுஷ்பாதேஷு - தர்மம் ஆவாஹயாமி (நான்கு கால்கள்), குரமத்யே - கந்தர்வான் ஆவாஹயாமி (குளம்புகளிடையில்), குராக்ரே - பன்னகான் ஆவாஹயாமி (குளம்புகளின் நுனி), குர பார்ஸ்வேஷு - அப்ஸரஸ: ஆவாஹயாமி (குளம்பு களின் பக்கவாட்டில்) வ்ருஷ்டே - ஏகாதசருத்ரான் ஆவாஹயாமி (முதுகு கடைப்பகுதி), சர்வசந்திஷு - வஹூன் ஆவாஹயாமி (அவயவ துவாரங்கள்), ச்ரோணிதடே - பித்ரூன் ஆவாஹயாமி (பிட்டம்), லாங்கூலே - சோமம் ஆவாஹயாமி (வால்), வால ரோமேஷு ஆதித்யரஸ்மீன் ஆவாஹயாமி (வால் நுனி முடி), மூத்ரே - கங்காம் ஆவாஹயாமி (கோமியம்), க்ஷீரே - சரஸ்வதீம் ஆவாஹயாமி (பால்), தத்னி - நர்மதாம் ஆவாஹயாமி (தயிர்), சர்பிஷி - ஹுதாசனம் ஆவாஹயாமி (நெய்) ரோமஸு - த்ரயஸ்த்ரிம்சத்கோடிதேவான் ஆவாஹயாமி (முடிகள்), உதரே - ப்ருதிவீம் ஆவாஹயாமி (வயிறு), வயோதரேஷு - ஸாகரான் ஆவாஹயாமி (பால்மடி)

கோ: சர்வாங்கேஷு சர்வான் தேவான் ஆவாஹயாமி

**அங்கபூஜை**

நந்தின்யே நம:-கோ: பௌதௌ பூஜயாமி
ஜகதுத்பத்தி காரணாயை நம:-கோ: ஜானுநீ பூஜயாமி
ஜகத்ரக்ஷணாயை நம:-கோ: கடிம் பூஜயாமி
பவித்ராயை நம:-கோ: கண்டம் பூஜயாமி
சுசீலாயை நம:-கோ: ச்ருங்கே பூஜயாமி
யஜ்ஞஸாதநாயை நம:-கோ: முகம் பூஜயாமி
விஷ்வஸ்யாக ப்ரணாசின்யை நம:-கோ: சிர:பூஜயாமி

(பின்னர் கோ ரகசிய நாமாவளியால் பசுவை பூஜித்தல் வேண்டும்)

துளசீ குந்த மந்தார ஜாதீ புன்னாக சம்பகை: ।
கதம்ப கரவீரைச்ச குசுமை ச்சத பத்ரகை: ॥
நீலாம்புஜை: பில்வபத்ரை: சம்பகை: ருத்ர ரூபிணி ।
பூஜயிஷ்யாமஹம் பக்த்யா ஸங்க்ருஹ ணாச்யுதார்சிதே ॥
ஸ்ரீகோமாத்ரே நம: பத்ர புஷ்பை: பூஜயாமி

(கோமாதா ரகசிய நாமாவளியைக் கூறி, பத்ர புஷ்பங்களால் பசுவினைப் பூஜித்தல் வேண்டும்.)



# "கோ" ரஹஸ்ய நாமாவளி

ஓம் ஸ்ரீ கிருஷ்ண வல்லபாயை நம:

ஓம் ஸ்ரீ கிருஷ்ணாய நம:

ஓம் ஸ்ரீ கிருஷ்ண பாரிஜாதாயை நம:

ஓம் ஸ்ரீ கிருஷ்ண ப்ரியாயை நம:

ஓம் ஸ்ரீ கிருஷ்ண ரூபாயை நம:

ஓம் ஸ்ரீ கிருஷ்ண ப்ரேம விவர்தின்யை நம:

ஓம் ஸ்ரீ கமனீயாயை நம:

ஓம் ஸ்ரீ காமதேனவே நம:

ஓம் ஸ்ரீ கல்யாண்யை நம:

ஓம் ஸ்ரீ கல்பவந்திதாயை நம: (10)

ஓம் ஸ்ரீ கல்ப விருக்ஷ ஸ்வரூபாயை நம:

ஓம் ஸ்ரீ திவ்யகல்ப சமலங்க்ருதாயை நம:

ஓம் ஸ்ரீ ஸ்ரீக்ஷீரார்ணவசுஸம்பூதாயை நம:

ஓம் ஸ்ரீ க்ஷீரதாயை நம:

ஓம் ஸ்ரீ க்ஷீரரூபிண்யை நம:

ஓம் ஸ்ரீ நந்தாதி கோபவினுதாயை நம:

ஓம் ஸ்ரீ நந்தின்யை நம:

ஓம் ஸ்ரீ நந்தன ப்ரதாயை நம:

ஓம் ஸ்ரீ பிரஹ்மானந்த வித்யாயினை நம:

ஓம் ஸ்ரீ சர்வதேவகண ஸ்துத்யாயை நம: (20)

ஓம் ஸ்ரீ சர்வதர்மஸ்வரூபிண்யை நம:

ஓம் ஸ்ரீ சர்வபூதாவனரதாயை நம:

ஓம் ஸ்ரீ சர்வதாயை நம:

ஓம் ஸ்ரீ சர்வமோததாயை நம:

ஓம் ஸ்ரீ சிஷ்டேஷ்டாயை நம:

ஓம் ஸ்ரீ சிஷ்ட வரதாயை நம:

ஓம் ஸ்ரீ ஸ்ருஷ்டிஸ்திதிலயாத்மிகாயை நம:

ஓம் ஸ்ரீ சுரப்யை நம:

ஓம் ஸ்ரீ சௌரபேய்யை நம:

ஓம் ஸ்ரீ சுராசுர நமஸ்க்ருதாயை நம: (30)

ஓம் ஸ்ரீ சித்திப்ரதாயை நம:

ஓம் ஸ்ரீ அபீஷ்டசித்தி ப்ரவர்ஷிண்யை நம:

ஓம் ஸ்ரீ ஜகத்திதாயை நம:

ஓம் ஸ்ரீ ப்ரஹ்மபுத்ரியை நம:

ஓம் ஸ்ரீ காயத்ரியை நம:

ஓம் ஸ்ரீ ஏகஹாயன்யை நம:

ஓம் ஸ்ரீ கந்தர்வாதிஸமாராத்யாயை நம:

ஓம் ஸ்ரீ ராதாஹஸ்தோ பலாலிதாயை நம:

ஓம் ஸ்ரீ யக்ஞங்காயை நம:

ஓம் ஸ்ரீ யக்ஞ பலதாயை நம: (40)

ஓம் ஸ்ரீ யக்ஞேஸ்யை நம:

ஓம் ஸ்ரீ யக்ஞ ரூபிண்யை நம:

ஓம் ஸ்ரீ ஹவ்யகவ்ய ப்ரதாயை நம:

ஓம் ஸ்ரீ ஸ்ரீதாயை நம:

ஓம் ஸ்ரீ ஸ்தவ்யபவ்யக்ரமோஜ்ஜ்வலாயை நம:

ஓம் ஸ்ரீ புத்திதாயை நம:

ஓம் ஸ்ரீ ருத்திதாயை நம:

ஓம் ஸ்ரீ புத்த்யை நம:

ஓம் ஸ்ரீ தனதான்ய விவர்தின்யை நம:

ஓம் ஸ்ரீ யசோதாயை நம:(50)

ஓம் ஸ்ரீ சுயச: பூர்ணாயை நம:

ஓம் ஸ்ரீ யசோதானந்தவர்தின்யை நம:

ஓம் ஸ்ரீ தர்மஜ்ஞாயை நம:

ஓம் ஸ்ரீ தர்மவிபவாயை நம:

ஓம் ஸ்ரீ தர்மரூபதனூருஹாயை: நம:

ஓம் ஸ்ரீ விஷ்னு பாதோத்பவீப்ரக்யாயை நம:

ஓம் ஸ்ரீ வைஷ்ணவ்யை நம:

ஓம் ஸ்ரீ விஷ்னு ரூபிண்யை நம:

ஓம் ஸ்ரீ வசிஷ்ட பூஜிதாயை நம:

ஓம் ஸ்ரீ சிஷ்டாயை நம: (60)

ஓம் ஸ்ரீ சிஷ்டேஷ்டாயை நம:

ஓம் ஸ்ரீ சிஷ்டகாமதுஹே நம:

ஓம் ஸ்ரீ திலீபஸேவிதாயை நம:

ஓம் ஸ்ரீ திவ்யாயை நம:

ஓம் ஸ்ரீ குரபாவித விஷ்டபாயை நம:

ஓம் ஸ்ரீ ரத்னாகர சமுத்பூதாயை நம:

ஓம் ஸ்ரீ ரத்னதாயை நம:

ஓம் ஸ்ரீ சக்ர பூஜிதாயை நம:

ஓம் ஸ்ரீ பீயுஷ வர்ஷிண்யை நம:

ஓம் ஸ்ரீ புண்யாயை நம: (70)

ஓம் ஸ்ரீ புண்யா புண்ய பல ப்ரதாயை நம:

ஓம் ஸ்ரீ பய: ப்ரதாயை நம:

ஓம் ஸ்ரீ க்ருதாயை நம:

ஓம் ஸ்ரீ க்ருதத சம்பவாயை நம:

ஓம் ஸ்ரீ கார்தவீர்யார்ஜுனம்ருதிஹேதவே நம:

ஓம் ஸ்ரீ கேதுக சன்னுதாயை நம:

ஓம் ஸ்ரீ ஜமதக்னி க்ருதாஜஸ்ர சேவாயை நம:

ஓம் ஸ்ரீ சந்துஷ்ட மானஸாயை நம:

ஓம் ஸ்ரீ பாதரேணு பாலித பூதலாயை நம: (80)

ஓம் ஸ்ரீ சவத்ஸாயை நம:

ஓம் ஸ்ரீ வத்ஸகாராதி பாலிதாயை நம:

ஓம் ஸ்ரீ பக்தவத்ஸலாயை நம:

ஓம் ஸ்ரீ வ்ருஷதாயை நம:

ஓம் ஸ்ரீ க்ருஷிதாயை நம:

ஓம் ஸ்ரீ ஹேமச்ருங்காக்ர தலசோபிதாயை நம:

ஓம் ஸ்ரீ பவ்யாயை நம:

ஓம் ஸ்ரீ பாவிதாயை நம:

ஓம் ஸ்ரீ பவநாசின்யைநம:

ஓம் ஸ்ரீ பக்திமுக்தி ப்ரதாயை நம: (90)

ஓம் ஸ்ரீ காந்தாயை நம:

ஓம் ஸ்ரீ காந்தாஜன சுபங்கர்யை நம:

ஓம் ஸ்ரீ சுரூபாயை நம:

ஓம் ஸ்ரீ பஹுரூபாயை நம:

ஓம் ஸ்ரீ அச்சாயை நம:

ஓம் ஸ்ரீ கற்பூராயை நம:

ஓம் ஸ்ரீ கபிலாயை நம:

ஓம் ஸ்ரீ அமலாயை நம:

ஓம் ஸ்ரீ சாது சீலாயை நம:

ஓம் ஸ்ரீ சாதுப்ருந்த நிஷேவிதாயை நம: (100)

ஓம் ஸ்ரீ சர்வவேதமய்யை நம:

ஓம் ஸ்ரீ சர்வதேவரூபாயை நம:

ஓம் ஸ்ரீ ப்ரபாவத்யை நம:

ஓம் ஸ்ரீ வசூனாம் துஹித்ரே நம:

ஓம் ஸ்ரீ ருத்ரமாத்ரே நம:

ஓம் ஸ்ரீ ஆதித்ய சஹாதர்யை நம:

ஓம் ஸ்ரீ துஸ்ட்யை புஸ்ட்யை நம:

ஓம் ஸ்ரீ ஸ்வாதாயை நம:

ஓம் ஸ்ரீ மேதாயை நம:

ஓம் ஸ்ரீ புத்யை நம:

ஓம் ஸ்ரீ சித்யை நம: (110)

ஓம் ஸ்ரீ ஸ்ம்ருத்யை நம:

ஓம் ஸ்ரீ த்ருத்யை நம:

ஓம் ஸ்ரீ காந்த்யை நம:

ஓம் ஸ்ரீ லக்ஷ்ம்யை நம:

ஓம் ஸ்ரீ மஹா மாயாயை நம:

ஓம் ஸ்ரீ மஹாதேவாதிவந்திதாயை நம:

ஓம் ஸ்ரீ தீர்தஸ்வரூபாயை நம:

ஓம் ஸ்ரீ தேவேஸ்யை நம:

ஓம் ஸ்ரீ லோகானாம் மலஹாரிண்யை நம:

ஓம் ஸ்ரீ ஜாஹ்னவ்யை நம: (120)

ஓம் ஸ்ரீ யமுனாயை நம:

ஓம் ஸ்ரீ கோதாயை நம:

ஓம் ஸ்ரீ சூர்ய புத்ர்யை நம:

ஓம் ஸ்ரீ சரஸ்வத்ர்யை நம:

ஓம் ஸ்ரீ யோகாநந்தாயை நம:

ஓம் ஸ்ரீ யோகசித்தி ப்ரதாயை நம:

ஓம் ஸ்ரீ யோகி சேவிதாயை நம:

ஓம் ஸ்ரீ ஸ்ரீகர்யை நம:

ஓம் ஸ்ரீ ஸ்ரீமத்யை நம:

ஓம் ஸ்ரீ ஸ்ரீதாயை நம: (130)

ஓம் ஸ்ரீ மத்கோலோக வல்லபாயை நம:

ஓம் ஸ்ரீ கோமாத்ரே நம: (132)

ஸ்ரீ கோமாத்ரே நம: நாநாவித புஷ்பாணி சமர்பயாமி

### தூபம்

தேவத்ருமரஸோத்பூதோ கோக்ருதேன ஸமன்வித: ।
ப்ரயச்சாமி மஹாபாகே தூபோ5யம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥
ஸ்ரீகோமாத்ரே நம: தூபம் ஆக்ரபயாமி

### தீபம்

(மூன்று திரிகள் வைத்து விளக்கேற்றவும், இரண்டு திரிகள் வைப்பது சாஸ்திர முறை அல்ல)

ஆனந்தக்ருத் ஸர்வலோகே தேவாநான்ச ஸதாப்ரிய: ।
கௌஸ்த்வம் பாஹி ஜகன்மாத: தீபோ5யம்
ப்ரதிக்ருஹ்யதாம் ॥
ஸ்ரீகோமாத்ரே நம: க்ருதவர்தி தீபம் சமர்பயாமி

### நைவேத்யம்

(பச்சை புல்லை உணவாக அளிக்கவும்)

ஸுரபி ஸ்த்வம் ஜகன்மாத: தேவி! விஷ்ணு பதேஸ்திதா ।
ஸர்வதேவ மயே க்ராஸம் மயாதத்த மிமம் க்ரன ॥
ஸ்ரீகோமாத்ரே நம: நைவேத்யம் சமர்பயாமி

(வெண்பொங்கல் உணவாக அளிக்கவும்)

க்ருசரான்ன ஸமாயுக்தம் கோக்ருதேன பரிப்லுதம் ।
நை வேத்யன்ச மயா தத்தம் ஸுரபி: ப்ரீயதா மிதி ॥
ஸ்ரீகோமாத்ரே நம: க்ருசரன்னம் சமர்பயாமி

### தாம்பூலம்

பூகீபலஸமாயுக்தம் நாகவல்லீ தளைர்யுதம் ।
ஸௌரபேயி! நம ஸ்துப்யம் தாம்பூலம்
ப்ரதிக்ருஹ்யதாம் ॥
ஸ்ரீகோமாத்ரே நம: தாம்பூலம் சமர்பயாமி

### நீராஜனம்

கற்பூர ஆரத்தி ஏற்றி, இதற்கு துணையாக நெய்த்திரிகளை உபயோகித்தல் வேண்டும்.



"கோமாதா"வை பூஜிக்கும் எம்பெருமான் ஸ்ரீகிருஷ்ணர்

நீராஜனம் க்ருஹாணேதம் பஞ்சவர்தி ஸமன்விதம் ।
தேஜோராசிமயம் தத்தம் க்ருஹாணத்வம்
ஸுரேஸ்வரி ॥
ஸ்ரீகோமாத்ரே நம: கற்பூர நீராஜனம் சமர்பயாமி
நீராஜனானந்தரம் சுத்தாசமநீயம் சமர்பயாமி

என்று கூறி உத்தரிணி நீரினை பசுவிற்கு காட்டி, அர்க்ய பாத்திரத்தில் விடவேண்டும்.

### புஷ்பாஞ்சலி

கீழ்க்காணும் சுலோகங்களைக் கூறியபடி மலர்களை பசுவின் பாதத்தில் சமர்ப்பித்து வணங்குதல் வேண்டும்)

கோவோ மமாக்ரத ஸ்ஸந்து, காவோ மே ஸந்து
ப்ருஷ்டத: ।
கோவோ மே ஹ்ருதயே நித்யம் கவாம் மத்யே வசா
ம்யஹம் ॥
ஸர்வதேவமயே! தேவி ஸர்வதேவை ரலங்க்ருதே ।
மாதர்மமாபிலஷிதம் ஸபலம் குரு நந்தினி ॥

### பிரதக்ஷிண நமஸ்காரம்

(பசுவினை மூன்று முறை இடமிருந்து வலமாகச் சுற்றி வந்து, சாஸ்டாங்கமாக வணங்குதல் வேண்டும்)

காம் த்ருஷ்ட்வாது நமஸ்க்ருத்ய குர்யா ச்சைவ
ப்ரதக்ஷிணம் ।
ப்ரதக்ஷிணீக்ருதா தேன ஸப்தத்வீபா வசுந்தரா ॥
மாதர ஸ்ஸர்வபூதானாம் காவ ஸ்ஸர்வஸுகப்ரதா: ।
வ்ருத்தி மாகாங்க்ஷதா நித்யம் காவா: கார்யா:
ப்ரதக்ஷிணா: ॥
கோமாத்ரே நம: ப்ரதக்ஷிண நமஸ்காரான்
சமர்பயாமி

### நமஸ்காரம்

க்ஷீரோதார்ணவ ஸம்பூதே! ஸுரா5ஸுர நமஸ்க்ருதே।
மாத ர்மமாபிலஷிதம் ஸபலம் குருநந்தினி ॥
தேஹஸ்தா யாச ருத்ராணீ சங்கரஸ்ய ஸதாப்ரியா ॥
தேனுரூபேண ஸா தேவீ மம சாந்தீம் ப்ரயச்சது ।
ஸ்ரீகோமாத்ரே நம: நமஸ்காரான் சமர்பயாமி ॥

(பின்னர் மலர்கள் மற்றும் அக்ஷதையைக் கைகளில் ஏந்திக் கொண்டு மூன்று உத்தரிண நீரினை அதில் விட்டு கீழ்க்காணும் சுலோகத்தைக் கூறி தட்டில் விட வேண்டும்)

அனயா த்யானாவாஹனாதி ஷோடசோபசார
பூஜாய மாதா ஸௌரபேயீ ப்ரீணாது
"சர்வம் ஸ்ரீக்ருஷ்ணார்பணமஸ்து"

பின்னர் பசுவை மேய்ச்சலுக்கு அனுப்புதல் வேண்டும்.



# வரலக்ஷ்மி விரதம்

– திரு. எஸ். ராமதாஸ்,
புதுச்சேரி, 9976889162.

### மாதுளைக்குள் குழந்தை

பெருமாள் பக்தரான மன்னர் பத்மாட்சன் காட்டிற்குச் சென்று தவத்தில் ஈடுபட்டார். அவருக்கு காட்சியளித்த எம்பெருமான் விரும்பும் வரம் தருவதாகத் தெரிவித்தார். “எனக்கு லக்ஷிமித் தாயார் மகளாகப் பிறக்க வேண்டும்” எனக் கேட்டார் மன்னர். பத்மாட்சனிடம் ஒரு மாதுளம் பழத்தைக் கொடுத்த பெருமாள் “உன் விருப்பம் விரைவில் நிறைவேறும்” என அருள்புரிந்தார். மன்னர் பெற்ற அந்தப் பழம் பெரிதாக வளர்ந்தது. வியப்படைந்த மன்னர் அதைப் பிளந்த போது அதில் ஒரு புறம் மாதுளை முத்துக்களும், மறுபுறம் பேரழகு மிக்க பெண் குழந்தையும் இருப்பதைக் கண்டார். தாமரை மலர் போல சிரித்த முகத்துடன் காட்சியளித்த குழந்தைக்கு “பத்மை” எனப் பெயரிட்டனர். இதனடிப்படையில் மஹாலக்ஷ்மிக்கு பிடித்தமான மாதுளையைப் பிரசாதமாகப் படைத்து வழிபடுவது வழக்கம்.

### வந்தாள் மஹாலக்ஷ்மியே

மஹாவிஷ்ணுவும், மகாலக்ஷ்மியும் மேருமலைக்கு வந்தபோது கிளி முகம் கொண்ட சுகபிரம்ம முனிவர் அவர்களிடம் ஆசி பெற்றார். அப்போது முனிவர் “தாயே! மனிதர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தால் உன் அருளைப் பெற முடியும்” எனக் கேட்டார். அதற்கு மஹாலக்ஷ்மி “இனிமையாகப் பேசுதல், இருப்பதை பிறருக்கும் பகிர்ந்து கொடுத்தல், சாந்தமுடன் பழகுதல், பணிவுடன் நடத்தல், பெண்களை மதித்தல், நல்லவர் உபதேசம் கேட்டல், மனம் மொழி மெய்களால் தூய்மை காத்தல் ஆகிய பண்புகள் கொண்ட நல்லவர்களிடம் நிரந்தரமாகக் குடியிருப்பேன்” என்றாள். நல்லவன் வாழ்வான் என்பதற்கு இதை விட வேறு என்ன உதாரணம் இருக்க முடியும்.

### மஞ்சள் வளத்துடன் வாழ்க

ஆவணி மாத பௌர்ணமிக்கு முன்பு வரும் வெள்ளிக்கிழமையன்று சுமங்கலிகள் கொண்டாடுவது வரலக்ஷ்மி விரதம். இந்நாளில் மஹாலக்ஷ்மியை வழிபடுவது சிறப்பு. தண்ணீர் அல்லது அரிசி நிரம்பிய குடத்தில் தேங்காய், மாவிலை, லக்ஷ்மியின் மஞ்சள் முகம் வைத்து அலங்கரிப்பர். திருமணமான பெண்கள் இந்த விரதமிருப்பது நல்லது.

### ஆண்களுக்கு பலன்

வரலக்ஷ்மி விரதமிருக்கும் பெண்களுக்கு அனைத்து உதவிகளையும் ஆண்கள் செய்தால் விரதத்தின் பலன் அவர்களுக்கும் கிடைக்கும். மஹாலக்ஷ்மியின் அருளால் கையில் பணப் புழக்கம் இருக்கும்.

### பூஜைக்கு தயாராகும் முன்

வரலக்ஷ்மி விரதத்தை வீட்டில் செய்ய இந்தப் பொருட்களைச் சேகரிப்பது அவசியம். பிள்ளையார் பிடிக்க மஞ்சள் பொடி அல்லது பசுஞ்சாணம், வாழை இலை, அரிசி, தேங்காய், எலுமிச்சம்பழம், குங்குமம், சந்தனம், பூக்கள், வெற்றிலைபாக்கு, வாழைப் பழம், கற்பூரம், ஊதுபத்தி, சாம்பிராணி, அக்ஷதை,

வஸ்திரம், மஞ்சள் சரடுகள், பஞ்சாமிர்தம், குத்து விளக்கு, விளக்குத்திரி, நெய் (அ) நல்லெண்ணெய், தாம்பாளம், பஞ்ச பாத்திரம், உத்தரணி, கிண்ணம், கற்பூரத்தட்டு, மணி, தீப்பெட்டி.

### ஒன்பது முடிச்சு ஏன்?

அஷ்ட லக்ஷ்மிகளுடன் வரலக்ஷ்மியையும் சேர்த்து ஒன்பது லக்ஷ்மிகள் இருக்கிறார்கள். எனவே ஒன்பது முடிச்சுகள் இடப்பட்ட நோன்புக் கயிற்றைக் கட்டிக் கொள்கிறோம்.

### கருணைக்டல் மஹாலக்ஷ்மி

சௌராஷ்டிரா நாட்டின் ராணியான சுசந்திராவிடம் ஏராளமான செல்வம் இருந்தது. செல்வத்திற்கு அதிபதியான மஹாலக்ஷ்மியை விட தானே பெரியவள் எனப் பெருமை பேசியதோடு அடாத செயல்களிலும் ஈடுபட்டாள். அவளது ஆணவத்தைப் போக்க எண்ணிய மஹாலக்ஷ்மி அவளை ஏழையாக்கினாள். சுசந்திராவின் மகள் சாருமதி தன் தாயின் நிலையைக் கண்டு வருந்தி, வரலக்ஷ்மி விரதம் இருந்தாள். மகளைப் போலவே



சுசந்திராவும் விரதத்தில் பங்கேற்றாள். கருணைக் கடலான மஹாலக்ஷ்மி மனம் இரங்கி இழந்ததை மீண்டும் வழங்கினாள். இதனால் அவளை "வரலக்ஷ்மி" எனப் போற்றுகிறோம்.

### மந்திரம் சொல்லிக் கட்டுங்க

வரலக்ஷ்மி விரத பூஜையின் முடிவில் மூத்த சுமங்கலிகள் மற்ற பெண்களின் வலது கையில் மஞ்சள் கயிறு கட்டி விட வேண்டும் கட்டும்போது,

"நவதந்து ஸமாயுக்தம் நவக்ரந்தி சமன்விதம்
பத்ரீயாம் தக்ஷிணே ஹஸ்தே தோரகம்
ஹரிவல்லபே"

எனச் சொல்ல வேண்டும். இதைச் சொல்ல முடியாதவர்கள், "நாராயணரின் மனைவியான மஹாலக்ஷ்மியே! ஒன்பது இழைகளும், ஒன்பது முடிச்சும் கொண்ட இந்த மஞ்சள் கயிற்றினைப் பிரசாத மாக ஏற்று வலது கையில் கட்டிக் கொள்கிறேன். எனக்கு நீ அருள் புரிய வேண்டும்" என்று சொல்லி வழிபட வேண்டும்.

### கலசம் வைக்கும் முறை

பூஜையறையில் கோலமிட்டு பூக்களால் அலங்காரம் செய்யுங்கள். வாழை இலையில் பச்சரிசியைப் பரப்பி கலசத்தை நடுவில் வையுங்கள். கலசத்திற்குள் அரிசி, தங்கம், நவரத்தினம், காதோலை, கருகமணி, எலுமிச்சம் பழங்களால் நிரப்புங்கள். கலசத்தின் மீது நூல் சுற்றி மாவிலை அடுக்கி அதன் மீது தேங்காயை வையுங்கள். தேங்காயின் மீது வெள்ளி அல்லது மஞ்சளால் ஆன லக்ஷ்மி பிம்பத்தை வையுங்கள். முடியாவிட்டால் மஹாலக்ஷ்மி படம் மட்டும் போதும். கலசத்தின் மீது வஸ்திரம் சாத்துங்கள்.

### பிரசாதம் ரெடி

வரலக்ஷ்மிக்கு நைவேத்தியமாக பொங்கல், பால் பாயாசம், அப்பம், வடை, கொழுகட்டை, லட்டு, தயிர், பசும்பால், நெய், தேன், கற்கண்டு, ஆரஞ்சு, மாதுளை, விளாம்பழம், மாம்பழம், வாழைப்பழம், திராட்சை. இவற்றில் அவரவர் பண வசதிக்கேற்ப பிரசாதங்களைப் படைக்கலாம்.

இம்முறையில் நாம் அனைவரும் மஹாலக்ஷ்மி தேவியை வழிபட்டு தாயாரின் அருளைப் பெறுவோமாக.





திருமலை திருப்பதி
தேவஸ்தானம்

# "ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை"

*திருமலையிலும், திருச்சானூரிலும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கப்படுவது அறிந்ததே. தற்பொழுது தி.தி.தே. அன்னப்பிரசாத அறக்கட்டளை பக்தர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் இதற்கு நன்கொடை அளிக்க நல்வாய்ப்பினை நல்குகின்றது. அதுவே,*

## ஒரு நாள் நன்கொடை திட்டம்

| | | |
|---|---|---|
| 1) | காலை சிற்றுண்டி | - 08 இலட்சம் |
| 2) | மதிய உணவு | - 15 இலட்சம் |
| 3) | இரவு உணவு | - 15 இலட்சம் |
| | மொத்தம் | - 38 இலட்சம் |

0877-2263001
0877-2263472

திருமலை திருப்பதி தேவஸ்தான அன்னப்பிரசாத அறக்கட்டளை இத்தொகையை நன்கொடையாளர்களிடமிருந்து பெற விழைகிறது. நன்கொடையாளர் / தனிப்பட்ட நபர் / நிறுவனங்கள் / நிறுமங்கள் / அறக்கட்டளைகள் இணைந்தும் இருக்கலாம்.

இவர்கள் ஒரு நாளைக்கு மொத்தம் ரூ.38 இலட்சமோ/காலை சிற்றுண்டிக்கு ரூ.8 இலட்சமோ/மதிய உணவிற்கு ரூ.15 இலட்சமோ/ இரவு உணவிற்கு ரூ.15 இலட்சமோ அளிக்கலாம்.

தி.தி.தேவஸ்தானம் நன்கொடையாளர்களுக்கு அளிக்கும் வசதிகள் ஒரே விதமாகவே இருக்கும். இந்த நன்கொடைத்தொகை 30.09.2024 வரை மட்டுமே அமலில் இருக்கும். பின்னர் நன்கொடைத்தொகை மாறுதலுக்குரியது.

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்:**

**துணைச்செயலாட்சித் தலைவர் (நன்கொடையாளர் பிரிவு) எப்.ஏ.சி., தி.தி.தேவஸ்தானம், திருமலை, ஆந்திர மாநிலம்**

மின்னஞ்சல் : cdmc.ttd@tirumala.org
www.tirumala.org என்ற இணையதளத்திலும் விவரங்களைக் காணலாம்.



மாத்ருஸ்ரீ தரிகொண்ட
வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

சென்ற இதழின் தொடர்ச்சி...

தசரதரின் மனக்கவலையை அறிந்திருந்த விஷ்ணு, "தசரதா! பிறவிதோறும் செய்த பாவங்களின் காரணமாக உனக்கு இப்பிறவியில் குழந்தைப்பேறு இல்லாமல் போனது" எனக் கூறியவுடன், தசரத மன்னன் – "ஸ்வாமி! நான் முற்பிறவியில் எத்தனையோ பாவங்கள் செய்திருக்கலாம். ஆனால், கதிரவன் உதித்த வுடன் காரிருள் மறைவதுபோல் தங்களைக் கண்டவுடன் அத்தனையும் காணாமல் கரைந்து போனது. எனக்குப் பாவம் என்று ஒன்று இல்லை. இருந்தாலும், அவை அனைத்தையும் நீக்கி என் தவறுகளை மன்னியுங்கள். எனக்குக் குழந்தைப் பேறு உண்டாகும்படி செய்து என் பிறவிப் பயனை அடையும் விதமாக அருள்புரிய வேண்டும்" என்றார்.

அப்பொழுது ஹரி, "தசரதா! நீ ஏன் கவலை கொள்கிறாய்? உன்னுடைய பாவங்கள் அத்தனையும் போக்கினேன். உனக்குக் குழந்தைப் பேறு நிச்சயம் உண்டு. உனக்குப் பிறக்கப்போகும் குழந்தைகள் சாதாரணமானவர்கள் அல்லர். அவர்கள் அனைவரும் எனக்கு நிகரானவர்கள். மிகவும் பலசாலிகள். உனக்கு நால்வரை பிரசாதிக்கின்றேன். நீ உடனே அயோதிக்குச் சென்று "புத்திர காமேஷ்டி யாகம்" செய்வாயாக. உனக்கு மகப்பேறு உண்டாகும்" என்றார். பின்னர் தசரதனும் அவரை வணங்கிப் புறப்பட்டார்.

ஸ்வாமியின் ஆணையின்படி தசரதன் அயோத் திக்குச் சென்று புத்திரகாமேஷ்டி யாகத்திற்குத் தேவை யான வேலைகளை செய்யத் தொடங்கினார்.

தசரதன் சென்ற பின்பு ஸ்ரீநிவாசன் பிரம்மாவிடம் "நான்முகனே! சத்திய லோகத்தில் இருப்பதை விட்டுவிட்டு நீ இங்கிருப்பது முறையல்ல. நான் இன்னும் சில காலம் இம்மலையிலேயே இருக்க எண்ணியுள்ளேன். எனவே நீ சென்று வருக" என ஆணையிட்டார்.

ஸ்வாமி ஆணையிட்ட பின்பும் பிரம்மா அங்கிருந்து புறப்படவில்லை. எதையும் பேசவில்லை. தலையை மட்டும் அசைத்தார். இவை அனைத்தையும் பார்த்த ஹரி – "தாமரை வாசா! நீ உன் மனதில் என்ன நினைக்கிறாய் என்பதை தெளிவாகச் சொல். உன் கோரிக்கையைத் தீர்த்து வைக்கிறேன். அஞ்சாமல் கேள்!" என்றார்.

பிரம்ம தேவன் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு "ஸ்வாமி! தாங்கள் இத்திருமலையில் நீண்ட காலம் இருக்க வேண்டும் என்பது என் விண்ணப்பம். தாங்கள் இத்திருமலையில் இல்லாமல் போனால் மக்கள் சத்தி யத்தை மறந்தவர்களாய், எல்லாத் தீய ஒழுக்கங்களும் உடையவராகத் திகழ்வார்கள். அதனால் அவர்கள் நரகத்தில் வீழ்ந்து படாதபாடுபடுவார்கள். மக்களாய்ப் பிறந்தும் மிகவும் இழிவான நிலையில் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களைக் காக்க தங்களைத் தவிர வேறொருவருமில்லை.

ஸ்வாமி! கலியுகம் எப்படி இருக்கும் என்பதை தாங்கள் அறியாதவர் அல்ல. கலியுகத்தில் உள்ளவர்கள் ஆயுள் குறைந்தவர்கள், துர்குணமுடையவர்கள், சோம்பேறிகள், கர்வம், காமம், கோபம், பொறாமை, வஞ்சம், சாதுக்களை துவேஷிப்பது, பிறர் பொருளை

மங்கலகரம் லக்ஷ்மிகரம்



**பணம் இருந்தால் மட்டும் லக்ஷ்மிகரம் வந்து விடாது. சில பணக்கார வீடுகள் தூங்கி வழிவது போல் இருப்பதையும் நாம் பார்க்கி றோம். இந்தப் பொண்ணு லக்ஷ்மி கரமாக இருக்கா! இந்த வீடு மங்கல கரமாக இருக்கிறது என்று கூறக் கேட்டிருக்கிறோம்.**

**லக்ஷ்மி வீட்டிலேயே வாசம் புரிவதை லக்ஷ்மிகரம், மங்கலகரம் என்றும் சொல்வதுண்டு. மஞ்சள், குங்குமம், மாவிலைத் தோரணம், திருவிளக்கு, மாக்கோலம், துளசி மாடம், யானை, பசுமாடு, மாட்டுக் கொட்டில் போன்றவற்றில் லக்ஷ்மி வாசம் புரிவதாக ஐதீகம். வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பதுடன் எந்நேரமும் பக்தி மணம் கமழ வைத்திருப்பதே லக்ஷ்மிகரம்.**

**திரு. அசோக்ராஜா, அரவகுறிச்சிப்பட்டி.**

அபகரிப்பது, செய்யக் கூடாத பாவச் செயல்களை செய்து பாவகர்மங் களுக்கு ஆட்பட்டு பலவிதமான துன்பங்களை அனுபவிப்பார்கள். அதனால் தாங்கள் இந்த வேங்கடாத்ரி மலையிலேயே இருந்து அவர்களைத் துன்பத்திலிருந்து காக்க வேண்டுகிறேன்" என்றார்.

பிரம்மாவின் விண்ணப்பத்தைச் செவிமடுத்த ஸ்வாமி "குமார! நான் என்ன நினைத்துக் கொண்டிருந்தேனோ அதையே நீயும் கூறினாய். மக்களிடத்தில் உனக்கிருக்கும் கருணையை நான் அறிய முடிந்தது. உன் கோரிக்கைக்கு ஏற்றார் போலவே சேஷாத்ரியிலேயே வாசம் செய்கிறேன்.

பத்மஜா! வைகுண்டத்தில் உள்ள புஷ்கரணி, சேஷாத்ரி மலை யான இங்கு ஸ்வாமி புஷ்கரிணியாக இருக்க, மக்களுக்கு எவ்வாறு பாவங்கள் வந்து சேரும்! அந்த புஷ்கரிணி கங்கா நதி தீர்த்தத்திற்கு நிகரானது. எவரொருவர் புஷ்கரிணியில் பக்தியோடு நீராடுகிறார்களோ அவர்களுக்கு எல்லாவித பாவங்களும், நோய்களும் தீர்ந்து விடும். அவர்களுடைய கோரிக்கைகள் அனைத்தையும் தீர்த்து வைப்பேன்" என்றார்.

அப்பொழுது பிரம்மா பணிவோடு "ஸ்வாமி! தாங்கள் சொல் வது அனைத்தும் உண்மையே. ஆனால் அரக்கர்கள் பூலோகத்தில் உள்ள வனங்கள் அனைத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டு மக்களை எப்பொழுதும் துன்புறுத்தி வருகிறார்கள் என்றார்.

ஹரி பிரம்ம தேவனின் விண்ணப்பத்தைக் கேட்ட பிறகு, தன்னிடம் உள்ள பஞ்சாயுதங்களில் ஒன்றான சக்கராயுதத்தைப் பார்த்து – சுதர்ஸனா! நீ உடனே அனைத்து விதங்களிலும் ஆயத்தமுடன் புறப்பட்டுச் சென்று அசுரர்களை அழித்துவிடு" என்று

## வைணவக்குறுக்கெழுத்துப்புதிர் 97க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தே | வே | ந் | தி | ர | ன் | ர் | வா | ழ் | ரா | து | 2 வி |
| வா | ப | ம் | 3 கு | ன் | ஜ | ரா | ச | கா | 4 ஆ | மை | |
| சு | | | தி | ர | 5 ரா | ம | ச் | ச | ந் | தி | ர |
| ர | ம் | | ந் | பே | ம | ம் | சி | ர | 6 ந | | |
| ர் | ல | சே | 7 கு | 8 கு | ர் | | 9 வா | ம | ன | | |
| க | கு | | | | த | ம் | ண | 10 ய | மா | 11 ரா | |
| ள் | ரு | 12 அ | ன் | ன | ம | ய் | யா | மு | | | |
| | 13 கு | | த | | 14 எ | | | ணா | கி | வ | 15 தே |
| ரி | ச | 16 கே | ம | 17 சி | த் | தி | ர | கு | ப் | த | ர் |
| 18 க | ர் | ண | ன் | | வி | தே | தி | வ | ஸ் | ர | 19 ச |
| | | | 20 ம | ண் | டோ | த | ரி | தா | ந் | 21 கா | |
| 22 ம | கா | பா | ர | த | ம் | | மி | க்ஷ் | ல | கா | 23 ம |

ஆணையிட்டார். சக்கரத்தாழ்வாரும் உடனே புறப்பட்டு சென்று அசுரர்களையும், அயோக்கியர் களையும் அழித்து விட்டு, மீண்டும் ஸ்வாமியிடம் வந்து சேர்ந்தார்.

ஸ்வாமி! தங்களின் ஆணைக்கு இணங்க அசுரர்களை அழித்தேன் எனச் சொல்ல, அதைக் கேட்டு ஸ்வாமி மிகவும் மகிழ்ந்தார். அதன்பிறகு சக்கராயுதமான சக்கரராஜன் முன்பிருந்தது போலவே சுதர்சன சக்கரம் வடிவம் தாங்கி ஸ்வாமியின் திருக்கரத்தில் சேர்ந்தார்.

அதன்பிறகு ஹரி பிரம்மாவைப் பார்த்து, “நீ எதிர்பார்த்தபடியே எதிரிகள் அழிந்தனர். உன்னுடைய கோரிக்கை நிறைவேறியது அல்லவா? நீ மனதில் கவலை கொள்ளாமல் சத்திய லோகத்திற்குச் செல்வாய்” என்றார். பிரம்மா ஏதும் பேசாமல் அங்கேயே இருப்பதைக் கண்டு ஸ்வாமி பிரம்மாவிடம் “நான்முகனே! நான் போகச் சொல்லியும் போகாமல் நிற்பதற்குக் காரணம் என்ன? இன்னும் ஏதாவது கோரிக்கைகள் உள்ளனவா! அச்சப்படாமல் கேள்! என்றார்.

அதைக்கேட்ட பிரம்மா, “ஸ்வாமி! என் விண்ணப்பத்தைக் கேளுங்கள். வேங்கடாத்ரியில் நிவாசம் செய்யும் உங்களுக்கு ரதோத்ஸவம் செய்ய வேண்டும் என்பது என் கோரிக்கை. கருணையோடு சம்மதம் தெரிவிக்க வேண்டும்” என்றார். உடனே ஹரி லக்ஷ்மி தாயாருடன் கலந்துபேசி உடனே சரியென ஒப்புதல் தந்தார்.


ஹரி சம்மதம் தெரிவித்தவுடன், முனிவர்க ளும் மற்றும் உள்ளவர்களும் ரதோத்ஸவம் செய்யும் பணியில் ஈடுபட்டார்கள். பிரம்ம தேவர் விஷ்வகர்மாவை அழைத்து “விஷ்வகர்மா! பலவித அழகான நகரத்தை இந்த மலையில் நிர்மிப்பாயாக” என்றார். விஷ்வகர்மா அதேபோல மிகவும் அற்புதமான அழகான நகரத்தை உண்டாக்கினார். அதேபோல் மேருமலையை ஒத்த தேர் ஒன்றையும் உருவாக்கினார்.

தெலுங்கு மூலம் :
பேராசிரியர் கே. சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் :
டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

பெருமை அறிவோம்...

## வாழ்வியல் நெறிகள்





# ஈயா மனிதரை ஏன் படைத்தாய்?

*நாயாய்ப் பிறந்திடின் நல்வேட்டையாடி நயம்புரியும்*
*தாயார் வயிற்றினரராய்ப் பிறந்துபின் சம்பன்னராய்க்*
*காயா மரமும் வறளாங் குளமும் கல்லாவும் என்ன*
*ஈயா மனிதரை ஏன் படைத்தாய்? கச்சி யேகம்பனே!*

– பட்டினத்தார்

பொருள் : **திருக்கச்சி ஏகம்பனே! இறைவா! உயிர் நாயுடல் தாங்கினாலும், நல்ல வேட்டையாடித் தன்னை வளர்த்தவனுக்கு ஏதாவது பயனைக் கொடுக்கும். தாயார் வயிற்றில் பிறந்து, பிறகு செல்வம் உள்ளவர்களாகிக் காயாத மரமும், நீர் வறண்ட குளமும், கற்பசுவும் போல, ஒருவருக்கும் ஒன்றுங்கொடாத மனிதர்களை ஏன் படைத்தாய்?**

### வாழ்வியலுக்கான கருத்து

**காயாத மரம், நீரில்லாக்குளம், கல்லால் செய்யப் பட்ட பசு, இவற்றால் எந்தப் பயனும் இல்லாதது போல, ஈகைக்குணம் இல்லாத செல்வர்களால் எந்தப் பயனும் இல்லை. ஆகவே ஈயா மனிதர் நாயினும் தாழ்ந்தவர் என்று அறிக!**

***-தொகுப்பு :முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை***

108 திவ்வியதேச வைபவம்

87

# திருப்பவளவண்ணன் (பெரிய காஞ்சிபுரம்)





– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

சரஸ்வதி தேவி தன் ஆற்றலால் கொடிய அரக்கர்களை உருவாக்கி, பிரம்மனின் யாகத்தை அழிக்கும் முறையில் அனுப்பியதாகவும், பிரம்மா பகவானை வேண்ட எம்பெருமான், பெரும்போர் செய்து அரக்கர்களை அழித்ததாகவும், அரக்கர்களின் சிவந்த இரத்தம், திருமேனியில் படியவே, எம்பெருமான் பவளம் போன்ற செந்நிறத்தவனாய் விளங்கினான் என்றும் கூறுவர்.

அதனால்தான் பவள வண்ணர் சந்நிதியில் மூலவர் செந்நிறத்தவனாய் விளங்கினான் என்றும், செந்நிறத்தானாக இன்றும் சேவை சாதித்து வருகிறார். அந்த சந்நிதியின் எதிர்ப்புறத்தில், "பச்சை வண்ணர்" என்ற மற்றொரு திருக்கோயில் விளங்குகிறது. ஆனால் பச்சை வண்ணர் சந்நிதியை ஆழ்வார் பார்க்க வில்லை. பவளவண்ணனாய், அரக்கரோடு செய்த போரில் கோபத்துடன் பகவான் சேவை சாதிக்கிறார். ஆனால் பவள வண்ணரோடு, பச்சை வண்ணரையும் சேவிக்கும் வழக்கம் தொடர்கிறது.

**சிறப்புகள் :**

"பவள வண்ணா! எங்கு உற்றாய்" என்று எம்பெருமானை நோக்கித் திருமங்கையாழ்வார் கேட்கும் முறையில் இத்திவ்யதேசம் மங்களா சாசனம் செய்யப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | பவளவண்ணப் பெருமாள் (மேற்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| தாயார் | : | பவளவல்லித்தாயார் (தனிக் கோயில் நாச்சியார்) |
| தீர்த்தம் | : | சக்ர தீர்த்தம். |
| விமானம் | : | பிரவாள விமானம். |
| ப்ரத்யக்ஷம் | : | அசுவினி தேவதைகள், பார்வதி – பிருகு மகரிஷி. |
| ஆகமம் | : | வைகானஸம். |
| மங்களாசாஸனம் | : | திருமங்கை ஆழ்வார். |

**த்யானச்லோகம் :**

*"ப்ரவாள ஸத்ரு சாக்ருதிஸ் ததபலா சதத் வல்லிகா*
*விமாநமபி தத்ரச ப்ரதித சக்ர தீர்த்தாந்திகே*
*ப்ரவாளமிதி பச்யமா மபி முகஸ்து திஷ்டந் புரா*
*ப்ரவாள ஸத்ருசே புரேஸ ஹறிரச்விநீ பூஜித:"*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

பாசுரம்

*வங்கத்தால் மாமணிவந்து உந்து முந்நீர்*
*மல்லையாய்! மதிள் கச்சி ஊராய்! பேராய்!*

*கொங்குத்தார் வளம் கொன்றை அலங்கல் மார்வன்*
*குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்*




*பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின்மேலாய்!*
*பனி வரையின் உச்சியாய்! பவளவண்ணா!*
*எங்கு உற்றாய்? எம்பெருமான்! உன்னை நாடி*
*ஏழையேன், இங்ஙனமே உழிதருகேனே"*

– திருமங்கையாழ்வார்

*"கண்டு அறிந்தும் கேட்டு அறிந்தும் தொட்டு அறிந்தும்*
*காதலால் உண்டு அறிந்தும் மோந்து அறிந்தும்*
*உய்யேனே பண்டைத் தவள வண்ணா! கார்வண்ணா*
*சமாவண்ணா கச்சிப் பவள வண்ணா நின் பொற்பதம்*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

## நாமாக்கள்

821. *ஓம் ஸர்வஜ்ஞ: நம:*
அனைத்தும் அறிந்தவன்.
*ஓம் அஹல்யா: நம:*
செழிப்பான பிரதேசங்களில் ஸாந்நித்யம் செய்பவள்.

822. *ஓம் ஸர்வதோமுக: நம:*
பக்தர்கள், தன்னை அடைய பல வழிகளை உடையவன்.
*ஓம் மண்டலா: நம:*
சூரியன், தாமரை போன்ற வட்ட வடிவ ஆஸனத்தில் வீற்றிருப்பவள்.

823. *ஓம் ஸுலப: நம:*
எளிமைக் குணாளன்.
*ஓம் ஆச்ரிதமாநதா: நம:*
தன் அடியார்களுக்கு பஹுமானம் அளிப்பவள்.

824. *ஓம் ஸுவ்ருத: நம:*
சரணம் அடைந்தவரைக் கைவிடாதவன்.
*ஓம் ஸர்வா: நம:*
எல்லாமாக இருப்பவள்.

825. *ஓம் ஸித்த: நம:*
ஸித்தமாக உள்ளவன்.
*ஓம் நித்யோதிதா: நம:*
எப்போதும் பிரகாசிப்பவள்.

826. *ஓம் சத்ருஜித்சத்ருதாபந: நம:*
பகைவருக்குப் பகைவர் மூலமாக பகைவரை வெல்பவன்.
*ஓம் உதாரா: நம:*
உதார குணம் உடையவள்.

827. *ஓம் ந்யக்ரோதோதும்பர: நம:*
வணங்கப்படுபவர்களால் உயர்ந்த பரமபதத்தில் இருப்பவன்.
*ஓம் ஜ்ரும்பமாணா நம:*
மேன்மேலும் செல்வம் கொழிக்கும்படி வளரச் செய்பவள்.

828. *ஓம் அச்வத்த: நம:*
இந்திராதியருள் பிரவேசித்து நடத்துபவன்.
*ஓம் மஹோதய: நம:*
உத்ஸவங்களில் கொண்டாடும்படி ஆவிர்ப்பவிப்பவள்.

829. *ஓம் சாணூராந்த்ரநிஷூதந: நம:*
சாணூரன் என்கிற மல்லனை அழித்தவன்
*ஓம் சந்த்ரகாந்தோதிதா: நம:*
தோன்றும் போதே சந்திரனைப் போல அடியவர்களை ஆனந்தப்படுத்துபவள்.


830. *ஓம் ஸஹஸ்ராார்ச்சி: நம:*
எண்ணற்ற கிரணங்களை உடையவன்.
*ஓம் சந்த்ரா: நம:*
ஆனந்தம் அடைபவள்.

*ஸ்ரீமதே ப்ரவாளவர்ண (பவளவண்ண) பரமபதநாத பரப்ரம்மணே நம:*

**குறிப்பு :**

காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயிலுக்கு வடகிழக்கே ஒரு கி.மீ. தொலைவில் பவளவண்ணர் சந்நிதி, அதனெதிரே பச்சை வண்ணர் சந்நிதி அமைந்துள்ளது.

*திவ்யதேச வைபவம் வளரும்...*



# தாய்ப்பால்

தெலுங்கு மூலம்:டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் : திருமதி வி.உஷா, 99850 02156

தாய்மை என்பது பெண்களின் வாழ்க்கையில் மிக முக்கியமான தருணம். பிறந்த குழந்தைகளுக்கு ஆரோக்கியமான வாழ்வைத் தரும் தாய்ப்பால் ஊட்டச்சத்துக்களோடு நோய் எதிர்ப்பு சக்தியையும் கொண்டது.

குழந்தைகளுக்கு தாய்ப்பால் தருவதால் வாந்தி, வயிற்றுப்போக்கு, செரிமானப் பிரச்சனைகள் மற்றும் தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் வராமல் தடுக்கிறது. இதனால் தாய்மார்களின் எடை குறைவதுடன் அடுத்த கர்ப்பம் உடனடியாக ஏற்படாமலும் தடுக்கிறது. மார்பு புற்றுநோய் ஏற்படாமல் தடுக்கும் சக்தியுள்ளது என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். இவற்றை அறியாமல் சில பெண்கள் “நாகரிகம்” என்ற மோகம் கொண்டு குழந்தைகளுக்கு தாய்ப்பாலுக்குப் பதிலாக புட்டிப்பாலை ஊட்டுகின்றனர்.

சிலருக்கு வயது முதிர்ந்த பிறகு கர்ப்பம் தரிக்கும் காரணங்களால் கருச்சிதைவு, ஊட்டச்சத்து குறைபாடு, மன உளைச்சல், ஹார்மோன் கோளாறுகள், மார்பகத்தொற்று, பால் பற்றாக்குறையும் ஏற்படுகின்றன. இன்னும் சிலருக்கு ஆரம்பத்தில் பால் உற்பத்தி அதிகமாக இருந்து பின் படிப்படியாக குறைவதும் உண்டு. குழந்தைக்கு சரிபோகும் அளவிற்கு பால் உற்பத்தி ஏற்பட சில வீட்டு வைத்தியங்கள் பின்வருமாறு:

## வீட்டு வைத்திய குறிப்புகள்

- 200 கிராம் வெல்லத்தில் 50 கிராம் சுக்கு பொடி போட்டு நன்றாக கலந்து வேளைக்கு 2–5 கிராம் அளவு பொடியை 100 மி.லி. பாலில் சேர்த்து உட்கொண்டால் நல்லது.
- நாள்தோறும் இரண்டு முறை வேளைக்கு 100 மி.லி. பாலில் 3–4 பற்கள் வெள்ளைப் பூண்டை நீட்ட வாக்கில் துண்டித்து போட்டு நன்கு வேகவைத்து ஆறியபின் 5 மி.லி. தேன் கலந்து குடிக்க வேண்டும்.
- சீரகத்தை நன்கு வறுத்து பொடியாக்கி, கற்கண்டு பொடி ஆகியவற்றை 15 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொண்டு நாள்தோறும் காலை, மாலை அரைடீஸ்பூன் பொடியை 100 மி.லி. பாலுடன் கலந்து உட்கொண்டால் பால் உற்பத்தி பெருகும்.
- ஓமத்தை வறுத்து பொடியாக்கி நாள்தோறும் உணவு உண்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன் வேளைக்கு 2 கிராம் பொடியைத் தேனுடன் சேர்த்து உட்கொள்ள வேண்டும்.
- 60 கிராம் வெந்தயப்பொடி, கற்கண்டு பொடி ஆகியவற்றைக் கலந்து வைத்துக் கொண்டு நாள்தோறும் மூன்று வேளை உணவு உண்பதற்கு 15 நிமிடம் முன் வேளைக்கு 2 கிராம் பொடியை 50 மி.லி. நீரில் கலந்து குடிக்க வேண்டும்.
- நாள்தோறும் ஓரிரண்டு முறை வேளைக்கு 150 மி.லி. பாலில் இரண்டு டீஸ்பூன் பார்லி விதை, ஒரு டீஸ்பூன் சர்க்கரை கலந்து நன்கு கொதிக்க வைத்து, இறக்கி ஆறியபின் குடிக்க வேண்டும்.
- நாள்தோறும் வெறும் வயிற்றில் 100 மி.லி. நீரில் 10 துளசி இலைகள், 2 கிராம் அதிமதுரம், அரை டீஸ்பூன் பனங்கற்கண்டு ஆகியவற்றைச் சேர்த்து நன்கு கலந்து மிதமான சூட்டில் கொதிக்க வைத்து ஆறியபின் வடிகட்டிக் குடித்தல் வேண்டும்.

சென்ற இதழின்
தொடர்ச்சி...



## அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# இராமாநுசர்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

(மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்தோன்) மாறன் என்னும் நம்மாழ்வாரால் அருளிச் செய்யப்பட்ட திருவாய்மொழியை, *''வளர்த்த இதத்தாய் இராமாநுசன்''* என்று திருவாய்மொழித் தனியனில் பட்டர் அருளியபடியே வளர்ப்பித்தருளினவர். அதாவது நெடுங் காலமும் நோற்றுப்பெற்ற முதல் தாய் நம்மாழ்வார். *''வண் தமிழ் நூற்க நோற்றேன்''* என்று அவரே அருளினாரன்றோ. வருந்திப் பெற்ற பிள்ளையை வளர்த்து எடுக்கும் தாயைப் போலே, திருவாய் மொழியை வளர்த்த இதத்தாய் – வளரும்படி செய்த தாய் இராமாநுசராவர்.

ஞானக்கலையான திருவாய் மொழிக்குப் பிறப்பிடம் ஆழ்வார். அதனை வளர்த்தவர் எம்பெருமானார். இப்படி ஆயிற்று ஞான பரம்பரை வளர்த்தியோடே நடந்து செல்வது என்பர் பிள்ளைலோகம் சீயர். திருவாய்மொழித் தனியனில் *''மொய்ம்பால் வளர்த்த இதத்தாய்''* என்கிறபடியே – ஈன்ற தாய் பெற்றுப் பொகட்டுப்போனால் வளர்க்கும் தாய் தன் மிடுக்காலே காத்து நோக்குமாபோலே ஆயிற்று எம்பெருமானாரும் அத்தைக் காத்து வளர்த்தபடி; கண்ணனை வளர்த்த தாயான யசோதையானவள் தன் மிடுக்காலே கண்ணனைக் குற்றம் சொல்லுமவர்களையும் தன் சொல்லாலே வாய் மூடச் செய்து கண்ணனைத் தன்வசமாக்கி, கம்சன் கருத்தைக் குலைத்து, நிறம் பெற வளர்த்து ப்ரமேய ஸாரமான கண்ணனை வளர்த்தாப்போலே, இராமாநுசரும் ப்ரமாண ஸாரமான திருவாய் மொழியை வளர்த்த முறை பின்வருமாறு – ஆழ்வார் அவதரித்து மோக்ஷமடைந்த பின்பு வேதத்துக்குப் புறம்பானவர்களாலும் குத்ருஷ்டிகளாலும் தமிழ்ப்பாட்டான திருவாய் மொழி மறைந்து வருவதைக் கண்டு, ஸ்ரீபாஷ்ய ஸூக்திகளாலே அத்தை அடக்கி, திருவாய் மொழியை ஸ்ரீபாஷ்யத்துக்குக் காவலான வேலியாகக் கற்பித்துத் திருவாய்மொழியைத் தன் கை வசமாக்கி, தன் ஞானபுத்ரரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்னும் ஆசார்யரைக் கொண்டு இதன் பொருளை முதன்முதலாக வெளியிட்டு வளர்த்துக் கொண்டு வந்தார் இராமாநுசர் அன்றோ.

இதுபற்றியே மாமுனிகள் உபதேச ரத்னமாலையில் *''தெள்ளாரும் ஞானத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் எதிராசர்*

பேரருளால்'' என்று இராமாநுசர் அருளப் பெற்று திருவாய் மொழிக்கு இன்பம் மிகுதியான ஆறாயிரப்படி வ்யாக்யானம் அருளினபடி. அவரைத் தொடர்ந்து நஞ்சீயர், பெரிய வாச்சான்பிள்ளை, நம்பிள்ளை வாய்மொழியை ஏடுபடுத்திய வடக்குத் திருவீதிப் பிள்ளை, வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர் முறையே ஒன்பதினாயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி, பன்னீராயிரப்படி என்று ஐந்து வ்யாக்யானங்கள் வரக் காரணமாயிருந்தவர் மாறனான நம்மாழ்வார் அடிபணிந்தவராகையாலே ஆண்டவன் இட்ட பயிரை வளர்ப்பிக்க வேணுமன்றோ அடியவனான இராமாநுசருக்கு என்பர் பிள்ளைலோகம் சீயர். இதனால் தமிழ்மறை வளர்த்தவர் வாழ வேண்டும் என்றபடி.

(அறம் மிகு நற்பெரும்பூதூர் அவதரித்தான்) அறமாவது சரணாகதி தர்மம். சரணாகதி தர்மத்தை உலகிலே நிலைநாட்ட பிரிதொன்றுக்கில்லாச் சிறப்புடைய ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்தருளினவர் இராமாநுசர். ''அறமிகு நல்ல பெரும்பூதூர்'' என்றும் பாடம் சொல்லுவர். அப்போது ''இராமாநுசன் மிக்க புண்ணியன்'' என்கிற தர்மத்தை அதிகமாக உடையதாகும் என்றுமாம். ''ஏரார் பெரும்பூதூர்'' என்று மாமுனிகள் அருளியதற்கு ஏற்ப ஏரார் எதிராசர் அவதரிக்கையாலே அழகு மிகுந்து உள்ள பெரும்பூதூர் என்கை. அன்றிக்கே ''செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளும் சிறந்த பெரும்பூதூர்'' என்கிறபடியே ஊர் வளப்பத்தைச் சொல்லுமாம்.

(அழகாரும் எதிராசர் அடி இணைகள் வாழியே) எதிராசர் – யதிராஜர். யதிகளுக்கு எல்லாம் தலைவர். யதிகள் யாவரிலும் மேம்பட்டிருப்பவர். இராமாநுசர் ஸந்யாஸாச்ரமம் கொள்ளும்போது தேவப்பெருமாள் இட்ட பெயர் எதிராஜர். தமிழில் எதிராசர் ஆயிற்று. ''யதீநாம் பதி: யதிபதி: பதி:'' என்பதற்கு இடுகுறிப் பெயராகும் தன்மையினால் அடிமையை ஏற்கும் தலைவரான சேஷி என்றும், காரணப்பெயராகும் தன்மையினால் ''பாதி இதி பதி:'' என்று வ்யுத்பத்தியின் மூலமாக காப்பவர் என்றும் பொருள் தேறுகிறது. ஸந்யாஸிகளுக்கு தலைவராயும், காப்பாளராயும் இருப்பவர் எதிராசர் என்பர் பெரியோர். ப்ரார்த்தநா பஞ்சகத்தில் ''காஷாயசோபி'' என்கிற ச்லோகத்தில் அருளியபடியே காஷாயம், சிகை, த்ரிதண்டம், பூணூல், திருநாமம் ஆகியவை யதிச்ரேஷ்டரான எதிராசருக்கு இவை அனைத்தும் உண்டு. வெறும் புறத்தில் ஆலத்தி வழிக்க வேண்டும்படி இயற்கையாகவே அழகிய அவர்தம் திருமேனி காஷாயம் முதலானவற்றால் உண்டான செயற்கை அழகும் சேர்ந்து இருக்கும். இதுபற்றியே, அமுதனாரும் ''கையில் என்னக் கண்ணனைக் காட்டித்தரிலும் உன்தன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டி யான்'' என்று அனுபவிப்பர். அழகாரும் – திருவடிகளுக்கு அடைமொழியாகும்போது இரண்டு தாமரைப் பூவை நிறைத்து வைத்தாப் போலே இருக்கிற சேர்த்தி அழகையும் இயல்பாக உண்டான அழகையும் சொல்லிற்றாகவுமாம். எதிராசர் திருவடிகளுக்கு அழகாவது கோயில் அண்ணன் அருளிய கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் ப்ரபந்தத்தில் ''பேரருளாளர் பெருமை என்றும் துறவாத சிந்தை எதிராசன் துய்ய பதங்கள்'' என்றபடி. அவற்றைத் தமது மனத்தில் மறவாமலிருப்பதாகிற நற்பண்பை உடையவர் மாமுனிகள் என்பர். இதனால் எதிராசர் திருவடிகள் பெருமை சொல்லப்பட்டது. ''ராமாநுஜாங்க்ரி சரணோஸ்மி'' (102) என்று கூரத்தாழ்வானும் எம்பெருமானாருடைய திருவடிகளைச் சரணமாக அடைந்தவன் என்று வரதராஜ ஸ்தவத்தில் அருளியது காண்க. அத்தகைய திருவடிகள் நித்யமாக வாழ வேண்டும் என்கிறார். அழகு முதலானவற்றால் பூர்ணமாயிருக்கிற எதிராசருடைய எல்லாராலும் பற்றப்படுமதான இரண்டு திருவடிகள் நித்யமாக வாழ வேணும்.

இராமாநுஜர் வாழித்திருநாம உரை தொடரும்....



சென்ற இதழின் தொடர்ச்சி...

# கொதசி விரத வழிபாடு



– திரு.துளசி கிருஷ்ணா, சென்னை.

மார்கழி மாத சுக்லபக்ஷ துவாதசி, மிகச் சிறந்தது. இதில் சாத்யவிரதம் அனுடிக்கப்பட வேண்டும். 1) மனோபவ, 2) பிராண, 3) நர, 4) அபான, 5) வீர்யவான், 6) சிதி, 7)ஷய, 8) நய, 9) ஹம்ஸ, 10) நாராயண, 11) விபு, 12) பிரபு ஆகிய இப்பன்னிருவரும் சாத்யகர் என்று சொல்லப்படுவர்.

அரிசியைப் பரப்பி அதன் மீது இப்பன்னிருவரையும் ஆவாஹனம் செய்து அக்ஷதை புஷ்பங்களால் அர்ச்சித்து பூஜித்து பன்னிரண்டு அந்தணர்களை போஜனம் செய்வித்து, உத்தம தட்சணைகள் கொடுத்தனுப்பி, அந்நாளிலேயே துவாத சாதித்ய பூஜை செய்ய வேண்டும்.

1) தாதா தரதா, 2) மித்ர, 3) அர்யமா, 4) பீஷா, 5) சக்ர, 6) அம்ச, 7) வரண, 8) பக, 9) துவஷ்டவா, 10) விவஸான், 11) ஸவிதா, 12) விஷ்ணு ஆகிய பன்னிருவர் துவாதசாதித்யர் எனப்படுவர். ஒவ்வொரு சுக்ல துவாதசியில் இந்த துவாதசாதித்ய பூஜை செய்து கொண்டே ஒரு வருஷத்தைக் கடப்பானாக. வருஷவிரத முடிவில் துவாதசாதித்ய பிரதிமைகள் பன்னிரண்டையும் செய்து விதிபூர்வகமாகப் பூஜித்து பன்னிரண்டு அந்தணர்களுக்கு போஜனம் சத்காரம் முதலியவைகளுடன் இப்பிரதிமைகளை அவர்களுக்கு தானமாகக் கொடுப்பானாக.

இப்படி துவாதசாதித்ய விரதம் முடிப்பவன் சூரிய லோகத்தில் நெடுநாள் போகங்களை அனுபவித்து மீண்டும் தர்மாத்மாவாய் இந்நிலவுலகில் பிறப்பான். அவனை ரோகங்கள் நெருங்கா. இப்படிச் செய்த இந்த விரத புண்ணியத் தால் இந்த ஜன்மத்திலும் மீண்டும் இந்த விரதத்தை அநுட்டித்து, சூரிய லோகத்தை மீண்டும் பிளந்து கொண்டு நிரஞ்சனம் பரமம் சாம்யமான நிலையை அடைவான். இந்த திதி விரதத்திற்கு அகண்ட விரதம் என்று பெயர்.

தை மாத கிருஷ்ண பக்ஷ துவாதசி ரூபவிரதம் எனப்படும். இந்த விரதம் அநுட்டிப்பவன் தசமியன்று காலையில் ஸ்நானம் செய்து, தூய உடை அணிந்து, பசுஞ்சாணியைக் கீழே விழாமல் கையில் ஏந்தி, அந்தச் சாணியில் 108 உருண்டை கள் செய்து மண்பானையில் வைத்து, வெயிலில் உலர்த்த வேண்டும்.

பிறகு ஏகாதசி உபவாசம் இருந்து விஷ்ணுவினுடைய ஸ்வர்ண விக்ரகத்தை முறைப்படி பூஜித்து இரவு கண் விழித்து இருந்து, நாம சங்கீர்த்தனம் செய்து ஜபம் முதலியவைகளைச் செய்து ஜாகரண (விழித்திருத்தல்) விரதத்தை முடிப்பா னாக. அதற்குப் பிறகு ஜலத்தால் நிரம்பிய பானையின் மேல் எள் நிரப்பப்பட்ட பாத்திரத்தை வைத்து அதற்கு மேல் ஸ்வர்ண பிம்பத்தை வைத்து உபசாரங் கள் செய்து பூஜிக்க வேண்டும். புதிய அக்னியை ஏற்படுத்தி அக்னி பூஜை செய்து அந்த அக்னியில் எள் நெய்யுடன் அந்த 108 சாண உருண்டைகளை விஷ்ணு சம்பந்தமான த்வாதசாக்ஷர

மந்திரத்தால் ஹோமம் செய்ய வேண்டும். பூர்ணாஹுதி செய்து வைத்த ஆசாரியருக்கு பிரதிமையைக் கலசத்துடன் கொடுக்க வேண்டும். மற்ற பிராமணர்களை இயன்ற அளவு திருப்தி செய்விக்க வேண்டும். இந்த விரதத்தை அநுட்டித்த ஆடவரோ, பெண்டிரோ நல்ல அழகிய வடிவினையும், சௌபாக்யங்களையும் பெறுவார்கள்.

மாசி சுக்ல பக்ஷ துவாதசியில் சாளக்ராம சிலைக்கு பூஜை செய்து தங்கம், வெள்ளி வஸ்திர தானங்கள், அன்னம் பாலிப்பு செய்தல் வேண்டும். பிராமண போஜனத்தில் நெய் பருப்பு முதலியவைகள் நிறைந்த பாயசம் அளிக்க வேண்டும். இந்த விரதம் அனுஷ்டிப்பவன் இஷ்ட போகங்கள் எல்லாம் இங்கு அனுபவித்து, பிறகு விஷ்ணு பதம் அடைகிறான்.

பங்குனி மாத சுக்லபக்ஷ துவாதசியில் பகவானின் பிரதிமை செய்து, பூஜித்து, வேதவித்தான அந்தணனுக்கு அப்பிரதிமைகளைக் கொடுத்தல் வேண்டும். பன்னிரெண்டு பிராமணர்களுக்கு அன்னம் பாலித்தல் வேண்டும். பிறகு உற்றார் உறவினருடன் தானும் உண்டு மகிழ வேண்டும். திருஸ்ப்ருசா, உன்மீலனி, பக்ஷவர்த்தினி, வஞ்சுலி, ஜயா, விஜயா, ஜயந்தி, அபராஜிதா முதலிய எட்டு துவாதசிகள் எல்லா பாபங் களையும் நிவர்த்தி செய்யும். இந்த துவாதசிகளில் உபவாசமிருந்து விரதம் அனுஷ்டித்து, மறுநாள் பாரணை செய்ய வேண்டும். ஒரு வருடமாக ஏகாதசி கதை, புராண வரலாற்றினை அறிந்த நாம் ஏகாதசி விரதத்தினை அனுசரித்து வாழ்வில் அனைத்து செல்வங்களையும் எம்பெருமானின் திருவருளால் பெற்றிடுவோம்.

*முற்றும்....*

# தெரிந்து கொள்வோம்



## தெய்வங்களுக்கு தேங்காய் வழைப்பழம் படைப்பது ஏன்?

**எல்லா தெய்வங்களுக்கும் தவறாமல் வாழைப் பழம் படைக்கிறார்கள். மற்ற எந்தப் பழமாக இருந்தாலும் சாப்பிட்டு விட்டு கொட்டையை எறிந்தால் மீண்டும் முளைக்கும். ஆனால் வாழைப் பழத்தை உரித்தோ, முழுமையாகவோ வீசினாலும் கூட மீண்டும் முளைப்பது இல்லை. இது பிறவியற்ற நிலையாகிய முக்தியைக் காட்டுகிறது.**

**இறைவா! மீண்டும் பிறவாத நிலையைக் கொடு! என வேண்டவே நாம் இறைவனுக்கு வாழைப்பழம் படைக்கிறோம். தேங்காய், வாழைப்பழம் இரண்டும் நமது எச்சில் படாதவை. மாம்பழத்தை நாம் சாப்பிட்டு விட்டு, கொட்டையைப் போட்டால் அந்த விதையில் இருந்து மாமரம் உருவாகிறது. ஆனால், தேங்காயை சாப்பிட்டுவிட்டு ஓட்டைப் போட்டால் அது முளைக்காது. முழுத் தேங்காயிலிருந்து தான் தென்னை மரம் முளைக்கும். அதுபோல, வாழைமரத்திலிருந்துதான் வாழைக்கன்று வரும். பழம், கொட்டை என்பது கிடையாது. அப்படி நமது எச்சில்படாத இவற்றை இறைவனுக்கு உகந்ததாக நமது முன்னோர்கள் படைக்கும் மரபினை உருவாக்கினார்கள். நாமும் இந்த மரபினை அறிந்து பின்பற்றுவோம்.**


*தொகுப்பு : திரு. எம். அசோக்ராஜா, திருச்சி.*

# நவக்கிரக தோஷம் போக்கும் சக்கரத்தாழ்வார்

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தைச் சேர்ந்த 88 திருக்கோயில்களில் ஒன்றாகத் தஞ்சாவூர் வடக்கு வீதி, ஸ்ரீராஜகோபால ஸ்வாமி திருக்கோயில் விளங்குகிறது. ஸ்ரீராஜகோபால ஸ்வாமி திருக்கோயிலில் சுதர்சன வல்லி, விஜய வல்லி சமேத சக்கரத்தாழ்வார் மூலவராக அருள் புரிந்து வருகிறார். சக்கரத்தாழ்வாரை முன்னிலைப் படுத்தும் விதமாக இக்கோயில் கட்டப்பட்டுள்ளது.

பொதுவாக சக்கரத்தாழ்வார் பின்புறம் நரசிம்மர் உருவம் இருக்கும். ஆனால் இக்கோயிலில் சக்கரத்தாழ்வார் சுதர்சன வல்லி, விஜயவல்லி சமேதமாக எழுந்தருளி உள்ளதால் சக்கரத்தாழ்வார் பின்புறம் நரசிம்மர் உருவம் இல்லை. அதே நேரத்தில் கிழக்கு ராஜ கோபுரத்தின் பின்புறம் வலது புறத்தில் யோக நரசிம்மரும், இடது புறத்தில் கல்யாண நரசிம்மரும் புடைப்புச் சிற்பமாக கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது என்பது சிறப்பம்சமாகும். இவ்விரு நரசிம்மர்களும் நேர்கொண்ட பார்வையாக சக்கரத்தாழ்வாரை நோக்கிய வண்ணம் உள்ளனர் என்பதே இக்கோயிலின் தனித்தன்மையைக் காட்டும் வகையில் உள்ளது. மூலவர் 16 திருக் கரங்களுடனும், அதுபோன்றே உற்சவர் 16 திருக் கரங்களுடனும் அமையப்பெற்றுள்ளதைக் காணக் கண் கோடி வேண்டும். இதுத்தவிர இக்கோயிலின் உட்புற ஸ்வாமி புறப்பாட்டுக்காக அஷ்டபுஜத்துடன் சக்கரத்தாழ்வார் இருப்பது கூடுதல் சிறப்பு அம்சமாகும். இங்குள்ள சக்கரத்தாழ்வாருக்கு சுதர்சனர், சக்ரபாணி என்ற திருநாமங்களும் உண்டு. நவக்கிரக தோஷம் போக்க வல்லவராக இங்குள்ள சக்கரத்தாழ்வார் திகழ்வதால் பக்தர்கள் இவரை நவக்கிரக தோஷம் போக்கும் சக்கரத்தாழ்வார் என்று அழைக்கிறார்கள்.

கிழக்கு நோக்கிய வண்ணம் கட்டப்பட்டுள்ள ராஜ கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் மற்றொரு சிறிய கோபுரம் காணப்படுகிறது. அந்தக் கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் பலிபீடம், கருடாழ்வார் சன்னதி உள்ளது. கருடாழ்வார் சக்கரத்தாழ்வாரை நோக்கிய வண்ணம் காணப்படுகிறார். கருவறையில் எங்குமே காண இயலாத வகையில் அற்புதமான தோற்றத்துடன் சக்கரத்தாழ்வார் சுதர்சனவல்லி, விஜயவல்லி தாயாருடன் எழுந்தருளியுள்ளார். இக்கோயிலின் தல விருட்சம் அத்தி மரம். இக்கோயிலின் மேற்குப் புறமாக அமையப்பெற்றுள்ள ஒரு மண்டபத்தில் மராட்டியர்களின் வழிபாட்டு தெய்வமான சிவேந்திரர் தேவியருடன் அருள்பாலிக்கிறார். வடக்குப் புறத்தில் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களின் இஷ்ட தெய்வமான ஸ்ரீபகுளாமுகி காளி அம்மன் சன்னதி உள்ளது. ஸ்ரீபகுளாமுகி காளி அம்மனை செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்









கிழமைகளில் வருகின்ற ராகு காலத்தில் தரிசனம் செய்து வழிபட்டால் எண்ணியவை எண்ணியபடி நடைபெறும் என்பது திண்ணம்.

“ஓம் நமோ பகவதே மகா சுதர்ஸனாய நம:” என்ற மந்திரத்தை ஒன்பது முறை சக்கரத்தாழ்வார் சன்னதியில் ஜெபித்தால் நவக்கிரகத் தோஷங்கள் விலகும்.

**நவக்கிரகத்தோஷ வழிபாடு**

பக்தர்கள் நவக்கிரகத் தோஷம் போக்கும் சக்கரத்தாழ்வாரை தொடர்ந்து 9 மாதங்கள் சித்திரை நட்சத்திரம் அன்றும் அல்லது 9 வியாழக் கிழமைகள் அல்லது 9 சனிக்கிழமைகள் 9 அகல் தீபம் ஏற்றி, 9 முறை வலம் வந்து சிவப்பு மலர்களால் மாலை சூட்டி, கற்கண்டு, உலர்ந்த திராட்சைகளை நிவேதனமாகச் சமர்ப்பித்து அர்ச்சனைகள் செய்து வழிபட்டால் நினைத்த நல்ல காரியங்களில் வெற்றி கிட்டும் என்பது இக்கோயிலின் ஐதீகம். முற்பிறவியிலும், இப்பிறவியிலும் உண்டான பாவங்கள், மற்றவர்களால் ஏற்படும் தீங்குகள், தீவினைகள், தோஷங்களால் ஏற்படும் கெடுதிகள் யாவும் நீங்கும். நவக்கிரக தோஷம் போகும். திருமணத் தடைகள் விலகும். கல்வி தொடர்பான தடைகளை நீக்கி சரளமான கல்வி யோகத்தை அருள்வார். மனசஞ்சலம், சித்த பிரமை, பேய்ப் பிசாசு, பில்லி, சூனியம், ஏவல் போன்ற மனம் தொடர்பான பாதிப்புகள் தொந்தரவுகளிலிருந்து விடுபடச் செய்வார்.


குழந்தைகளின் பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்புகளில் ஏற்படும் தடைகள், சிரமங்கள், படிப்பில் ஆர்வமின்மை போன்ற குறைபாட்டை நிவர்த்தி செய்ய வல்லவராக சக்கரத்தாழ்வார் திகழ்கிறார். இவரைத் தொடர்ந்து வழிபட்டு வந்தால் எட்டாத கல்வியும் எளிதினில் கிட்டும். வெளிநாட்டில் கல்வி பயிலும் யோகம் கிட்டும். வாழ்விலும், செய்யும் தொழிலும், வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளிலும், பணி புரியும் இடத்திலும் எதிரிகளால் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏற்படும் அனைத்து விதமான பாதிப்புகளிலிருந்து விடுபட செய்பவர். சக்கரத்தாழ்வாரை ஒரு முறை நேரில் தரிசனம் செய்தால் போதும் எதிரிகளின் தொல்லைகள் இனி இல்லை என்ற நிலை ஏற்படும்.

மனநலம் தொடர்பான சிகிச்சை பெறுபவர்கள் அவசியம் ஒரு முறை அவரவர் ஜென்ம நட்சத்திரம் அன்று சக்கரத்தாழ்வாரை 9 மாதங்கள் வழிபட்டால் மன சஞ்சலங்களிலிருந்து விடுபட்டு மன நிம்மதியைப் பெறலாம். பக்தர்கள் ஒரே நாளில் தஞ்சாவூர் வடக்கு வீதியில் உள்ள நவக்கிரக தோஷம் போக்கும் சக்கரத்தாழ்வாரையும், மேலவீதியில் உள்ள சனி தோஷம் போக்கும் மூலை அனுமனையும் தரிசனம் செய்தால் இரட்டிப்பு பலன்களைப் பெறலாம் என்பது உள்ளூர் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்து வருகிறது. மாதந்தோறும் சித்திரை நட்சத்திரம் அன்று காலை சக்கரத்தாழ்வாருக்கு சிறப்பு திருமஞ்சனமும், மாலை சிறப்புப் பரிகார அர்ச்சனையும் நடைபெற்று வருகின்றன.

கோயில் அமைந்துள்ள இடம் : தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் அரை கிலோ மீட்டர் தொலைவிலும், தஞ்சாவூர் பெரிய கோயிலில் இருந்து முக்கால் கிலோ மீட்டர் தொலைவிலும் இத்திருக்கோயில் அமைந்து உள்ளது.



**– திரு.இரா. சுரேஷ்,**
**தஞ்சாவூர்.**





# ஆகஸ்ட் 2024
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். தொழில் துறையில் எதிர் பார்த்த லாபம் கிடைப்பதில் தாமதம் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். திருஷ்டி யினால் உடல் வலிகள் உண்டாகும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். குழந்தை பாக்கியம் உண்டாகும். நல்ல தொழில் வளர்ச்சிக்கான மாதமிது.

**ரிஷபம்**

ஆரோக்யத்தில் கவனம் தேவை. தொழில் துறையில் வேலைப்பளு அதிகரிக்கும். புதிய தொழில் முயற்சிகள் வேண்டாம். நண்பர்கள், உறவினர்கள் உதவி கிடைக்கும். கடன் கொடுப்பதையும், கடன் வாங்குவதையும் முற்றிலுமாகத் தவிர்ப்பது நலம். மாணவர்கள் கடும் முயற்சியின் மூலமாகவே நல்ல மதிப்பெண்கள் பெறுவர். கடுமையாக உழைத்துக் குறைந்த லாபம் பெறும் மாதமிது.

**மிதுனம்**

தந்தையின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மனைவியின் ஆரோக்யத்திற்காக அதிகச் செலவுகள் ஆகும். கணவன்-மனைவிக்குள் அடிக்கடி கருத்து வேற்றுமைகள் உருவாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைப்பதில் தாமதமாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறக் கடுமையாக உழைக்க வேண்டும். நன்மையும் தீமையும் கலந்த மாதமிது.

**கடகம்**

தொழில் துறையில் முதல் முயற்சியில் தடையும் இரண்டாவது முயற்சியில் வெற்றியும் உண்டாகும். மனைவியின் ஆரோக்யத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்குள் அடிக்கடி சிறு கருத்து வேற்றுமை கள் உண்டாகும். மூட்டு வலிகள் உண்டாகும். மாணவர்கள் படிப்பில் மிகுந்த அக்கறை தேவை. சிரமம் இருந்தாலும் வெற்றியை கொடுக்கும் மாதமிது.

**சிம்மம்**

தொழில் துறையில் நல்ல மாற்றம் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். மாதத்தின் முன் பாதியில் அதிகச் செலவும், செலவுக்கு ஏற்ற வருமானமும் கிடைக்கும். கணவன்- மனைவிக்குள் சிறு கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். முடிந்த வரை விவாதங்களைத் தவிர்ப்பது நலம். கடும் முயற்சியின் பேரில் மட்டுமே முன்னேறும் மாதமிது.

**கன்னி**

வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. கடுமையாக முயற்சி செய்தால் பாக்கிகள் வசூலாகும். தேவைக்கேற்ற வருமானம் கிடைக்கும். உங்கள் பிறந்த ஜாதகத்தில் உள்ள தோஷங்களுக்கு பரிகாரம் செய்ய வேண்டிய மாதமிது. உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். சகல துறைகளிலும் வெற்றி பெறும் மாதமிது.

**துலாம்**

குடும்ப ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. தற்சமயம் பூர்வ சொத்துக்கள் பற்றி பேசாமல் இருப்பது நலம். கொடுக்கல்-வாங்கலில் மிகுந்த எச்சரிக்கை தேவை. உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் உண்டாகும். செலவினங்கள் அதிகமாகும். வேலைப்பளு காரணமாகத் தூக்கம் குறையும். மொத்தத்தில் சிறிது சிரமத்துடன் முன்னேறும் காலமிது.

**விருச்சிகம்**

தெய்வ பலத்தினால் தொழில் வளர்ச்சி நன்றாக அமையும். புதிதாக வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. நண்பர்கள், உறவினர்களால் சிறிது பிரச்சனை ஏற்படும். தாயின் ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. மாணவர்கள் கடுமையாக உழைத்து நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். பொதுவாக, தெய்வ பலத்தினால் முன்னேறும் மாதமிது.

**தனுசு**

தொழில் துறையில் போட்டி, அலைச்சல், வேலைப் பளு அதிகமாகும். கடன் வாங்கி வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. சகோதரர், தந்தை ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தாயின் ஆரோக் கியம் மேம்படும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். குலதெய்வ வழிபாட்டின் வாயிலாக நன்மைகள் பெறுவர்.

**மகரம்**

தொழிலில் வேலைப்பளு அதிகமாகும். பணியாளர்க ளால் சிறு பிரச்சனை ஏற்பட்டு பின் சரியாகும். ஆரோக்யத்தில் அக்கறை தேவை. குழந்தைக ளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. பெற்றோரின் ஆரோக் யம் நன்றாக இருக்கும். புதிய முயற்சிகள் வெற்றி தரும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். பூர்வீக சொத்துக்கள் கிட்டும். நல்ல முன்னேற்றம் தரும் மாதமிது.

**கும்பம்**

பேச்சில் கோபத்தைத் தவிர்க்கவும். சகோதரர்க ளுக்கு நன்மையுண்டு. கணவன்-மனைவிக்குள் நல்லுறவு உண்டு. புதிய முயற்சிகள் வெற்றி தரும். வெளியூர் அல்லது வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. தெய்வ பிரார்த்தனைகள் வெற்றி பெறும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நன்கு உழைத்து முன்னேறும் மாதமிது.

**மீனம்**

செலவினங்கள் அதிகமானாலும் அதற்கேற்ற வருமானம் கிட்டும். தொழில் துறையில் நல்ல வளர்ச்சி, வெற்றி உண்டு. உடன்பிறப்பினால் நன்மையுண்டு. குடும்ப உறுப்பினர்களுக்கு நன்மையுண்டு. குழந்தைகளின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மாண வர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். மனைவியின் ஆரோக்ய குறைபாடுகள் தீரும். நல்ல யோகமும், முன் னேற்றமும் தரும் மாதமிது.



நீதிக்கதை

# உயிரைக் காத்த துளசி

திரு. அசோக்ராஜா, அரவகுறிச்சிப்பட்டி.

ஏழை ஒருவன், தினமும் அதிகாலையில் எழுந்து தனக்குச் சொந்தமான வயற்காட்டுக்குச் சென்று, கீரை வகைகளைப் பறித்து, அதைச் சந்தையில் விற்று, அதில் வரும் சொற்ப வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்திக் கொண்டிருந்தான்.

வயற்காட்டுக்கு போகும் வழியில், ஒரு குடிலில் முனிவர் ஒருவர், சிறு பெருமாள் விக்கிரகத்தை வைத்து, துளசி இலையால் பூஜைகள் செய்வதைப் பார்த்துக் கொண்டே போவான். ஒரு நாள் அதே போல் முனிவர் பெருமாளுக்குத் துளசியை வைத்து பூஜை செய்வதைப் பார்த்துக் கொண்டே வயற்காட்டுக்குச் சென்றான். கீரைகளைப் பறிக்கும் போது, அதன் அருகே சில துளசிச் செடிகள் வளர்ந்திருப்பதைக் கண்டான்.

அப்போது அவனுக்கு, அந்த முனிவர் தினமும் பெருமாளுக்கு பூஜை செய்யும் துளசி இலை நினைவிற்கு வந்தது. உடனே "நாமும், அந்த முனிவரைப் போன்று ஒரு மனிதப் பிறவிதானே! இதுவரை என்றாவது பெருமாளுக்கு ஒரு சிறு பூஜை செய்திருக்கிறோமா? சரி! நம்மால் தான் பெருமாள் விக்கிரகத்திற்கு பூஜை செய்ய முடியவில்லை. இன்று முதல், இந்த துளசியையாவது பறித்துச் சென்று அந்த முனிவர் செய்யும் பூஜைக்கு அர்ச்சனையாகக் கொடுப்போமே! என்று எண்ணியபடி செடியில் இருந்து துளசியையும் சேர்த்துப் பறித்து, கீரைக் கட்டோடு ஒன்றாகப் போட்டு, தலை மீது வைத்துக்கொண்டு முனிவரின் இல்லம் நோக்கி நடந்தான்.

ஆனால், அவன் பறித்துப் போட்ட கீரைக்கட்டில், ஒரு சிறு நாகம் இருந்ததை அவன் கவனிக்க வில்லை.

முனிவரின் இல்லத்து முன் வந்து நின்றான் ஏழை விவசாயி. முனிவர் ஏழையைப் பார்த்தார். அதே சமயம், அவன் பின்னே, அருவமாய் யாரோ ஒருவர் நிற்பதைக் கண்டார். தன் கண்ணை மூடி, ஞான திருஷ்டியில் அவர் யார் என்று அறிய முயன்று பார்த்ததில், அந்த ஏழையின் பின்னே நிழல் போல் நிற்பது கிரகங்களில் நாகத்தின் அம்சத்தில் ஒருவரான ராகு பகவான் என்பது தெரிந்தது.

முனிவர் உடனே ஏழையிடம், "அப்பா! உன் தலையில் உள்ள கீரைக் கட்டை அப்படியே வைத்திரு. ஒரு ஐந்து நிமிடம் அதைக் கீழே இறக்க வேண்டாம். இதோ வந்து விடுகிறேன்!" என்று கூறி விட்டு, குடிலின் பின்னே ராகு பகவானை அழைத்தார்.




சிக்யோத்ஸவம் என்றால் உரியடி உத்ஸவம். இது கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு கொண்டாடப்படும் ஒரு விழாவாகும். கிருஷ்ண ஜெயந்தி அன்று திருமலையில் தனித்தனியே திருமலையப்ப ஸ்வாமியும் ஸ்ரீ பால கிருஷ்ணரும் பல்லக்கில் திருவீதி உலா வருவர். சிறுவர்கள் உற்சாகத்துடன் கோயில் வாயிலில் கட்டியுள்ள உரியடி விழாவில் கலந்து கொண்டு உரியடித்து மகிழ்வர். ஸ்ரீகிருஷ்ணர் வெண்ணையைப் பானையிலிருந்து எடுத்ததை நினைவு கூறும் விதமாக இவ்விழா அமைகிறது.

28-08-2024, செவ்வாய் கிழமை

திருமலையப்ப ஸ்வாமி சன்னதியில் சிக்யோத்ஸவம்.

29-08-2024, வியாழக்கிழமை

திருப்பதி ஸ்ரீகோதண்டராமஸ்வாமி சன்னதியில் சிக்யோத்ஸவம்.

30-08-2024, வெள்ளிக்கிழமை

திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி சிறிய வீதி சிக்யோத்ஸவம்.

31-08-2024, சனிக்கிழமை

திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பெரிய வீதி சிக்யோத்ஸவம்.

ராகு பகவானும் ஆச்சரியத்துடன் முனிவர் முன்னே வந்து நின்று வணங்கி, “சுவாமி! என்னைத் தாங்கள் அழைத்ததன் காரணம் என்ன?” என்று கேட்டார்.

முனிவரும் ராகுவை வணங்கி, “ராகுவே! எதற்காக இந்த ஏழையைப் பின்தொடர்ந்து வருகிறாய்? என்ன காரணம் என்று நான் அறியலாமா?” என்று கேட்டார்.

அதற்கு ராகு “சுவாமி! இந்த ஏழையை இன்று நான் ஒரு சிறு கருநாக உருவெடுத்து தீண்ட வேண்டும் என்பது, இவனுக்கு எழுதப்பட்ட கிரக விதி. ஆனால் இவன் என்றும் இல்லாத அதிசயமாக, இன்று பகவானின் பிரியமான துளசியைத் தன் தலையில் சுமந்து வருவதால், இவனை என்னால் தீண்ட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன். இவன் தலையில் சுமந்திருக்கும் துளசியை உங்களிடம் கொடுத்த அடுத்த கணமே, அவனைத் தீண்டி விட்டு என் கடமையை முடித்துக் கொண்டு நான் கிளம்பிச் சென்று விடுவேன்” என்றார் .

முனிவருக்கு ஏழை மேல் பரிதாபம் ஏற்பட்டது. எவ்வளவு ஆசையாக நம் பூஜைக்காக துளசியைப் பறித்துக் கொண்டு வந்துள்ளான். அவனைக் காப்பாற்ற முயற்சிக்க வேண்டும் என்றெண்ணினார். “ராகுவே! அவனை நீ தீண்டாமல் இருக்க ஏதேனும் பரிகாரம் உள்ளதா?” என்றார்.

ராகுவோ, “சுவாமி! இத்தனைக் காலம் தேவரீர் பகவத் ஆராதனம் செய்த புண்ணியத்தின் பலனை அந்த ஏழைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தால், அவனது சர்ப்ப தோஷம் நீங்கப் பெறுவான். அதனால் நான் அவனைத் தீண்டாமல் சென்று விடுவேன்!” என்றார். (அவர்கள் இருவரின் உரையாடல்கள் அந்த ஏழை அறியாத வண்ணம் நடந்து கொண்டிருந்தது).

முனிவரும் அகமகிழ்ந்து, “அவ்வளவுதானே! இதோ... இப்பொழுதே நான் இதுவரை பெருமாளுக்கு ஆராதனை செய்ததற்கானப் பலன் என ஏதும் இருந்தால், அது முழுவதையும் அந்த ஏழைக்குத் தாரை வார்த்துத் தருகிறேன்!” என்று கூறி, ஏழைக்குத் தன் ஆராதனை பலனைத் தாரை வார்த்துக் கொடுக்க, ராகு பகவானும் முனிவரின் தர்ம குணத்தை எண்ணி மகிழ்ந்து, மறைந்து போனார்.

அப்பொழுது அந்த ஏழையிடம் வந்து, “அப்பா! இனி நீ தினமும் என் பூஜைக்கு துளசி பறித்து வர வேண்டும். சரியா?” என்றார்.

ஏழைக்கு, மிகுந்த மகிழ்ச்சி! “நம்மால் பெருமாளுக்கு பூஜை செய்ய முடியாவிட்டாலும், முனிவர் மூலம் இப்படி ஒரு கொடுப்பினை கிடைக்கிறதே! என்று நினைத்து மகிழ்ந்து கொண்டே தன் குடிசையை நோக்கிச் சென்றான்.

வைகுந்தவாசன் நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம் ஆழ்ந்த பக்தியே! பக்தியோடு சிறு துளசி இலையைக் கொடுத்தாலும், அதைப் பரவசமாய் அவன் ஏற்பான். எனவே பகவத் ஆராதனம் தினமும் செய்யுங்கள். மிகுந்த நன்மை அடையுங்கள்.

சிறுவர் உலகம்


# பல்சுவை பகுதி

## சித்திரப் பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



படத்தைப் பாருங்கள் !




வண்ணம் தீட்டுங்கள் !!

*மேலே குறிப்பிட்ட பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்குப் பொருத்தமான சித்திரங்களுக்குரிய வட்டத்தில் அந்தந்த எண்களை எழுதுங்கள்*



1) ஸ்ரீகிருஷ்ணருடன் தொடர்புடையவை
2) ஸ்ரீலக்ஷ்மி கடாக்ஷத்திற்கு தொடர்புடையவை
3) ரக்ஷாபந்தனத்திற்கு தொடர்புடையவை



## சரியான பாதையைக் கண்டுபிடி

தமையனிடம் சென்று ரகைஷியைக் கட்ட தமக்கைக்கு வழிகாட்டி உதவுங்கள் கணித விடைகள் 7 என்ற எண்ணிக்கையில் வரும் கட்டங்களை மட்டும் இணைத்து பாதையைக் காட்டுங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 +2 | 9 −2 | 19 −12 | 8 −2 | 13 +5 | 14 −7 | 2 +5 | 8 −3 |
| 10 −5 | 2 +3 | 10 −3 | 12 −5 | 4 +3 | 22 −15 | 18 −11 | 19 −2 |
| 16 +4 | 15 −2 | 18 −9 | 10 −5 | 15 −8 | 6 +1 | 1 +6 | 19 −2 |
| 15 +2 | 27 −2 | 8 +3 | 13 +2 | 13 −6 | 25 −18 | 19 −12 | 0 +7 |

## வார்த்தைகளைச் சரியாக எழுதி ஔவை அருளிய "ஆத்திசூடி"யைப் படிப்போமா!

அகற்று கீழ்மை, கைவிடேல் குணமது, பிறியேல் கூடிப், ஒழி கெடுப்பது, முழல் கேள்வி, கரவேல் கைவினை.

'ஞாஒுபஊ மஶஶ்ருஊஶ
'ஞசிரி ருஶஃஊஓ 'ஸ்ரீஞ் ஷோாஂஒுஊ
'ஞாஓுஶ்ரு ரஃஷ 'ஞ௭ஓருஊஶ
ஷொமூஊ 'யிஃஊஓு எஶரிஂஊ

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-25

## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. அஞ்சு குடிக்கு ஒரு சந்ததியாய் அவதரித்தவள்..............................
2. ஸ்ரீஹயக்ரீவப் பெருமான் மீது ஸ்தோத்திரம் அருளிய ஆசாரியர் ..............................
3. சந்தனு மன்னனுக்கு கங்கையின் மூலம் பிறந்தவர் ..............................
4. யாமுனாசாரியர் என்று அழைக்கப்படுபவர்..............................
5. பாற்கடலைக் கடைய மத்தாகப் பயன்பட்ட மலை ..............................
6. ஆவணி மாதத்தில் வருகின்ற வெள்ளிக்கிழமையன்று பெண்கள் கடைபிடிப்பது......... ..............................
7. ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த மாதம், நட்சத்திரம் ..............................
8. திருப்பவளவண்ணன் திவ்ய தேசத்தில் உள்ள தீர்த்தம் ..............................
9. பாண்டு மன்னனால் கொல்லப்பட்ட முனிவர் ..............................
10. ஈயா மனிதரை ஏன் படைத்தாய் என்று கூறியவர் ..............................
11. சக்கரத்தாழ்வாரின் பின்புறம் இருந்து அருள்பவர்..............................
12. கருவில் இருந்த அபிமன்யுவின் சிசுவைக் கொல்ல முயன்றவன் ..............................
13. பிள்ளைப்பேற்றிற்காக தசரதன் செய்த யாகம்..............................
14. ஸ்ரீஹயக்ரீவ மத்தி எனும் பிரசாதம் செய்து ஹயக்ரீவருக்கு அளித்த தாசர் ..............................
15. குசேலனின் வறுமையைப் போக்கியவர் ..............................

## போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.08.2024.




| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**



**சக்கரத்தைச் சுற்றுங்கள்!**






**அதே வண்ணக்கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!**



**விடைகள்**

1) யசோதை, 2) கம்சன், 3)சிறைச்சாலை, 4) யமுனை,
5) பிருந்தாவனம், 6)புல்லாங்குழல், 7) அவல், 8) ஸ்ரீகிருஷ்ண பகவான்.

**படத்தைப் பார்ப்போம்! பெயரைக் கண்டுபிடிப்போம்!!**







**விடைகள்**

1) பாலன்+முரளி = பாலமுரளி
2) பத்மம்+வதி = பத்மாவதி





**நீதியை அறிவோம்!**

*சித்திரத்தை வரிசைப்படுத்துங்கள். கதையை அறிந்துக் கொண்டு கதை உணர்த்தும் நீதியை அறிந்துக்கொள்ளுங்கள்!*

**உரு கண்டு எள்ளாதே!**





# முன்னோக்கு பார்வை மிக அவசியம்

**சித்திரக் கதை**

கதை மூலம் :டாக்டர் கே.ரவிச்சந்திரன்
சித்திரம் :திரு. து.சிவாஜி




தசரதா! யாரிடம் பேசுகின்றாய் என்பதை அறிந்து பேசு. என்னைப் பற்றி தெரியுமல்லவா! என் கடமைக்குத் தடை ஏற்படுத்தினால் பிரளயமே...
தேவா அமைதியுறுங்கள். தாங்கள் ரோகிணி நட்சத்திர மண்டலத்திற்குள் நுழைந்தால் எங்களுக்கு இன்னலே அதிகம். தயவு செய்து வந்த வழியே திரும்பிச் சென்றிடுங்கள்.
ஹ...ஹ...ஹ...! பின்னோக்கிச் செல்வதா? எனக்கு முன்னோக்கிச் செல்ல மட்டுமே தெரியும். தடையை விலக்கு...
ஸ்வாமி தங்களை வேண்டிக் கொள்கிறேன். தங்களின் மனது மாறவில்லையெனில் எதிர்ப்பது ஒன்றே வழி.
ஹ...ஹ...ஹ...! சாதாரண மானிடனான நீ இந்த கிரக தேவனையே எதிர்ப்பாயா?
தசரதன் ஆயுதம் பிரயோகிக்கத் துவங்கினான்.
பூலோக வாசிகளின் உயிரைக் காத்திட இது ஒன்றே வழி.
தசரதா நில்! ஆயுதத்தைத் திரும்பப் பெறு. உன் கோரிக்கையை நான் ஏற்கிறேன். உன்னுடைய நேர்மையைப் பரிசோதிக்கவே உன் கோரிக்கையை முதலில் நிராகரித்தேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்.
சனி பகவானே! பேறு பெற்றேன். இன்று முதல் தாங்கள் எப்பொழுதும் ரோகிணி நட்சத்திர மண்டலத்திற்குள் நுழைதல் கூடாது.
அப்படியே தசரதா! இனிமேல் ரோகிணி நட்சத்திர மண்டலத்திற்குள் நான் நுழையவே மாட்டேன்.
தசரதன் இரு கரங்களையும் கூப்பியபடி சனி பகவானை ஸ்தோத்திரங்களால் துதிக்கலானான்.
தசரதா! இந்த ஸ்தோத்திரம் இனி “தஷ்ரத் க்ருத சனி ஸ்தோத்திரம்” என்றழைக்கப்படும். பக்தியோடு இந்த ஸ்தோத்திரத்தைத் துதிப்போருக்கு கிரக பீடையே உண்டாகாது.
பெரும் பேறு பெற்றேன் ஸ்வாமி!
சுபம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2.தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ஆங்கிலம் ☐சமஸ்க்ருதம்

3.வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ரூ.2,400/-(12 வருடங்கள்)

4.சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5.செலுத்திய தொகை :

6.செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்சென்டர்

### உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

# பக்தர்களின் சேவையில் தி.தி.தே. செயலாட்சித்தலைவர்...



திருவேங்கடமுடையானின் தரிசனத்திற்காக திருமலைக்கு வருகை தரும் பக்தர்களுக்கு சரியான வசதிகள் உள்ளதா என நாராயணகிரியில் உள்ள கொட்டகைகளையும், நாராயணகிரி நந்தவனத்தில் உள்ள கியூ வரிசையினையும் தணிக்கைச் செய்யும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்களுடன் இணைச்செயலாட்சித்தலைவர் திருமதி எம்.கௌதமி ஐ.ஏ.எஸ். (கல்வி மற்றும் சுகாதாரம்), இணைச்செயலாட்சித்தலைவர் திரு.வி.வீரபிரம்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள்



பக்தர்கள் விரும்பிப் பெற்றிடும் ஸ்வாமி லட்டு பிரசாதம் தயார் செய்யப்படும் மடைப்பள்ளியைத் தணிக்கைச் செய்யும் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்களுடன் இணைச்செயலாட்சித்தலைவர் திருமதி எம்.கௌதமி ஐ.ஏ.எஸ். (கல்வி மற்றும் சுகாதாரம்) அவர்கள்



திருமலைக்கு வருகை தரும் பக்தர்களுக்கு சுவையான அன்னப்பிரசாதத்தினை வழங்கிட வேண்டி தரிகொண்ட வெங்மாம்பா அன்னதானக் கூடத்தைத் தணிக்கைச் செய்யும் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்களுடன் இணைச் செயலாட்சித் தலைவர் திரு.வி.வீரபிரம்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள்

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-07-2024 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

